அறச்செல்வியார்

T. பதுமாவதி அம்மாள்

மாடல் பப்ளிகேஷன்ஸ்,
50, பத்ரய்யன் தெரு,
சென்னை.

[விலை 0-14-0

முன்னுரை

பண்டு நம் தமிழ் நாட்டில் வீரம், புலமை, பெருந்தகைமை, அறம் இவற்றுள் உயர் நிலை பெற்று விளங்கிய பெண்மணிகள் பலர் வாழ்ந்து வந்தனர் என்பது அறிஞர் அறிந்ததே! அவருள் ஒருவரே நம் அறச்செல்வியாராகிய மணிமேகலை யார். இவர் வாழ்க்கை இயல்பையும், மனப்போக் கையும், தொண்டின் தூய்மையையும் இந்நூல் தெள்ளிதின் பகராநிற்கின்றது. இதனுல் ஏறக் குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பெண்களுள் ஒரு பகுதியினர் இழிதொழிலிற் கென்று ஒதுக்கப்பட்டிருந்தனர் என அறிகின் ரேம். இது தன்னலங் கருதிய சிலரால் ஏற்பட்ட இன்னலாகும். இஃது எத்துணைக் கொடுமை வாய்ந் தது! நம் நாட்டில் இன்னும் இவ்வின்னல் ஒழிந்த பாடில்லை. இத்தீயச் செயலினுல் ஒதுக்கப்பட்ட மங்கையர், பல துன்பங்களுக்காளாதல் மட்டுமே யன்றி, நற்குல மங்கையரையும், அவர்தம் இளங் குழவிகளையும் அளவிறந்த இடுக்கண்களுக் குள்ளாக்குகின்றனர். நம் நாட்டை அழிக்கும் நச்சுப் பூண்டுகள் சிலவற்றுள் இஃதும் ஒன்று. இக் கொடிய செயல் என்றுதான் நம் நாட்டைவிட்டு ஒழியுமோ அறியோம்!

தூய பண்பு வாய்ந்த நம் மணிமேகலையார் பன் னூற்று ஆண்டுகளுக்கு முன்பே, இச்செயலின் இழிவையும், தீமையையும் எங்ஙனம் அலைத்து

அலைத்துக் கூறுகின்றார். இவர் மேற்கொண்டது இஃதொன்றை மட்டுமோ, இவர், தம் குலத்தினருக்கு நல்லறிவு கொளுத்தலாகிய சமூகத்தொண்டையும், காணார், கேளார், கான்முடப்பட்டோர் முதலியவரைக் கூவிக் கூவி உணவளித்து அவர் தம் இன்முகங் கண்டுகளிக்கும் அறத்தொண்டையும், பல மதவாதிகளின் கொள்கைகளை ஆய்ந்தறியும் சமயத்தொண்டையும் மிக்க சீர்மையுடன் புரியாநின்றனர். பெண்மையின் பெட்பு இவரிடம் அடிமை பூண்டிருந்ததென்பது மிகையாகாது.

சமூகத்தொண்டு அறத்தொண்டு முதலியவைகளுக்குச் சிறப்பிடங்களைக் கொடுத்துள்ள தற்காலத்தில் நம் அறச்செல்வியாரின் தொண்டின் போக்கை அறிதல் எத்துணை இன்றியமையாததாகும். இச்செயல், மாணவருலகத்திற்கு நல்லறிவு சுடர் கொளுத்தி, மன ஊக்கத்தையும் பொதுப்பணியில் விருப்பையும் விளைக்குமென நினைக்கிறேன். இக்காலத்திற் கேற்ற நல னளிக்கும் இந்நூலின், பயனையும் இன்பத்தையும் மாணவருலகம் துய்க்குமாறு அறிஞர் வழி கோலுவது மட்டுமேயன்றி, இந்நூலாசிரியராகிய என் தங்கை ஸ்ரீமதி T. பதுமாவதி அம்மையாரை இத்துணைப் பணிகளில் ஊக்குமாறு கோருகிறேன்.

S. கிருஷ்ணவேணி.

பொருளடக்கம்

அறச் செல்வியார்

காவிரிப்பூம்பட்டினம்

சான்றோர் கூட்டுறவிற்கும், நற்பண்புகளுக்கும் நிலைக்களனாய் விளங்கும் தமிழ் நாட்டில், காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்தில் ஒரு துறைமுகம் உண்டு. அதற்குக் காவிரிப்பூம் பட்டினம் எனப் பெயரமைந்தது. அது சோழ நாட்டிற்குத் தலைநகராய் விளங்கிற்று. ஆதிரை, மருதி, கண்ணகி, வந்தி, கவுந்தி முதலிய உயரிய மகளிரை ஈன்று உலகிற்குதவிய பெருமை அப்பட்டினத்திற்கே உண்டு. நம் தமிழ் நாட்டு மங்கையரைப் பேசப் புகுங்கால், பெரும்பான்மையும் காவிரிப்பூம் பட்டினமே முன்னணியில் வந்து நிற்கும். அன்றியும் வீர அரசர் பலர் அப்பட்டினத்தை அணி செய்தனர். வணிகத்தில் முதன்மை யுற்றதும் அதுவே. வணிகத்திற் சிறந்த நாடுகள் யாவும் செல்வப் பெருக்கில் திளைத்திருத்தல் கண்கூடு.

அப்பட்டினத்தில் உறையும் மக்களின் செப்பமுடைய (நடுநிலை) வணிகமே அவர்களுக்குச் செல்வப் பெருக்கைத் தந்தது. அச்செல்வம் அழியாது பல தலைமுறைகளுக்கும் நிலைபெற்று நின்றது.

"செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து" திருக்குறள்

நல்வழியில் திரட்டிய அப்பொருள் அறனையும் இன்பத்தையும் அவர்களுக்கு அளித்தது. வறுமையும்,

இரத்தலும், பொருள்முட்டுப்பாடும், பிணியும் ஆங்குத் தலை காட்டில. தம் பொருளைப் போன்றே பிறர் பொருளையும் பேணும் பெருமிதம் அவர்கள் மனத்திற்கு மகிழ்வை ஊட்டிற்று. யாவர் நெஞ்சி லும் முகத்திலும் இன்பமே தவழ்ந்தது. அவண் ஒற்றுமை ஊன்றி இருந்தது. மானிடர் கடவுள் அன்பில் கலந்து நின்றனர். இதற்குப் புகார் என்ற வேறொரு பெயரும் அமைந்திருந்தது. செவ்விய வணிகம் ஊன்றிய ஒற்றுமை, இன்பப் பெருக்கு முதலியவற்றில் காவிரிப்பூம்பட்டினத்தாரைப் புக ழாதார் இலர். பிற நாட்டினர் யாவருக்கும் அம் மக்களிடம் மதிப்பும், நம்பிக்கையும் ஏற்பட்டிருந் தன.

கோவலன் மாதவியின்பாற் பட்டது

அந்நாட்டின்கண் வாழ்ந்த வணிகரில், இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என முப்பிரிவுக ளுண்டு. பெருங்குடியர் மரபில் மாசாத்துவான் என்பவன் தலை சிறந்து நின்றனன். செல்வம் மட்டுமேயன்றி நற்பண்புகள் பலவும் அவனிடம் அமைந்திருந்தன. அவன் இல்லறத்தை அழகு படுத்த ஓர் இளைஞன் தோன்றினன். அவ்விளைஞ னுக்குக் கோவலன் எனப் பெயரிடப்பட்டது. அம் மகனும் தந்தையைப் போன்றே மாண்புற்றிருந் தான். செல்வத்தில் திளைத்திருந்த அம்மகனிடம் செம்மையும் நற்குணமும் சேர்ந்திருந்தன. கண் டோர் யாவரும் நற்புதல்வனெனவே அவனைக் கொண்டாடினர்.

அக்காவிரிப்பூம்பட்டினத்தில், செல்வத்திலும், குணத்திலும், கீர்த்தியிலும் மிக்க மாநாயகன் என் பான் ஒருவன் வாழ்ந்துவந்தான். அவனும் பெருங் குடியர் மரபைச் சார்ந்தவனே. அம்மாநாயகன், எல்லாவகையிலும் மாசாத்துவானுக்கு ஒப்பு என் னும் வதந்தி ஒன்று அப்பட்டினத்தில் உலவி வந் தது. அவனுக்கு எல்லா நல்லமைப்புகளும் அழகும் அமைந்த பெண் மகவு ஒன்று தோன்றிற்று. அக் குழவியின் பிள்ளைத் திருநாமம் கண்ணகி. அச் சிறுமியின் அறிவொழுக்கங்கள் ஆன்றோர் மனத்தை ஆநந்திக்கச் செய்தன. அவள் இளமைப் பருவம், மிக்க இனிமையுடன் கழிந்தது.

அக்கற்பிற் சிறந்த கண்ணகியை மணம் பேச வந்தவர் பற்பலராவர். முடிவில் அவர் கோவல

னுக்கு வாழ்க்கைப்பட நேர்ந்தது. அத்தம்பதி களின் ஒத்த அழகும், ஒத்த வயதும், ஒத்த அறி வும், ஒத்த பண்பும், இல்லறத்தை இந்திரபோக மெனத் திகழச் செய்தன. அவ்விருவரும் ஈருடலும் ஓருயிருமென வாழ்ந்தனர். அவர்தம் ஒற்றுமை உலகத்தாரை உவகையில் ஆழ்த்திற்று.

ஒரு குடியில் என்றும் இன்பமே தவழ்ந்து விளையாடல் கடினமன்றோ! உலகம் இன்பமும், துன்பமும் கலந்துள்ள தென்பதைக் கண்டறியா தார் யார்? இம்முறையில் அம்மணமக்கள் இருவ ரையும் தனித்தனியே பிரிக்கும் ஊழ் ஒன்று உறுதியுடன் கிளம்பி, அவர்தம் இல்லில் நுழைந் தது. அவ்விருவரும் சிறிதும் மன வேறுபாடின்றி வாழ்ந்திருந்தும், அவ்வூழ் தன் தொழிலைச் செய்வ தில் பின்வாங்கவில்லை; அது மாதவியின் பண் இனிமையையும், ஆடல் பாடல் திறமையையும், அழகமைப்பையுமே கருவிகளாகக் கொண்டது எனத்தான் கூறல் வேண்டும்.

அம்மாதவி காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு கணிகையர் வகுப்பைச் சார்ந்தவள். அவள் தாய் சித்திராபதி; அவள் தன் மரபொழுக்கத்தில் ஊன்றிய பற்றுடையவள். சான்றோர் வெறுக்கும் கணிகையர் குலத்தின் இழிவு அவள் நெஞ்சில் என்றும் தாக்கியதில்லை. அதை ஆழ்ந்து ஆராயும் கல்வி அறிவைப் பெறும் புண்ணியமும் அவளுக்கு வாய்ந்திலது. அஃதே இன்ப வாழ்வென்பது அவள் எண்ணம். அவளுக்குப் பொருள் நசை பெரிதும் உண்டு. அப்பணப்பேயே அத்தீய ஒழுக்கத்தினின்றும் அவளைக் கரையேற ஒட்டாது

தடுத்தது எனக் கூறல் மிகையாகாது. செல்வப் பொருளன்றி மற்றப் பொருள் ஒன்றும் அவளுக்குப் பொருளாகத் தோன்றிலது. பொருள் பெற்றாரை உறவு கொள்ளலும், பொருளற்றாரை அலக்கழித்துத் தள்ளலும் அவள் கொள்கை. 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' யென்பது அவள் மனத்தில் பசு மரத்தாணி போல் பதிந்திருந்தது. 'அருளற்றார்க்கு அவ்வுலக மில்லை' என்பதை அறிவற்ற அவள் யாங்ஙனம் அறிதல்கூடும்! இஃது அக்குலத்திற்கே அமைந்த ஒரு பரம்பரைக் குணமன்றோ ?

அத்தகைய பரம்பரைப் பண்பைப் பெற்ற சித்திராபதியின் செல்வச் சிறப்பு அவள் மகள் மாதவியைச் சீர்மையுடன் வளர்த்தது. மகளிரை இளமையிலேயே இன்னிசையில் பழக்குவது அம் மரபின் வழக்கம். ஆடல் பாடல்களைக் கலந்து கற்பித்தல் அக்குலக் கொள்கை. அஃதற்றோர் பயனற்றவர் என்பது அவர்தம் எண்ணம். அம் முறைக்கேற்பச் சித்திராபதி தன் மகள் மாதவியின் இசை முன்னேற்றத்திற்காக ஓர் ஆசிரியரை அமைத்தனள். அவரிடம் இன்னிசைப் பாடல்களையும், அதற்கேற்ற பரத நாட்டியத்தையும் கற்பதிலேயே மாதவியின் பெரும்பொழுது கழிந்தது. ஆசிரியரின் கலைப் பெருக்கும், போதனையின் வன்மையும், மாதவியின் நுண்ணறிவும் சேர்ந்து அவளுக்குச் சங்கீதக் கலையை எளிதாக்கின. உயர் கலைகள் பலவற்றுள் ஒன்று சங்கீதம். அதன் உண்மை நுட்பங்களை அறிந்து கற்றல் யாவருக்கும் ஒல்லுவதொன்றன்று. அக்கலைக் கடலில் நீந்திக்

கரை காண்பார் மிகச் சிலரே. அச்சிறந்த வித்தை மாதவிக்கு இளமையிலேயே இயைந்தது. சின்னாட்களில் மாதவி மங்கைப் பருவமடைந்தாள். அழகு அவளிடம் அடிமை கொண்டது. அவள் உடல் ஒளி அவள் அணிந்திருந்த ஆபரணங்களின் பிரகாசத்தைத் தோற்கச் செய்தது. அவள் இன்னிசை ஞானம், இளைஞர் பலரை அவளிடம் இழுத்தது. செல்வத்திற் சிறந்த ஆடவர் பலர் அவளைக் கொள்ள அவாவுற்றனர். இது நிற்க.

அறிஞர், தாமியற்றிய நூலை அரச அவையில் இயம்பி அரங்கேற்றுதலைப் போன்றே, கணிகையரும் தாம் கற்ற ஆடல் பாடல்களை அரசவையில் காட்டிப் பரிசு பெறுதல் அக்கால வழக்கு. அப்பரிசைப் பெரும்பணங் கொடுத்துக் கொள்பவரே, அப்பெண்ணிற்கு முதல் நாயகனாக ஏற்படுவர். அங்ஙனமே மாதவியும் தான் அரிதிற்கற்ற ஆடல் பாடல்களைச் சோழர் அவையிற் சென்று காட்டினாள். அவள் அரிய கலையைக் கண்டு அகமகிழ்ந்த சோழ அரசர் அழகுபட வனைந்த மாலையொன்றை மாதவிக்குப் பரிசாக அளித்தனர். அம்மாலையின் விலை பத்தாயிரம் பொன்னெனச் சித்திராபதியால் வரையறுக்கப்பட்டது. அதைக் கொடுப்பவரே தன் மகள் மாதவியைக் கொள்ளத் தகுந்தவர் எனவும் அவள் தெரிவித்திருந்தனள்.

மாதவியின் ஆடல் பாடல்களைக் காணவந்தவருள் கோவலனும் ஒருவன். அவன் நெஞ்சம் அவள்பாற் சென்றது. பல்வகையில் முயன்றும் சென்ற நெஞ்சத்தைத் தன் வசப்படுத்த அவனால் முடியவில்லை. முடிவில் கோவலன் அவள் அழகிற்

கும், ஆடல் பாடல்களுக்கும் அடிமைப் பட்டனன் என்றே கூறல் வேண்டும். அவனுக்கிருந்த செல்வச் சிறப்பும் அவனுக்குத் துணை புரிந்தது. மாலையின் விலையான பதினுயிரம் பொன்னைத் தர அவன் மனம் பின் வாங்கிலது. தாய், தந்தையரற்ற தனித்த வாழ்க்கை அவனுக்குத் அத்தைரியத்தை அளித்தது! புதிய வெள்ளம் பழைய நீரையும் அடித்துக் கொண்டு போதல் போன்று, புதிய அன்பு பழைய அன்பைப் போக்கிவிட்டது. கற்பின் செல்வி கண்ணகி கோவலன் நெஞ்சாசனத்தை விட்டு விலகினள். அவ்விடத்தில் மாதவியின் அரசு மாண்பு பெற்றது. சித்திராபதியால் ஆவணத் தெருவிற்கு அனுப்பப் பட்டமாலை, கோவலன் ஈந்த பதினுயிரம் பொன் னிற்குப் பண்டமாற்றுச் செய்யப்பட்டது. அன்றே கோவலன் மாதவியின் மாளிகையை அடைந்தான். கோவலனுக்கு, அரிவைக் கண்ணகியின் நினைவு அறவே அற்றது. அவளைப் பற்றிக் கோவலன் ஒரு சிறிதும் கருதிலன். ஆனல் கற்புத்திலகம் கண்ணகி யின் மனமோ, தன் தலைவனை ஒரு விநாடியும் மறந்திலது; அவள் அன்பு கடுகளவும் குறைந்த தில்லை; தன் கணவன் தீய ஒழுக்கத்தைப் பிறரிடம் கூறலும் குற்றமென அவள் நினைத்தாள்; தன் கணவன் விருப்பத்தைத் தடுக்கவும், அவன் இன் பத்திற்கு இன்னலுண்டாக்கவும் அவள் மனம் இசைந்திலது; தான் இன்னலுறினும் தன் கணவன் இன்பமுறுதல் வேண்டும் என்பதே அவள் எண்ணம்; ஆதலின் கண்ணகி தன் துன்பத்தை வெளிக்காட்டாது பொறுமை பூண்டிருந்தாள்.

மாதவியின் மனநிலை

மாதவி கணிகையர் குலத்தில் தோன்றினும் அக்குலக் கொடுமைகள் அவளை அடிமைப் படுத்தில. தன் தாய் சித்திராபதியின் செய்கைகளில் அவள் சிந்தை சென்றிலது. அவற்றைப் பெரிதும் வெறுத்தாள் எனவே கூறுதல் வேண்டும். சுற்றத்தார் இயற்றும் சூழ்ச்சிகள் அவளைத் துன்புறுத்தின. நற்குடியிற் பிறந்த நங்கையென அவள் தன் வாழ்க்கையை நடாத்த விழைந்தனள். மாதவியின் உண்மை அன்பு கோவலருக்கு மகிழ்வை ஊட்டியது. கணிகையரின் உள்ளன்பைக் கைவரப் பெறல் கடினமன்றோ! இத்துறையில் கோவலன் பாக்கியவான் என்றே கூறல்வேண்டும். மாதவி குலமகளைப் போன்றே கோவலனுடன் கூடி வாழ்ந்தாள். அவள் உயரிய ஒழுக்கம் சித்திராபதிக்கும், சுற்றத்தாருக்கும் சொல்லொணுக் கோப மூட்டியது! அவர்கள் மாதவியை வெறுத்தார்கள்! பரிகசித்தார்கள்! கண்ட இடங்களிலெல்லாம் கைகொட்டி நகைத்தார்கள்! அவள் தலையைக் கண்ட போதெல்லாம் ஏளன வார்த்தைகளே வழங்கப்பட்டன! "இவள் கோவலனுக்குமணஞ் செய்த மனையாட்டி போலும்! இல்லை இல்லை. கூறையிட்ட குலமகள்! இவள் இங்ஙனம் ஒழுகிக் கொள்வதனலேயே இவள் குலம் உயர்ந்து விடுமோ! ஏதோ தான் குலக்கொடியாய் ஆகிவிட வேண்டுமெனக் கருதுகிருள்! கோவலன் இறந்தால் இவள் உடன்கட்டை யேறுவளோ? கண்ணகிக்கு முன்னே கட்டையேறுபவள் இவளே! இன்றேல் அவனுக்குப் பின்பு, இவள் இன்ப வாழ்க்கையையே விரும்பமாட்டாள்! அவ்விநாடியே

இவள் மேற்கொள்ளப் போவது துறவுதான்! என்ன நடிப்பு! என்ன நடிப்பு! இங்ஙனம் நடித்தவர் எத்தனைப் பேர்! இந்நடிப்பு எத்தனை நாட்களுக்கு நிற்கும்!" எனப் பலரும் பலவகையாக மாதவியை இழித்துரைத்தனர்.

இவ்விழிவுரைகள் ஒன்றிற்கும் அவள் செவி இடங்கொடுத்திலது. தன் கூட்டத்தினர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவள் வெறுத்தனள். அவர்கள் போலி நடிப்பும், உள் வஞ்சமும் அவள் மனத்தை வாட்டின! ஒருவரைப் பொருளுற்ற போது போற்றலும், பொருளற்றபோது தூற்றலும் அவள் நெஞ்சைப் பிளந்தன! காலம் நேர்ந்துழிச் சிலருக்குப் புத்தியும் புகட்டினள். அது யார் செவியில் ஏறும்? செவிடன் காதில் சங்கோதை போன்று அது பயனற்றது. பல தலைமுறையாகப் பழகி வந்த பழக்கம் திடீரெனப் பறந்து செல்லுதல் கடினமன்றோ! அதற்கும் பெரும் புண்ணியம் வேண்டுமே! தன் முயற்சி நன்மை யளியாததைக் கண்ட மாதவி, வாய் பேசாது வாளாவிருந்தனள். ஆயினும் அவள் மனத்துன்பம் மட்டும் மாய்ந்திலது. "அந்தோ! ஏன் இவர்கள் கபடமற்ற கம்பீர வழியில் நடத்தல் கூடாது! காசு கண்ட இடங்களிலெல்லாம் அன்பு செல்லுமோ! நிலையற்ற செல்வம், சீரிய அன்பைப் பெற்று விடுகின்றதே! பல இடங்களிலும் செல்லும் அன்பு பண்புடையதாமோ! இத்துணை அன்பை மிருகங்களும் விரும்புதல் இல்லை! மாக்களிலும் இழிந்த இவர்கள் மக்களாதல் யாங்ஙனம்? கேவலம் பணத்தையே நாடும் இப்பாவிகளின் பண்பென்னே! பொரு

ளேயே கருதி நிற்கும் இப்பெண்களின் பண்பு மிக்க அழகு! மலரிலுள்ள தேனையுண்டு பின்பு அதனை வெறுத்துச் செல்லும் வண்டிற்கும், மரத்தின் கனி யுண்டு களித்து இலை யுதிர்ந்த அம்மரத்தைத் தனிவிட்டுச் செல்லும் பறவைக்கும் ஏன் இவர்களை ஒப்புப் படுத்தல் கூடாது? பகுத்தறிவைப் பெற்ற மக்களோ இங்ஙனம் செய்தல்! ஏனோ இவர்களுக்கு இத்தன்னலமும் பேராசையும்! இத்தீய வழியில் திரட்டிய பொருள் இறுதிவரையும் இவர்களுக்கு இன்பத்தை அளிக்குமா? நம் வகுப்பினருள் எத் தனைப் பேர் கடைக்காலத்தில் குடிக்கக் கஞ்சியு மின்றிக் கதறுகின்றனர்! இதிலிருந்தேனும் இவர் களுக்கு அறிவு பிறக்கவில்லையே! இவர்கள் தம் மக்களுக்கு ஈட்டி வைப்பன யாவை? தீய ஒழுக்க மும், தீய வழியில் திரட்டிய பொருளுமே யல்லவா? என்ன பொருளாசை! என்ன வஞ்சகம்! என்ன அழுக்காறு! என்ன அஞ்ஞானம்! என்ன தீமை! என்ன இழிவு! சான்றோர் சாபம் எத்தனை! உலக வசை எத்தனை! அந்தோ, இவர்கள் மானிடப் பிறவியின் மாண்பை இழக்கின்றார்களே! இத் துணைக் குற்றங்களில் உழன்று, உழன்று இன்னும் எத்தனைப் பிறவிகளை எடுக்க விரும்புகின் றார்களோ! குலத்தின் பாபம் இவர்களைத் தொடர்ந்து வருகின்றது போலும்! இது யாரிட்ட சாபமோ! இது நீங்குதல் யாங் ஙனம்? ஏனோ யான் இக்குலத்தில் பிறந்தேன்! பல பிறவிகள் தோறும் சேர்ந்துவந்த தீவினையே இதற்குக் காரணமாகும்!" என அடிக்கடிக் கருதுவாள்.

ஆனால் இத்துணை ஆராய்ச்சி தவழப்பெற்ற மாதவியின் மனத்தில், கண்ணகியாரின் துயரம் மட்டும் கருக்கொள்ளவில்லை! இஃதும் ஒரு நன்மைக்கேயாகும்! இன்றேல் தூய மணிமேகலையார் தோன்றல் யாங்ஙனம்? கற்புக் கண்ணகியின் தெய்வத் தன்மை வெளிப்படுதல் எப்படி?

ஆகவே, மாதவி கோவலன்பால் உண்மை அன்புடன் ஒழுகி வந்தனள். ஆவின் இருகோடெனஅவர்கள் அன்பு ஒத்த நிலையில் இருந்தது. அவ்வொத்த அன்பு அவர்கள் ஒழுக்கத்தை உயர்த்திற்று. கேவலம் பொருளைக் கருதிச் செயல்புரியும் தன் குலவழக்கம் மாதவியிடம் குடியேறிற்றிலதேயாயினும், கோவலன் கொணரும் பொருளைக் கொண்டு, தன்னை ஆடை, அணிகளால் அலங்கரித்துக் கொள்ளுதலை அவள் தவிர்த்தாளில்லை! கோவலன் உண்டி உடைகளில் மாதவி பெரிதும் கருத்து செலுத்தியிருந்தாள். அவள் கோவலனுக்குச் செய்த உபசாரம், அவனிடம் நடந்து கொண்ட பணிவு முதலியவற்றில், அவள் மணஞ் செய்த மங்கையர்க்குப் பின் வாங்கியவளாகவில்லை! அவளுக்கு இவ்வருமைக் குணம் அமைந்ததற்குக் காரணம் கணிகை குலத்தின் புண்ணியமோ! கண்ணகியின் கடுந்தவமோ! மணிமேகலையாரின் மாதவமோ! அறியோம்.

இங்ஙனமே சில நாட்கள் கழிந்தன. மாதவியின் மாண்பு, நாளுக்கு நாள் உயர்ந்துகொண்டே

வந்தது. அவள் நற்பண்புகள் எந்த அளவில் உயர்ந்தனவோ அந்த அளவிற்கு வசைகளும் பெருகின: "இவள் மேற்கொண்டிருக்கும் ஒழுக்கம் யாவும் எதற்கு! எல்லாம் செல்வச் சிறப்பு வாய்ந்த கோவலனை மயக்கவே! அவன் பொருள் யாவும் தன்னை வந்து சேர வேண்டாமா? இப்பசப்புக் குணம் இவளிடம் இருக்கும் காரணத்தை நாம் அறியோம் போலும்" எனப் பலரும் இவளைப் பலவாறு இகழ்ந்தனர்.

மணிமேகலையாரின் தோற்றம்

யார் எங்ஙனம் இழித்துக் கூறினும் மாதவி யின் மனம் சிறிதும் திரிந்திலது. அவர் இருவர் ஒற்றுமையும், அன்பும் வளர்பிறை என வளர்ந்து கொண்டே வந்தன. கபடமற்ற காதலும் அவர் களிடம் உறவாடிற்று. ஒருவரை விட்டொருவர் கணமும் பிரிந்திலர். அவர்கள் சொற்கள் செய் கைகள், எண்ணங்கள் யாவற்றிலும் இனிமையே தவழ்ந்து கொண்டிருந்தது. இத்துணை இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த மாதவி கருத்தாங் கினள். தூய சிந்தனை, சீல எண்ணம், இனிய உணவு, தம்பதிகளின் ஒற்றுமை, மனக்குதுகலம் இவை யாவும் ஒருங்கு சேர்ந்து கருவை உயர்ந்த முறையில் உருக்கொள்ளச் செய்தது. சிசுக்கள் அழகிய உடலமைப்புகளையும், நல்லியல்புகளையும் பெறுதற்குத் தாயின் தூய உணவும், நேரிய எண்ணங்களும், உயரிய வாழ்க்கையுமே காரணங் களல்லவா? அது, முதல்கருப்பமாதலின் பல பேர் மாதவிக்குப் பல சிறப்புகளைச் செய்தனர். இம் முறையில் மாதவியின் மனம் எப்போதும் மகிழ்வி லேயே மன்னி இருந்தது! நாம் ஒரு மகவைப் பெறப்போகின்றோம் என்னும் ஆனந்தம் கோவ லரையும் ஆட்கொண்டது. பெண்மகவு தோன்றின் பெரும் பணந்திரட்டலாம் என்னும் உவகையில் சித்திராபதி மூழ்கியிருந்தாள். தாய் தந்தையரின் நல்லெண்ணங்களினால் மகவு கருவிலே திருவுடைய தாய் வளர்ந்தது.

மாதங்கள் பத்தும் கழிந்ததும், நல்லோரையில் ஒரு நற்புதல்வி தோன்றினாள். இக்குழவியின்

அவயவ அமைப்பும், குற்றமற்ற அழகும் கண்டோர் கண்களைக் கவர்ந்தன. இக்குழவியின் அழகு, இனி நம்மைக் கோடீசுவரியாக்கும் என்பது சித்திராபதியின் எண்ணம். இம்மகவின் உடலமைப்பு அயலாரை அழுக்காற்றில் ஆழ்த்திற்று. மாதவியும், கோவலனும் தம் குழந்தையின் நலங்களைக் கண்டு கண்டு மகிழ்ந்தனர்.

இக்குழவியைக் காணுந்தோறும், காணுந்தோறும் சித்திராபதியின் மனம் குதூகுலித்தது. அவ்வகுப்பினரைப் பெரிதும் மகிழ்விப்பது பெண் மகவின் தோற்றமே! அதினும் அழகுபட இருப்பின் அரற்றவே வேண்டாம்! தான் இம்மகளைக் கொண்டு கொடுவழியில் பொருள் திரட்ட நினைக்கும் நினைப்பு வெறும் பித்தென்பதைச் சித்திராபதி அப்போதே எங்ஙனம் உணரக்கூடும்! பின் அடையப் போகும் ஏமாற்றம் அவள் நெஞ்சிற் பட்டிலது! உடலமைப்புகளின் சீர்மையை நன்குணர்ந்த பெரியார் ஒருவர் அவண் இருந்திருப்பரேல் இவ்வம்மையாரின் இயல்புகளை அன்றே தெளிவாக அறைந்திருப்பார்! அங்ஙனம் ஒருவர் இல்லாதது பெரிதும் வருந்தத் தக்கதே! ஆயினும் அஃதும் ஒரு நன்மைக்கெனவே கருதுதல் வேண்டும்! சித்திராபதி உண்மைப் பொருளை உணர்ந்திருப்பின் இம்மகவு மாண்புற வளர்தற்குச் சில தடைகள் ஏற்பட்டிருக்குமல்லவா?

இக்குழந்தை பிறந்த சின்னாட்களில் பெயரிடும் விழா ஒன்று கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சுற்றத்தாரும் நட்பினரும் குழுமியிருந்தனர். இக்குழவியைத் தன் உரிய மனைவியினிடத்து உதித்த

மகவெனவே கருதினன் கோவலன். அவன் மனத்தில் மாறுபட்ட கருத்து ஒன்றுந் தோன்றிலது. மாதவியின் உண்மை அன்பே அவ்வாண்மகனுக்கு அவ்வுயரிய எண்ணத்தை உண்டாக்கிற்றென்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. ஆதலின் 'கோவலன் வழிபடும் மணிமேகலா தெய்வத்தின் திருப்பெயரே இக்குழவிக்குச் சூட்டப்பட்டது. இம்மகவு தெய்வ அருளைத் தாங்கி நின்றது என்பதற்கு இன்னெரு சான்றும் உண்டு. அன்றிரவு மாதவியின் சொப்பனத்தில் மணிமேகலா தெய்வம் தோன்றி "காமன், செயலற்று வருந்த, வேட்கையை முற்றும் ஒழித்த தவமகளைப் பெற்ருய்" எனக் கூறிற்று. "காமன் கையறக் கடுநவை யறுக்கு மாபெருந் தவக்கொடி யீன்றனை". (மணிமேகலை 7-ஆம் காதை 36, 37-ஆம் வரிகள்)

அத்தெய்வ வாக்கு மாதவியை ஆனந்தத்தில் ஆழ்த்திற்று. அவள் மனமகிழ்வை அளந்து கூற ஒருவராலும் இயலாது! இச்செய்தி சருக்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போலாயிற்று மாதவிக்கு. அஃது அவள் நல்லெண்ணத்தைப் பின்னும் நாட்டச் செய்தது. அதை நினைக்குந் தோறும் நினைக்குந்தோறும் அவளுக்கு ஒரு புதிய ஊக்கம் பிறக்கும்; தன்னை அறியாமலே ஆனந்தம் தோன்றும். அக்குழவி தன் குலத்தை விளக்க வந்த கொடிவிளக்கு என்பதே அவள் எண்ணம். ஆனல் தன் கருத்தை வெளிக் காட்டிலள்.

மணிமேகலையாரின் குழவிப் பருவம்

சில மாதங்களில் இக்குழவி தாயைக் கண்டு நகைக்கத் தொடங்கி, தன் அன்னையையும் நகைப்பிலாழ்த்திற்று. அஃது, உன் கருத்தைப் பின்பற்றி இங்ஙனமே உன்னை எப்போதும் மகிழ்விப்பேன் எனக் கூறல் போன்றிருந்தது! இம் மகவு தவழ்ந்து செல்லுங்கால், பல பொருள்களைத் தள்ளல், கவிழ்த்தல், உடைத்தல் முதலியன நிகழ்ந்தன. அக்குறிகள், யான் இக்குலமுறையைத் தள்ளி, தீய ஒழுக்கத்தைக் கவிழ்த்து, இழிவை உடைத்தெறிவேன் என்பதைக் காட்டுதல் போன்று காணப்பட்டன.

அம்புலிப் பருவம் இம்மகவை வந்தடைந்தது. அப்போது அழகிய சந்திரனைத் தன் தளிர் போன்ற கரங்கள் சுட்டிச் சுட்டிக் காட்டி யழைத்தன. அவ்வழைப்பு, மதி மாண்புற்றதே யாயினும் சிறு மாசு ஒன்று அதனிடத்துள்ளது போன்று, 'உதயகுமாரன் இன்னல இளவரசனேயாயினும், பயனற்றவேட்கை ஒன்று அவனிடம் குடி கொண்டுள்ளது. அது நீங்க நான் நீதிச் சொற்களை அவனுக்கு எடுத்துக் காட்டி அறிவுறுத்துவேன்' என்பதைத் தெளித்துக் காட்டுவது போலிருந்தது.

உற்றார் உறவினரை மகிழ்வுடன் தன்னிடம் அழைப்பது போன்று தலை அசைத்தாடும் செங்கீரைப் பருவம் இம்மகவை அணுகிற்று. அஃது, இரவலர் இன்முகங்காணு மளவும் உணவு அளிக்க அவர்தமை தம்மிடம் கூவி அழைக்கப் போவதற்கு முன் அறிகுறியாகத் திகழ்ந்தது.

பின்பு தளர்நடைப் பருவம் இச்சிறுமியரை நயந்தடைந்தது. அப்பருவம், குழவி அச்சத்துடன் அடி எடுத்து வைத்தலும், விழுதலும், எழுதலும், பின்பு உறுதியுடன் நடத்தலுமாகிய தொழில்களை மேற்கொண்டது. இச்செயல்கள் கண்டோர் யாவரையும் களிப்பிலாழ்த்தின. இவை, முதலில் தம் மனத்தைச் சிறிது சிறிதாகத் தடுத்து, அது முடியாமையின் மனந்தளர்ந்து, பின்னும் ஊக்கங் கொண்டு மறுத்து, இறுதியில் மன உறுதியுடன் நிற்கப் போகும் நிலையை வற்புறுத்தின.

பிறகு, யாழினும் குழலினும் இனிய சொற்கள் வாயினின்றும் வெளிப்படும் காலம் இச்சிறுமியாரை நெருங்கிற்று. இவர் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் சொற்கள் குணம் நிறைந்தனவாக இருந்தன. சிறிது பேசத் தொடங்கியவுடன் கண்ட பொருள்கள் யாவற்றிற்கும் காரணங் கேட்டலே இவர் தொழிலாயிருந்தது. தக்க விடை கிடைக்கவில்லையேல் இவர் முகஞ் சுளிக்கும். பொருத்தமான விடை கிடைக்குமட்டும் இவர் வேறொன்றிலும் மனஞ் செலுத்துதல் இல்லை. இது பெற்றோர்க்குப் பெருந் தொல்லையாகவே இருந்தது. ஆயினும் அவர்கள் தங்கள் மகளாரின் அறிவு மாண்பிற்குப் பெரிதும் மகிழ்ந்தார்கள். மாதவியும், தன் சீரிய எண்ணத்திற்கும், சிறுமியரின் நுட்ப அறிவிற்கும் ஏற்ப, குழவியை மிக்க நன்னெறியில் படருவித்தனள்.

மணிமேகலையாரின் கல்வித் தேர்ச்சி

மணிமேகலையார் ஐந்து வயதை அடைந்தார். அதுவே கல்வித் தொடக்கத்திற்குத் தக்ககால மன்ரே? அவ்வமயம் நன்கு கல்வி கற்ற புலவர் ஒருவர் இவருக்கு ஆசிரியராக ஏற்பட்டனர். நெடுங்கணக்கு முதலாகப் பல நூல்களும் இவருக்குக் கற்பிக்கப்பட்டன. மற்றச் செய்கைகளைப் போன்றே கல்வியிலும் இவ்வம்மையாருக்கு மிக்க சுறுசுறுப்பும் நுட்ப அறிவும் அமைந்திருந்தன. ஆசிரியர் இயம்பியதை அங்ஙனமே கவரும் நுண்ணறிவை இவர் பெற்றிருந்தனர். சோம்பல் பேய் இவரை ஒரு நாளும் ஆட்கொண்டிலது. என்றும் இவர் கை புத்தகத்தை விட்டிலது. அதற்குக் காரணம் இவருக்குக் கல்வியினிடத்துத் தோன்றிய இன்பமே. படித்ததை மறத்தல் இவர்-பால் தோன்றவில்லை. எப்போதும் புதிய பொருள்களைக் கற்பதில் இவர் மனம் விழையா நிற்கும். அஃது ஆசிரியரை உவகையிலாழ்த்திற்று. ஆதலின் ஆசிரியர் மணிமேகலையாரைக் கல்வியில் மிக்க ஊக்கப்படுத்தினர். இவையாவும் இவர் கல்வியறிவு முன்னேற்றத்திற்குப் பெருந்துணைகளாய் இருந்தன.

அக்குலத்தினர் கல்வியைக்காட்டிலும் ஆடல் பாடல்களிலேயே மிக்க விருப்பைச் செலுத்துவர். இவற்றில் மாதவி மிகத் தேர்ந்தவள் என்பது யாவரும் அறிந்ததே! அட்சராப்பியாசத்துடன் ஆடல் பாடல்களையும் தொடங்கல் அம்மரபினர் கொள்கை. சங்கீதம் ஓர் உயரிய வித்தை என்

பதை யாரும் மறுத்தற்கியலாது. அதன் ஆழ்ந்த கருத்துகளைத் தெளியக் கற்காத சிலர், ஒழுக்கம் பிறழ்ந்து நடத்தலினால் சங்கீதத்திற்கே ஒருவித இழிவு ஏற்பட்டுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன் வரையும், "கணிகை வகுப்பைச் சார்ந்தவர்தாம் சங்கீதம் கற்றல் வேண்டும்! அவர்களுக்குத்தாம் இஃது இன்றியமையாதது! குலப்பெண்களுக்கும், இதற்கும் வெகு தொலைவு!" என்னும் பொது அபிப்பிராயம் ஒன்று நடையாடி வந்தது. அஃது இப்போது சிறிது சிறிதாகக் கழிந்து வருதலைக் காண்கின்றோம்.

ஆடல் பாடல்களே பெண்களைக் கொடிய வழியில் இழுத்துச் செல்கின்றன என்னும் ஓர் எண்ணம் மாதவிக்கும் இருந்தது போலும்! அத்தகையோரே அக்காலத்தில் பெரும்பான்மையும் தீய ஒழுக்கத்தில் திளைத்திருந்தனர். ஆதலின் அவள் தன் மகள் மணிமேகலையாரை அவ்வித்தையில் அதிகம் நுழைத்திலள். ஆனால் மணிமேகலையார் அதை முற்றும் அறியாமலுமில்லை. அஃதொரு சீரிய கலையன்றோ? சங்கீதம் கற்பதிலும் இவருக்குச் சில நாட்கள் கழிந்தன. அச்சின்னாட்களிலேயே அதில் இவர் பெரிதும் திறமை பெற்றார். இவருடைய அன்னை மாதவி அக்கலையில் துறை போயவளல்லளோ! அது குலவித்தையுமாக இருந்ததினால் விரைவில் இவர் மனத்திற் பதிந்தது. "குலவித்தை கல்லாமற் பாதிவரும்." (பழமொழி)

மணிமேகலையாரின் மங்கைப் பருவம்

இங்ஙனம் கல்வியிலும், சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்ற மணிமேகலையாருக்கு மங்கைப் பருவம் நெருங்கிற்று. வயதேற ஏற இவர் தம் குலத்தினர் ஒழுக்கத்தையும் நீர்மையையும் வெறுத்தனர். அவர்கள் வஞ்சகத்தொழிலும், ஆரவாரத் தன்மையும் இவருக்குப் பிடித்தில. அவர்களோடு வார்த்தையாடுதற்கும் இவர் மனம் கூசிற்று. கணிகையரைக் கண்டித்துக் கூறும் நூல்களைப் படிக்குங்கால் இவர் நெஞ்சம் புண்படும். "ஏன் இவர்கள் இந்நூல்களைப் படித்துப் பயன்பெறுதல் கூடாது? இஃதும் ஒரு தொழிலா! இச்செல்வமும் ஒரு செல்வமா! இவர்களுக்கு என்ன பெருமை! என்ன பெருமை! இம்மகளிர் நல்வழியில் பொருளீட்டிய பொற்பாளர் போன்று பெருமை பாராட்டுகின்றனரே! என்ன செருக்கு! என்ன மமதை! இவருள் சிலரேனும் அறிவுடையராய்த் திரும்புதல் கூடாதா! தாம் இயற்றுவது இழிவும் கொடுமையும் கலந்தது எனக் கனவிலும் கருதுகின்றனரில்லையே! இத்தனிக்குலம் ஒன்று ஏற்பட்டதற்குத் தான் காரணம் யாது?

"பண்டு அறிவுடையோர் சில குடும்பங்களிலிருந்து அழகுமிக்க சில பெண்மக்களைத் தேர்ந்தெடுத்துக் கோயில் பணிக்கென்றே அமர்த்துவர். அம்மங்கையர் உலகப் பற்றற்றுக் கடவுள் பணி இயற்றுதலிலேயே தம் காலங் கடத்துவர். அதனுல் அவர்களுக்கு இறைவன் மாட்டு அன்பு பெருகும். அவ்வன்பின் முதிர்ச்சி அவர்களை ஆடலிலும் பாடலிலும் நுழைக்கும். அவை தம்மைத்

தாம் அறியாது நடைபெற்ற செய்கைகளாகும். அவ்வனிதையரை எம்பெருமானுக்கே மணம் புரிவிப்பதாகச் சில சடங்குகளும் நடைபெறும். அன்றிருந்து அத்தூய மங்கையர் இறைவனுக்கே உரித்தானவர்களன்றி உலக மக்களுக்கு உரிமைப்பட்டவரல்லர் எனத் தீர்மானிக்கப்படும். அச்சீரிய நங்கையர் இறக்குமட்டும் பிரமசரியரே. அவர்கள் வாழ்க்கைக்கெனப் பொது நிலங்களும் பொதுப் பொருள்களும் ஒதுக்கப்பட்டு வந்தன. அவற்றைக் கொண்டு அம்மங்கையர் உலக இன்னல்களில் உழலாமல், மிக்க இன்பமுடன் தம் வாழ்நாட்களைக் கடத்தினர். பிறவிப் பயனை யடைதற்கேற்ற தெய்வத் தொழில் அவர்கட்கு வாய்த்தமையின், அவர்கள் வாழ்நாட்கள் வீணாட்களாகாமற் கழிந்தன.

“அங்ஙனம் அப்பெண்டிர் இறைவனுக்கே தொண்டு பூண்டொழுகினதினுற்றான் அவர்தமக்குத் தேவதாசியர், தேவரடியார் என்னும் சீரிய பெயர்கள் அமைந்தன. அக்குடும்பங்களைச் சார்ந்த மற்ற மங்கையர் மணம் புரிந்து நல்வாழ்க்கையை நடத்தினர். அத்தேவரடியாரிடத்தில் ஆண், பெண் ஆகிய ஈருலகத்திற்கும் மிக்க மதிப்புண்டு. அவர்தம் பிரமசரித்துவமும், தெய்வ பக்தியும், எளிய நடையும், உயர்ந்த போக்குகளும் யாவருக்கும் அவரிடத்துச் சீரிய அன்பை உண்டாக்கின. பெரியோர் இல்லங்களில் நடைபெறும் மங்கல காரியங்களில் அவர்களே முதன்மை இடத்தைப் பெற்றார்கள். மணமங்கைக்குச் செய்யவேண்டிய காரியங்கள் யாவும் அவர்கள் கையினலேயே நிகழ்ந்தன. செல்

வச் சிறப்பில் அவர்கள் திளைக்கவில்லையேனும், மன அமைதியினும், பெருந்தன்மையினும் பீடு பெற்றிருந்தார்கள். அளவற்ற இன்பம் அவர்கள் வாழ்க்கையில் அமைந்திருந்தது. துன்பமற்ற மக்கள் அவர்களே என்பது சான்றோர் கருத்து. இங்ஙனம் இயற்கைச் சங்கிலியில் தூங்கி இறைத் தொட்டிலில் இன்பமுடன் ஊசலாடிக் கொண்டிருந்தவர் நம் தேவரடியரே. இவற்றை யான் சில நூல்களில் படித்தும் பெரியோர் வாயிலாய்க் கேட்டும் முள்ளேன்" என மணிமேகலையார் தம் மனத்துள் கருதினர். உடனே சில எண்ணங்கள் இவருக்குத் தோன்றின.

"ஆ ஆ! அத்துணை இன்ப வாழ்க்கையா இவ்வின்னல் நிலையை யடைந்திருக்கும்! இறை இன்பத்தில் திளைத்துத் திளைத்து விளையாடினவரா இவ்விழிந்த பதவியில் இறங்கியிருப்பர்! ஒரு காலத்தில் ஐம்புலன்களையும் அடக்கி ஆண்ட தவசிகளின் கூட்டமா இது! உலகமே உயர்வாக மதித்த உத்தமிகளா இவர்கள்! தெய்வப் பணியைச் சிரமேற் கொண்ட தேன்மொழிகளின் நிலை இங்ஙனமா மாறல் வேண்டும்! அக்குறிகளின் சிறு சுவட்டையும் இப்போது அறிவதற்கு இயல வில்லையே! இதற்கு முதன் முதல் வழிகாட்டியா யிருந்தவர் யாரோ! அறிவுடைய யாரேனும் இவர்களுக்கு இவற்றைப் பன்னிப் பன்னிப் பகர்ந்தா லென்ன! அப்பெருந்தருமத்தை எவரேனும் மேற் கொள்ளுதல் கூடாதா? மற்ற எல்லாத் தருமங்களைக்காட்டிலும் இது மிக்க சிறப்புடையது என்றுதான் யான் கூறுவேன்! ஆணுலகத்தையும், பெண்

னுலகத்தையும் அறவே கெடுக்கும் இக் கொடுமையை ஒழிப்பதைக்காட்டிலும் உயர் தருமம் வேறு யாது? இதற்கு இறைதான் இன்னருள் புரிதல் வேண்டும்! முன்னவன் முதல் நின்ருல் முடியாத தொன்றுண்டோ?" என நினைந்து நினைந்து மணிமேகலையார் மனம் வருந்துவர்.

"ஏன் யான் இக்குலத்தில் பிறந்தேன்! யான் எத்தகைய சீலத்தைக் கொண்டொழுகினும் உலகம் என்னை மதித்தல் யாங்ஙனம்? இஃதும் ஒரு நன்மைக்கே போலும்! இத்தாழ்ந்த குலத்திற் ரேன்றிய யான் சீரிய சீலத்தை மேற்கொண்டொழுகில் உயர் பெருமை யடைதல் திண்ணம். இதனல் நம் குலத்திற்கும் சிறிது மேன்மை யுண்டாகுமன்ரே! இம்முறை, நம் குலத்தினரைச் சிறிது திருத்தினும் திருத்தலாம்! எங்ஙனமேனும் நம் குலம் நல்வழிப் படரின் போதும்! ஏன், என் அருமைத் தாயார் நன்னெறியைக் கடைப்பிடித்தொழுகவில்லையா? அவர் செய்து காட்டும் முறைகளும், போதிக்கும் அறிவுரைகளுமேயல்லவா என்னை இவ்வரிய எண்ணங்களில் ஈர்த்துச் சென்றன! இன்றேல் என் கதி என்னுகும்! என் மனமார்ந்த வணக்கம் முதலில் அவருக்கே உரித்தாகும்" எனப் பன்முறையும் கருதுவர்.

இவர் வாழ்நாட்கள் அறிவு நூல்களிலும், ஆராய்ச்சியிலும், கடவுட் பக்தியிலுமே கழிந்து கொண்டு வந்தன. மாதவியின் சீலப் பாலையும், நல்லொழுக்க உணவையுமே உண்டு வளர்ந்த மணிமேகலையாருக்கு இவ்வெண்ணங்கள் தோன்ருமலிருத்தல் யாங்ஙனம்? மாதவியும் தன் அரு

மைப் புதல்வி மணிமேகலையாரைச் சீரிய முறையில் வளர்த்து வந்தனள். கேவலம் தன் மகளாரின் உண்டி, உடை, அணிகளில் மட்டும் அவள் மனஞ் சென்றிலது. இவர் நற்குலப் பெண்ணாய், ஞானக்கொழுந்தாய், அறிவு திலகமாய் விளங்க வேண்டுமென்பதே அவள் ஊன்றிய எண்ணம். அதற்கேற்ப அவள் மேற்கொண்ட முயற்சிகள் பற்பல. இச்செயலில், மாதவி நற்குல மங்கையரையும், அறிவு நிரம்பிய அரிவையரையும் வென்று விட்டனளென்றே செப்பல் வேண்டும்! இன்றேல் இத்துணைப் பெருந்தகைமைகளும், பீடுடைய கருத்துகளும் மணிமேகலையார் நெஞ்சில் இடங் கொண்டிரா! இங்ஙனம் மதியுடைய மாதவியின் வளர்ப்பும், இவர் முற்பிறவியின் புண்ணியமுஞ் சேர்ந்து மணிமேகலையாரை மாண்புறச் செய்தன. இது நிற்க.

மணிமேகலையார் தந்தையின் பிரிவு

அந்தக் காவிரிப் பூம்பட்டினத்தில் ஆண்டு தோறும் இந்திரவிழா கொண்டாடுதல் வழக்கம். அவ்வமயம் மக்கள் கடலாடுதலும், இனிய இசைகளைப் பாடிக் களித்தலும், சுவை நிரம்பிய உணவுகளை உண்டு மகிழ்தலும் மரபு. அவ்வருடம் நடைபெற்ற அவ்விழாவைக்காண மாதவியும், கோவலனும் கடகரைக்குச் சென்றனர். அவர் இருவரையும் பிரிக்கும் ஊழ் அவருடன் தொடர்ந்தது போலும்! அதைவெல்ல யாரால் முடியும்?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்" திருக்குறள்

அப்போதுற்ற மகிழ்வின் மேலீட்டினால் கோவலன் வரிப்பாட்டு ஒன்றை யாழில் வாசித்தான். அதனால் கோவலன் வேறொருத்தியின்மேல் காதல் கொண்டிருக்கின்றான் என மாதவி கருதினாள். உடனே மாதவியின் மனம் வேறுபட்டு, அவளும் ஒரு வரிப்பாட்டு இனிமைபெற இசைத்தாள். அது, வஞ்சமற்ற மாதவியின் அன்பு வேறு இடத்தில் இருப்பதாகக் குறிப்பித்தல் போன்றிருந்தது. இச்செய்கை கோவலருக்குக் கோபத்தை மூட்டிற்று. இவ்விஷயத்தில் கோவலன் மாட்டு எங்ஙனம் முற்றும் குற்றஞ் சாட்டுதல் கூடும்? மாதவியின் மனப்பான்மையை அவன் நன்குணர்ந்திருப்பினும், கோவலனின் பொருட் குறைவும், அக்குல இயல்பும் அவனை ஐயத்தின் பாற்படுத்தின. விளையாட்டு வினையாய் முடிந்தது. "இதுவோ இவள் கருத்து? நான் இவள்மாட்டுப்

பாராட்டிய மெய்யன்பு பயனற்றதாயிற்றன்றே! இவள் குலத்தையும் கொள்கையையும் கருதாது, இவளை உத்தம செயல் வாய்ந்தவள் என நினைத்தது என் பிழையே யன்றி இவள்பிழை யன்றே! என்னைப் போன்ற பேதையும் உண்டோ? என் அறிவற்ற தன்மையை எனக்கு நன்கு எடுத்துக் காட்டினள்! இவள் கெட்டிக்காரியே! கைப் பொருள் இழந்து கண்கலங்கி நிற்கும் யானல்லவா அறிவீனன்! செல்வமும், மதிப்பும், நலனும் இழக்கும்வரையும் இதிலுற்ற இழுக்கு எனக்குத் தோன்றவில்லை யன்றே! காசிருப்பின் இவள் ஏன் நம்மை இங்ஙனம் அவமதிக்கின்றாள்? யான் இசைத்த கானல்வரியின் கருத்தென்னை? இவள் பாடிய பாட்டின் கருத்தென்னை? இதை இவள் உணராமலா பாடினாள்? ஒருகாலுமில்லை. உள்ளத்திலிருந்த மனப்போக்கு வெளிக் கிளம்பிற்று. இப்போது வேண்டுமானால் இவள் வேறொன்றைக் கூறலாம். அதை நம்புவார் யார்? சீ சீ இனி இவள் முகத்தையும் யான் பார்க்கலாமா! அங்ஙனமாயின் என்னைவிட அறிவற்றவன் யார்?" என்று சிந்தித்துக் கொண்டே அவ்விடமிருந்து எழுந்து கண்ணகியிடம் சென்றான்.

மாதவியின் மனத்துயரம்

இதைக் கேள்வியுற்ற மாதவி ஆறாத் துயரில் ஆழ்ந்தனள். "என் அறியாமை அன்றோ அன்பரைப் பிரித்தது! வேடிக்கை வேதனையை விளைத்ததே! உண்மையன்பு பாராட்டிய அவர் நெஞ்சம் எத்துணைத் துன்புற்றதோ! அன்பரைப் பிரிந்து யான் ஆருயிர் தரிப்பது யாங்ஙனம்? மற்ற கணிகையருக்கும், எனக்கும் வேறுபாடு யாது? 'நுண்ணிய நூல்பல கற்பினும் உண்மை யறிவே மிகும்' என்னும் பழமொழி என்னிடம் பலித்து விட்டதே! என் குலக் கோட்பாடுகளையும், கணிகையர் குணங்களையும் யான் வெறுத்ததும் பழித்ததும் மிக்க அழகியதே! சொல்லுதல் யார்க்கும் எளிது; சொல்லிய வண்ணம் செயலன்றோ அரிது! என் வார்த்தைகள் வாய்ப்பறையாக முடிந்தனவே! என் உண்மை நிலையை உலகம் எங்ஙனம் உணரும்?" எனச் செப்பிச் செப்பிப் புலம்பினள்; பின்பு தன் அறியாமையை நன்கு விளக்கி வரைந்த கடிதம் ஒன்றைக் கௌசிகன் என்னும் ஓர் அந்தணன் மூலம் கோவலனுக்கு அனுப்பினள். உறையூருக்குச் சிறிது தூரத்திலிருந்த தடாகத்தில் காலைக் கடனை முடித்துக்கொண்டிருந்த கோவலன் அக்கடிதத்தைக் கைவரப் பெற்றனன்; ஆனால் அதன் பொருட்டு அவன் ஊர் திரும்பினான் இல்லை. நிற்க.

கண்ணகியுடன் மதுரைக்குச் சென்ற கோவலன், சிலம்பின் காரணமாகப் பாண்டியரால் கொலையுண்டான். அக்கொடிய கொலையை அறிந்த கண்ணகி, பாண்டியரிடம் வழக்குரைத்து, மதுரை

யை எரித்து, பதினுன்காம் நாள் கணவனுடன் சுவர்க்கம் சென்றனள்.

இவையாவும் மாதவிக்கு எட்டின. அவள் மனம் துடித்தது! உடல் நடுங்கிற்று! "ஐயோ, ஈதென்ன கொடுமை! இஃது உண்மைதானே! என் தலைவர் இவண் நீங்கிச் சென்றதும், சிலம்பு கொண்டு விற்றதும், கொலையுண்டதும், கற்புத் திலகம் கண்ணகியார் சுவர்க்கம் சேர்ந்ததுமாகிய யாவும் ஓர் இமையில் நடந்துவிட்டனவே! இன்பத்தை யனுபவிக்கப் பாவியேனும், துன்பத்தை யனுபவிக்க உத்தமி கண்ணகியாருமாகவோ முடிதல் வேண்டும்! கற்புச் செல்வி கண்ணகியாரே, யான் உமக்குப் புரிந்த வஞ்சனைகள் அளவிடற்பாலனவோ! உம் தலைவரை மாத்திரமா, செல்வத்தையுமன்றோ யான் வஞ்சித்தேன்! உம் மன எரிவிற்கு எத்தனை நாட்கள் காரணமாயிருந்தேன்! என் குலத்தினர் ஆண்மக்களை மாத்திரம் வஞ்சிக்கின்றனர் என நினைத்தேனே யன்றி, அவர்களுக் குரித்தான குலமகளிரையும் வஞ்சிக்கின்றனர் எனக் கருதினேனில்லையே! ஏன் என் ஆராய்ச்சி அவ்விஷயத்தில் சென்றிலது! அங்ஙனமாயின் உம்மோடு சேர்ந்து உமக்குப் பணியியற்றி வாழ்வேனே! உம் பொறையும், சீரும், தூய்மையும் கலந்து வீசும் காற்று என்மீது படினும், யான் எத்துணை மேன்மையுறுவேன்! ஆ என் அருமைக் காதலரே, உம் பெருஞ் செல்வத்தை யான் கவர்ந்ததினலன்றோ நீர் சிலம்பு விற்க மதுரைக்குச் சென்றீர்! குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலையுண்டீர்! அளவிறந்த பொருளை நன்றி கெட்ட கணிகையின் பாலாக்கிக்

கள்வனெனக் கருத நின்றீரே! உமக்கு உரிய பொருளை விற்கச் சென்ற நீரோ கள்வர்! உம் செல்வத்தை வஞ்சித்து உம்மைக் கள்வராக்கிய யானல்லளோ கள்ளி! என்னை யன்றோ பாண்டியன் கொலைக்களம் படுத்தல் வேண்டும்? நீதி மன்னர் ஏனோ இதை அறியாமற் போயினர்! தாசி குலத்தின் தந்திரம் பாண்டியர் அறியார் போலும்! உலகம் இதை உணர வேண்டுவது இன்றியமையாததே. அப்போது-தான் கணிகை மரபிற்கு நல்லறிவும், குல மகளிர்க்குக் குதுகுலமும் உண்டாகும்! ஓ என் காதலரே, உம் கபடமற்ற முகத்தைக் காண்பது எப்போது! உம் களங்கமற்ற இனிய சொற்களைக் கேட்பது என்று! ஆ ஆ! என்னைப் போலும் பாவி இவ்வுலகில் உண்டா! என் வஞ்சக இயல்பே காதலன்மேல் கள்ளத் தனத்தை ஏற்றி யது! கண்ணகியாரின் கற்பியல்பே அக்கள்ளத் தனத்தைத் தகர்த்து எறிந்தது! ஓ அன்னையாரே, உம் துன்பக் காலத்தில் என்னை யாது சபித்தீரோ! உம் உயரிய குணம் அங்ஙனம் செய்ய இடந்தந்திரா தென்பது என் நம்பிக்கை! உம் கல்வியும், கற்பும், கலங்கா நிலைமையுமல்லவா, உம்மைக் கணவருடன் சொர்க்கஞ் சேர்த்தன! அஃதொன்றுமோ, இம் மையிலும் கடவுளாகத் தொழும் கண்ணியத்தையும் ஈந்தன! கணவரின் பழியைத் துடைத்த கற் பணியே! அவர் புகழுடம்பை உலகுள்ளளவும் நிலை நாட்டிய உத்தமியாரே! என் பிழைகளைப் பொறுப் பீராக!" எனப் பலவாறு அரற்றி நின்றனள்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மணி மேகலையார் கதறி யழுதனர். தம் அருமைத் தந்தை

யாரின் உயிர் நீக்கம் இவரைப் பெரிதும் வருத்திற்று. "தந்தையாரை இனி யாம் காணமாட்டோமே" என்பதை நினைக்க நினைக்க, இவர் நெஞ்சம் புழுங்கியது! என்றும் இன்பத்தில் திளைத்திருந்த இவரை இத்தாங்கொணுத் துயரம் பெரிதும் இன்னற்குட்படுத்தியது! தந்தையார் அன்பை உன்னி உன்னி உருகினர்! "அந்தோ! யான் தந்தை யற்ற தனயை ஆனேனே! இனி என்னை நல்வழிப் படருவிப்பவர் யார்? யாரிடம் அறிவுரைகளைக் கேட்டுத் தெளிவேன்? உம் துணையினுல் இக்குலத்தின் தீய தொழிலையே மாய்க்கலா மெனக் கருதினேனே! இனி யார் எனக்கு ஆண்மையைத் தருபவர்? யார் உறுதியைக் கொண்டு இவ்வுலகில் வாழ்வேன்? எனக்கு உற்ற காவல் கலைந்ததே! காவலற்றவள் எனக் கருதி என்னைக் கண்டோரும் கைக்கொள்ள வரின் என் செய்வேன்! தங்கக் கதவாகிய உம்மை இழந்து தவிக்க வைத்தீரே! இவ்விளமையிலேயா இனிய தந்தையாரை இழத்தல் வேண்டும்! குல மகளென ஒழுகிய என் அருமைத் தாயாரை விட்டு நீர் எங்குச் சென்றீர்? இவர் அரற்றல் உம் செவியிற் பட்டிலதோ? இனி என்றும் இங்கு வரமாட்டீரோ? அந்தோ, என்று உம்மைக் காண்பேன்! என் மாட்டு வைத்த அன்பினையும் மறந்தீரே! யான் எங்ஙனம் மறப்பேன்! அன்னை கண்ணகியாரின் கற்பின் திற மென்னே! அவரை யான் என்றும் கண்டேனில்லையே! உடலுடன் சொர்க்கஞ் சென்ற உத்தமியாரைக் காண்பதெப்போது! சீரிய உம்மிருவரையும் பெருமையுடன் தேவர் வரவேற்றனரோ! அவர் ஈந்த இனிய விருந்துண்டு

இன்புற்றீரோ? உம் பெற்றியை என்னென்பேன்! தேவரருள் பெற்றுத் திகழும் உம்மைக் குறித்து வருந்தலும் தீதே! உம் அருள் அடியாளைக் காத்தல் வேண்டும்" என இவர் பலவிதமான சொற்களைப் பகர்ந்து பகர்ந்து புலம்பினர்.

மணிமேகலையார் முன்னரே தம் மரபைப் பற்றிய இழிவை உணர்ந்திருப்பினும், தம் அன்னை மாதவி, தன்னையும் தன் மரபையும் பற்றி இயம்பிய இழிந்த சொற்கள் ஒவ்வொன்றும் பின்னும் இவர் நெஞ்சத்தைத் தைத்தது. கண்ணகியாரின் வீரமும், தெய்வத் தன்மையும் இவர் மனத்தை வியப்பினால் விகசிக்கச் செய்தன. மணிமேகலை-யாருக்குத் தம் இழிமரபினால் உண்டான மனத் தொளைகளைக் கண்ணகியாரின் வீரச் செயல்கள் தூர்த்தன எனக்கூறல் மிகையாகாது.

"நமக்கு அன்னையராக அமைந்த கண்ணகியாரின் பீடு என்னே! நம் தந்தையாருக்கு ஏற்பட்டவசையை, இசையாக மாற்றியது அவர் நற்பண்புகளல்லவா! ஆயினும், அவரியற்றிய காரியங்களில் எதைப் புகழ்ச்சி எனப் புகல்வது! எதை வீரமென விளம்புவது! எதைத் தெய்வத் தன்மை எனச் செப்புவது! எதைக் கற்பின் திண்மை எனக் கழறுவது! இதுமிக்க கடினமே! ஏன், வஞ்சனை இழைத்த கணவருக்கு மறுமொழி பகராது அவர் பின் தொடர்ந்தது புகழை நிலை நாட்டாதா? பாண்டியனிடம் வழக்குரைத்துக் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிலைநிறுத்தியது வீரச் செய்கை யன்றோ? கணவனுடன் விமானமேறி தேவருலகஞ் சென்றது தெய்வத் தன்மையை

தெளிவுறுத்த வில்லையா ? ஆதித்தனைக் கரிக் கழைத்ததும், மதுரையைத் தீக்கிரையாக்கியதும், கற்பின் செயல்கள் அல்லவோ? கலங்காத கற்புடன் மற்ற நற்குணங்கள் பலவும் வாய்க்கப்பெற்ற அவரல்லரோ பெண் எனப் பகரப்படுபவர்! அவ ரைத் தாயாராக வாய்க்கப்பெற்ற என் புண்ணியமே. புண்ணியம்! யானல்லவோ உயர் தவமிழைத்தவள்! அவரைப் போன்றே யானும் ஏன் கற்பையும், வீரத்தையும், அறச் செயலையும் பெற்று விளங்கு தல் கூடாது? அவர் ஒரு முறையில் வெற்றி பெற் றனர்! ஏன் யான் இன்னொரு வழியில் வெற்றி பெறுதலாகாது? உலகம் என்னை அவர் மகளெனப் பகருமாறு நன்னெறியில் ஒழுக முயலுவதே என் இன்றியமையாத கடமை! இன்றேல் இவ்வுலகில் யான் தோன்றியதற்கு யாதொரு பயனுமுண்டா காது! இக்கொடிய மரபில் தோன்றிய எனக்கு இந்நல்லெண்ணங்களேனும் தோன்றினவே! இஃ தும் என் பெரியோர் புரிந்த புண்ணியமே! இல்லை இல்லை. இந்நலத்திற்கு என் அன்னை மாதவியாரே காரணமாவார். அவர் உயரிய குணங்களும், சீரிய செயல்களுமே என்னை இம்முறையில் பண்படுத் தின! அவரே எனக்கு முதலாசிரியர் ஆவார்! ஆயி னும், இன்னும் சில நாட்கள் என் தந்தையாருட னிருந்து மகிழும் மகிழ்வையும், கண்ணகியாருடன் கலந்து வாழும் கண்ணியத்தையும் இழந்தது என் கன்மவினையே யாகும்! என் செயலாம்? எல்லாம் ஊழின் உறுதிப்பாடே" எனத் தம் மனத்தைச் சிறிது தேற்றிக்கொண்டு, தம் அன்னை மாதவிக்கு ஆறுதல் கூறினர்.

அவ்விருவரது செயல்களும் சுற்றத்தாரை வியப்பிலாழ்த்தின சித்திராபதியைச் சினத்தில் சேர்த்தன. அம்மரபினர் மாதவியையும் மணிமேகலையாரையும் தம்வழித் திருப்பப் பெரிதும் முயன்றனர். ஆனல் அது பயனளித்திலது.

மாதவியும் மணிமேகலையாரும் புத்தமடத்தைச் சாரல்

பின்பு மாதவிக்குப் பொருளிலும், உலக வாழ்க்கையிலும் வெறுப்புத் தோன்றிற்று. உடனே அவள் உயிர் துறக்கக் கருதினள். ஆனால் தன் அரும் புதல்வியின் ஆதரவற்ற நிலை அவளை அவ் வெண்ணத்தினின்றும் மீட்டது. 'என் மகளோ உலகறியாப் பேதை! தன் வாழ்க்கையை நன் முறையில் நடத்தும் வகையறியாச் சிறுமி! கொடியரை எதிர்த்து நிற்கும் குண வீரத்தை இவள் அடைய இன்னும் சிலகாலம் செல்லும். தீயர் மயக்கைச் சேராது விலகிச் செல்லும் பருவத்தை இன்னும் அடைந்திலள்! அத்தகைய இவளை நம் மரபினரும், ஆடவரும் தீய ஒழுக்கத்தில் இழுத்துச் செல்லினும் செல்லுவர்! இவளை நற்றிறத்தில் படர வைத்தல் என் கடனன்றோ? ஆயினும் இக்கொடியர் நடுவில் இருந்து காலந்தள்ள என்னால் இயலாது! அங்ஙனம் மனப்பொருத்தமின்றி இருப்பினும், என் இளமகளையும் கெடுத்து எனக்கும் பழியைத் திரட்டித் தருவர்' எனக்கருதிக் கோவலன் தனக்கெனக் கொடுத்த பொருள் யாவற்றையும் தானதருமங்களிற் செலவழித்துத் துறவுபூண்டு மணிமேகலையாருடன் புத்தமடத்தைச் சார்ந்தாள்.

ஈண்டு மாதவியின் குணத்தைச் செப்பாமல் மேற்செல்ல மனமெழவில்லை: அவள் தோன்றியது கணிகையர் குலமேயாயினும், அவள் மனம் அக் குலத்திலிருந்து வெகுதொலைவு விலகி நின்றது. கோவலனுடன் வாழ்க்கை நடாத்துங்கால் மாதவிக் குத் தோன்றிய உயர் எண்ணங்களும், கோவலன்

கொலையுண்டபோது அவள் அடைந்த ஆருத்துயரமும், கண்ணகியாரின் கற்பின் திறத்தில் அவள் வகித்த பெருமையும், தம் மரபினரிடத்து அவள் கொண்ட இரக்கமும் வெறுப்பும், தன் புதல்வியாரின் சீரிய ஒழுக்கத்தில் அவள் மனம் நின்ற நிலையும், தன் பொருளை நல்வழியில் பயன்படுத்திய பண்பும்—உற்று நோக்குவார்க்கு மாதவியின் மாண்புகள் தோன்ருமலிரா. இன்ன செம்மைக் குணங்கள் பல நிறைந்த மாதவியைக் கணிகையர் குலத்தில் பிறந்தவள் எனக் கூறி இகழ்தல் யாங்ஙனம்? அக்குலத்தின் குறையைப் போக்கும் பொருட்டு அரிய குழவி ஒன்றைத் தோற்றுவிக்க உலகிற் பிறந்த பெருந்தகையாள் என்றன்றே அவளைப் போற்றுதல் வேண்டும்! இம்மாதவியாரின் பிறப்பு, சேற்றில் செந்தாமரையும், உப்புக் கடலுள் முத்தும் பிறத்தலையே ஒக்கும்!

உண்மை இங்ஙனம் இருக்க, நடிகர் சிலர் மாதவிக்கு ஏற்றும் குற்றங்களும் பழிகளும் அளவிடற்பாலனவோ? இப்பொய்க் கருத்துகளைக் கொண்ட புத்தகங்கள் பல நம் தமிழ் நாட்டில் உலவி வருகின்றன. இவற்றைப் பின்பற்றி நடிக்கும் நாடகங்கள் கேவலம் நகைச்சுவைக்கும், தீய ஒழுக்கத்திற்கும் நிலைக்களனய் நிற்பவைகளே! இதை மறுத்து உண்மை உரைப்பினும் கொள்பவர் அரியரே! சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் நூல்களை ஊன்றி நோக்கும் பொறுமைக் குறைவும், கல்வியின்மையுமே இதற்குக் காரணங்களாகும். நம் நாட்டின் சரிதங்களின் உண்மைகளையே உய்த்

துணராதார் பிறநாட்டுச் சரிதங்களைப் பிழையற அறிதல் யாங்ஙனம்?

மாதவியும் மணிமேகலையாரும் பௌத்த மடத்திலேயே வதியலாயினர். நாடோறும் அறவுரைகளைக் கேட்டலிலும், அறிவு நூல்களைப் படித்தலிலுமே அவர்கள் காலம் கழிந்து வந்தது. ஒழிந்த பகற்போதில் மலர்வனம் போந்து, மாலை தொடுத்துப் புத்த பீடிகையை அணி செய்தனர். நல்லோர் கூட்டுறவும் அறவுரைகளுமே அவர்கள் ஆற்றாமையை ஒருவாறு ஆற்றுவித்தன. ஆயினும் தங்கள் குலக்குறைவையும் தங்களுக்கு நேர்ந்த இன்னல்களையும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அவர்கள் நெஞ்சம் துடித்தது.

மணிமேகலையார் உவவனஞ் செல்லல்

சோழ நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் இந்திர விழா கொண்டாடப்படுவது வழக்கம் என்பதை யாம் முன்னரே அறிவோம். அவ்விழாவை நடத்தாமல் விட்டுவிடின் நாட்டிற்குப் பல இன்னல்கள் நேரும் என்பது அக்கால மக்களின் ஊன்றிய நம்பிக்கை. ஆதலின் அவ்விழாவைக் கொண்டாடுவதில் அம்மக்கள் தவறுதலில்லை. அங்ஙனமே அவ்வருடம் அவ் விழா கொண்டாடும் காலம் நெருங்கிற்று. தெருக்களில் பூரண கும்பங்கள், பொற்பாலிகைகள் பொலிந்தன. பல இடங்களிலும் பாவை விளக்குகள் பகலை உண்டாக்கின. வாழை, கமுகுகளின் வரிசையும், கருப்பங்கோல்களின் காட்சியும் கண்டோர் கண்களைக் கவர்ந்தன. நல்முத்தினலாய தோரணங்கள் நாலவிடப்பட்டன. மன்றங்களிலும் வீதிகளிலும் புது மணல் பரப்பப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் துகிற் கொடிகள் சூழ்ந்திருந்தன. தேவக் கோட்டங்களில் சிறப்புப் பூசைகள் நடை பெற்றன. பந்தரிலும் அம்பலங்களிலும் சிலர் தருமோபதேசஞ் செய்து கொண்டிருந்தனர். வித்தியா மண்டபங்களில் சமயவாதிகள் வாதம் புரிந்தார்கள். ஒவ்வொரு வீடும் மிக்க அழகுடன் மிளிர்ந்தது. இஃது இந்திரலோகமோ என அயிர்க்குமாறு அணி செய்யப்பட்டது!

அவ்விழாவின்போது தேவர்கள் அவண் வந்து தங்குவர் என்பது அந்நாட்டினர் நம்பிக்கை. ஆதலின் அவ்வமயம் அவர்கள் பெரும்பான்மையும் தூய காரியங்களையே மேற்கொள்வார்கள்.

அந்நாளில் ஒவ்வொரு கணிகையும் அம்பலங்களுக்குச் சென்று, ஆடல் பாடல்கள் புரிதல் வழக்கம். அஃதியற்ற வில்லையேல் ஆபத்து நேரிடும் என்பது அவர்கள் எண்ணம். அச்செய்கையை அவ்வருடம் மாதவியும் மணிமேகலையாரும் மேற்கொள்ளவில்லை. தாசிப் பெண்டிர் பலர் அவர் இருவரையும் இழித்துப் பேசினர். அது சித்திராபதியின் மனத்தைப் புண்படுத்திற்று. ஆதலின் அவர்களை அழைத்துவர அவள் தன் தோழி வயந்தமாலையைப் பௌத்த மடத்திற்கு அனுப்பினள். புத்தமடத்தில் இருந்த மாதவி, மணிமேகலை இவர்களின் தவநிலை அங்குச் சென்ற வயந்தமாலையின் நெஞ்சை யுருக்கிற்று. மலரென மென்மை வாய்ந்த அவர்கள் உடல் வாடியிருத்தலைக் கண்ட அத்தோழி வாய் விட்டழுதனள். வயந்தமாலை மாதவியை நோக்கி, "அன்னையாரே, இவ்விந்திர விழாவில் வழக்கம் போல் செய்ய வேண்டிய ஆடல் பாடல்களை நீர் செய்யாமையின் நம் மரபினர் அலர் தூற்றுகின்றனர். ஆதலின் கருணையுடன் வந்து உம் கடமையை இயற்றுதல் நலம். அது நம் குலத்தினரைக் குதுகுலிக்கச் செய்யும். ஆடல் பாடல்களில் உம்மைப் போன்று தேர்ச்சி பெற்றவர் வேறொருவரும் இலர் என்பதை நீர் அறியாதவரல்லரே! நீர் கற்றிருப்பது சாதாரண வித்தையோ! அச்சீரிய வித்தையைப் பயனறச் செய்தல் உமக்குப் பண்பாகுமா? அதன் பொருட்டுச் சித்திராபதியார் செலவழித்த பணம் சிறிதன்றே! உம் கொள்கை அவ்வம்மையாரின் மனத்தைப் பெரிதும் துன்புறுத்துகின்றது! நன்கு உண்டு, உடுத்துக் களித்துக் காலங்கழிக்க

வேண்டிய இவ்வயதில், இத்தவவேடங் தாங்கல் தகுதியாமோ? உமக்கென்ன குறை! அழகும் அணியும் அற்ற அநாதையரா நீர்! உறவற்றவர் போல் இங்கிருக்க உமக்கு என்ன விதி! இத் தவத்தொழில் நம் மரபிற்கு ஒருகாலும் பொருந் தாது! அன்னையாரே, தயை கூர்ந்து என்னுடன் போதருவீர்'' என வணக்கமும் பரிவுந் தோன் றப் பகர்ந்தனள்.

தோழி வயந்தமாலை செப்பிய தன் மரபின் செயல்கள் மாதவியைப் பெரிதும் வருத்தின. தன் காதலன் கொலையும், கண்ணகியாரின் வீரச் செயலும் ஒன்றின்பின் ஒன்ருக அவள் நினைவிற்கு வந்தன. துக்கம் அவள் தொண்டையை அடைத் தது. ஒன்றுந் தோன்ருது சிறிது நேரம் வாளா இருந்தனள். பின்பு மனத்தைச் சிறிது தேற்றிக் கொண்டு, "வயந்தமாலையே, இம்மணிமேகலை பரத்தைத் தொழிலை மேற்கொண்டொழுகிய பாவி யேன் மகள் எனச் செப்புதற்குச் சிறிதும் பொருத்த முடையவளல்லள்! மதுரையை எரித்துக் கற்புக் கொடியை நிலைநாட்டிய கண்ணகியின் மகளே இவள்! இனி, மிக்க இழிந்த கணிகை யரின் தொழிலை மேற்கொள்ள இவள் இயல்பு இடந்தராது! யானே துன்பத்திற் காற்ருது அறவணவடிகளை அடைந்தேன்; அவர்பால் 'பிறவியினல் ஏற்படும் இடுக்கண்களோ பற்பல அதற்கு வித்தாயுள்ளது அவா. அதைக் கல்வி யெடுத்தற்கு முயலலே மக்கள் கடமை' என்னும் உயரிய பொருள்களைக் கேட்டு வருகின்றேன். அவைகள் என் மனத்தைக் கவர்ந்துள்ளன. இத்

தன்மையில் நம் மரபின் இழி தொழிலை என் உள்ளம் நாடுமோ? நம் மரபினர் வஞ்சகச் செயல்களை நினைக்கும் போதே என் நெஞ்சம் நடுங்குகிறது! ஆதலின் யானும் அவண் வருதற்கியலாது! இதை என் தாய்க்கும், மற்றையவர்க்கும் இயம்புவாய்" எனப் பகர்ந்தனள். இவை யாவும் வயந்தமாலையின் செவியில் காய்ச்சிய நாராசம் போன்று நுழைந்தன. அவள் வேறு விளம்ப வன்மையற்றனள். மாதவியைத் தன் வசப்படுத்தலாம் எனக் கருதிய அவள் கருத்து பயனற்றது. அவள் முழு நம்பிக்கையும் ஒழிந்தது எனக் கூறல் மிகையாகாது. இறுதியில் அரிதிற் பெற்ற மாணிக்கத்தை ஆழ்கடலில் உகுத்தவள் போன்று நசையற்று வீடு திரும்பினள்.

தோழி வயந்தமாலையின் வரவும், மாதவியின் மறுப்பும் மணிமேகலையாருக்குப் பழைய நிலைகளை நினைப்பூட்டின. அவர் மனத்தில் தம் தாய் தந்தையருக்கு நேர்ந்த இன்னல்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றின. வஞ்சமற்ற அவர் உள்ளம் கொதித்தது; கருங்குவளையை யொத்த அவர் விழிகள் நீரைப் பெருக்கின. அந்நீர்ப் பெருக்கு அவர் புனைந்து கொண்டிருந்த மாலையை நனைத்தது. அவர் துயரத்தைத் தணிக்கக் கருதிய மாதவி, அவர் முகத்தை முந்தானையால் துடைத்து, "பெறற்கரிய என் பெருந்தவமே, நீ இங்ஙனம் மனத்தைத் தளரவிடல் அழகாமா? உலகத்தில் இன்பம் நேரலும், துன்பஞ்சூழலும் இயல்புதானே! இவை மாறி மாறி வரும் மாண்புடையனவென்பதை நீ அறியாயா? எத்துணைத் தூயோர் இவ்வுலகில்

வந்து தோன்றினும், இவற்றிற்குக் கட்டுப்பட்டே தீரல் வேண்டும்! இவ்வுலக இயல்பை வெல்ல எவருக்கும் இயலாது. ஆனல் துன்பம், என்றும் இன்பத்தைக் கொண்டே முடியும். துன்பத்தின் இறுதி இன்பமே! ஆதலின் இவ்வின்னல்கள் யாவும் ஒரு நன்மைக்கே எனக் கருதுதல்வேண்டும். இத்துன்பங்களில் நாம் தோயவில்லையேல், இப்பௌத்த மடத்தைச் சாரலும், உயிர்க்கு உறுதி பயக்கத்தக்க அறவுரைகளைக் கேட்டலும் எப்பிறவியில் நமக்குக் கிடைக்கும்! இதைக்காட்டிலும் பேரின்பம் எது? ஆதலின் இனி உன் மனத்தை அற்ப விஷயத்தில் நுழையவிடாது காத்தல் நலனேயன்றிச் சென்றதை நினைத்துச் சித்தித்தல் அறிவுடைமையன்று. தெளிவுடைய உனக்கு அதிகம் செப்புதல் பயனற்றதன்றோ? ஒன்றையும் ஓராது நீ சிந்திய கண்ணீரினல் இம்மாலை தூய்மையற்றது. இனி இது பயன்படாது. ஆகவே, நீ விரைந்து மலர்வனஞ் சென்று, புதிய மலர்களைக் கொணர்ந்து மாலை தொடுத்தலே தக்கதாகும்" எனப் புத்தி புகட்டினள்.

மணிமேகலையாரும் அதற்கு உடன்பட்டனர். ஆனல் அழகுக்கொழுந்து எழுந்ததென ஒளிரும் மணிமேகலையாரைத் தனியே மலர் வனம் செல்லவிடுக்கத் தோழி சுதமதியின் நெஞ்சம் இசைந்திலது. ஆதலின் அவள், "மங்கைப் பருவத்தில் மாண்புற்றிருக்கும் இவள் துணையின்றிச் செல்லும் தகைமையுடையளல்லள்! இவள் நேரிய வனப்பு ஆடவர் மனத்தைப் பிணிக்கும்! அதனல் சிற்சில இன்னல்கள் இவளை வந்து சாரினும் சாரலாம்!

யான் உடன் செல்லல் தகுதி'' என மாதவியிடம் பகர்ந்து, மங்கை மணிமேகலையாரைப் பின் தொடர்ந்தனள்.

அக்காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பு வாய்ந்த உவவனம் ஒன்றிருந்தது. தூய மலரை விரும்புவோரும், வேடிக்கையாக விளையாட வேட்பவரும், பொழுதை இன்பமாகக் கழிக்கக் கருதுவோரும் அவண் செல்லல் வழக்கம். அவ்வனம் அப்பட்டினத்தாருக்குப் பெரிய பொக்கிஷமெனத் திகழ்ந்தது. கடற்கரையைப் போன்று அஃதொரு பொதுவிடம். அதனிடத்து யாவருக்கும் உரிமை உண்டு. அது மக்களுக்கு மிக்க இன்பத்தை விளைத்து வந்தது. உவவன மென்னும் சொல்லே மக்களை உவகையிலாழ்த்தும். அதைக் காணவும், அங்குத் தங்கவும் விரும்பாதார் ஒருவருமிலர். புறநாட்டினருக்கு அஃதொரு புதுமையை விளைவித்தது. காவிரிப்பூம்பட்டினத்திற்குப் போதருவோர் உவவனத்தைக் காணுது செல்லுதல் இல்லை. அவ்வுவவனத்தைக் காண்பதற்கென்றே வருபவர் பல்லோர். அங்குச் சென்றவர் சிந்தையை முதலில் ஈர்ப்பது அவணிருந்த பளிங்கு மண்டபமே! அதற்குத் தெய்விக இயல்கள் பல அமைந்திருந்தன! அதன் உட்சென்ற ஒருவர் எத்துணை உரத்த ஒலியுடன் பேசினும் பாடினும் அவ்வொலி வெளியிலுள்ளோர் செவியில் படுவதில்லை! ஆனல் அவர்கள் உருவம் மட்டும் புலப்படும்! அவர்கள் காட்டும் குறிகளைக் கொண்டு ஒருவாறு காரியமியற்றலாம். வெளியிலுள்ளோர் வார்த்தைகளோ ஒன்றும் தவருமல் உள்ளிருப்பவர் செவியில் புகும்.

அப்பளிக்கறையில் மாணிக்கம் போன்று ஒளி வீசும் பதும பீடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது; மலராரும்புகள் அப்போதே அலருவித்தற்கு அப்பீடம் துணை புரிந்தது. அரும்புகளை அப்பீடத்தில் இடில், செடி, கொடிகளிலிருந்து பூத்தலைக் காட்டிலும் மிக்க அழகுடன் பூக்கும்! அங்ஙனம் மலர்ந்த மலர்கள் ஆண்டுகள் பல கழியினும் வாடி வதங்குதல் இல்லை! அன்றலர்ந்த மலரைப் போன்றே அழகுற்றிருக்கும்! ஈதொன்றுமோ? இன்னொரு சீரிய சிறப்பும் அதிலுண்டு! யார் எத் தேவதையை நினைத்து அப்பதும பீடத்தில் மலரிடினும் அம்மலர் அத்தேவதையின் திருவடிகளைச் சென்றடையும்! இதனால் மக்களுக்கு மலர் கிடைத்த போதெல்லாம் தத்தம் வழிபடு கடவுளைத் தேடிச் செல்ல வேண்டிய சிரமம் சிறிது குறைந்தது. தாம் தாம் இடும் மலர் தங்கள் வழிபடு கடவுளின் தாளைச் சென்றடைய வேண்டும் என்னும் ஊன்றிய எண்ணம் மாத்திரம் அவர்களுக்கிருத்தல் வேண்டும். வேறு சிந்தனையின்றி இடும் மலர் அப்பீடத்திலேயே தங்கி அதைப் பொலியச் செய்யும். மனமூன்றி இயற்றுக் காரியங்கள் பயனளித்தல் இல்லை என்பதை அப்பீடம் நன்கு தெளித்துக் காட்டிற்று. அது தெய்வதச்சன் மயனால் இயற்றப்பட்டதென இயம்பினர்.

மலர் கொய்யச் சென்ற மணிமேகலையாரும், அவருக்குத் துணை போந்த சுதமதியும் வீதிவழியே நடந்து சென்றனர். அவ்வீதிகளில், மக்கள் வேடிக்கை விளையாட்டுகளில் தம் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்தார்கள். மணிமேகலையா-

ரின் போக்கு அவர்களை வேறு வழியில் திருப்பியது. யாவருடைய விழிகளும் அன்னையாரை அலங்கரித்தன. அவர்கள் உடனே விழியா நாட்டங்களையுடைய தேவர்களாயினர்கள்! அவர்கள் நெஞ்சம் மணிமேகலையார் மாட்டே பதிந்தது! அவர்கள் கருத்து காரியங்களை மறந்தது. "இப்பெண்மணி யார்? இதுகாறும் நாம் இவளைப் பார்த்ததே இல்லையே! இத்துணை அமைப்பும் அழகும் வாய்ந்த பெண்மணிகூட நம் நாட்டில் இருக்கின்றனளா! இவள் வனப்பின் பெற்றி என்னே! இவ்வெளிய உடையிலும், இவ்வெளிய நடையிலுமே எத்துணைப் பொலிவுடன் தோன்றுகின்றனள்! இளமைக் கேற்ற அழகும், அழகுக் கேற்ற நடையும் இவளுக்கே அமைந்துள்ளன! வனத்துறையும் அன்னங்கள் இவள் நடையைக் கற்கப் பின் தொடராமலிரா! இவள் சாயலைக் காணின் மயிற் கூட்டங்கள் மயங்கி நிற்குமே! இவள் மிரண்ட பார்வை மானினத்தை மயங்கச் செய்யாதோ! இவள் முக ஒளி அம்புஜத்தை அலரச் செய்யும்! செங்காந்தளெனச் சிவந்த இவள் கரமடைந்த குவளையும் கருத்துத் தோன்றும்! இவளைத் தவ வழியில் நுழைத்தவர் மிக்க கொடியர்! இக்காரியத்தைச் செய்தவள் தாயே யாயினும், அவளையும் நாம் வெறுக்காமலிருக்க முடியாது" எனப் பல பேர் பலவாறு பேசிக்கொண்டனர்.

உதயகுமரன் மணிமேகலையை நாடி உவவனஞ் செல்லல்

கண்டோர் வியந்துகூறிய அவ்வார்த்தைகளி னிடையே அவ்விருவரும் உவ்வனத்தை யடைந்த னர். அச்சொற்களே அவர்களுக்கு மலர் மாரியாக இருந்தன. அவ்வனத்திற்குச் சென்றவுடன் மணி மேகலையாருக்குப் புத்துணர்ச்சி ஒன்று தோன் றிற்று. ஆனல் அவர் மனத்தில் மட்டும் ஏதோ ஒரு கலக்கம் தோன்றியது. அக்கலக் கத்திற்குக் காரணம் அப்போது அவரால் அறிய முடியவில்லை. அவர் கண்கள் அவ் வனத்தை ஒரு முறை உற்று நோக்கின. அதன் அழகும் கெம்பீரமும் அவரை ஆனந்தத்தி லாழ்த்தின. மலரிருக்கு மிடத்தை அவர் விரைந்து அடைந்தனர். அவர் மாண்புடைய கரங்கள் மண முடைய மலர்களையே நாடிச் சென்றன. அழகிய அலர்களைப் பறித்து அவர் குடலையிலிட்டார். தம் காரியம் முற்றுப் பெற்றவுடன் அவனுள்ள பொருள்களைச் சிறிது ஊன்றி நோக்கினர். அவ னுள்ள ஆழ்ந்த பொய்கைகளில் நீர்ப் பூக்கள் பல காட்சி யளித்தன. அம்மலர்களில் செவ்விய கால் களையுடைய அன்னங்கள் அமர்ந்திருந்தன. அவற் றில் பதிந்த தேனீக்கள் தேனைக் கவர்ந்து இன்னி சையுடன் மேற்கிளம்பின. தாமரையின் தேனை யுண்டு இன்புற அறியாப் பேதைத் தவளைகள் அதன் அடியிலுள்ள சேற்றில் பதிந்து கத்திக் கொண்டே இருந்தன. குளக்கரையில் நின்ற மரங் களில் தங்கிய குயில்களின் பாடல் அவருக்குக் குது குலத்தை யளித்தது. கனியும் காயும் மலரும் அரும்பும் இலையும் சேர்ந்து மரங்களை அழகு படுத் தின. உதிர்ந்த மலர்கள் அதன் நிழலில் தங்கு

வோருக்கு மலரணையெனப் பயனளித்தன. தெளிந்த நீரோடைகளும், மணற்றிட்டைகளும், பளிங்கு மேடைகளும், குளிர்ந்த காற்றும், நறு மணமும் அவர் மனத்தை இன்பத்திலாழ்த்தின. ஆனால் அவ்வின்பத்தை அவர் அதிக நேரம் துய்ப் பதற் கியலவில்லை. மேற் கூறியவற்றை அவர் கண்டு களித்ததும் அநுபவித்ததும் சில விநாடி களே எனக்கூறல் மிகையாகாது! இன்றேல் அவ ணுள்ள அற்புதத் தோற்றங்கள் பல அவர் கண் ணிற்குக் காட்சி யளித்திருக்கும்; நமக்கும் அவ்வுவ வனத்தின் மாண்பை விரித்துரைக்கும் பெற்றி கிடைத்திருக்கும். இது வருந்தத்தக்கதே!

அந்நாட்டில் செங்கோல் நடத்திய சோழ மன்னனுக்கு உதயகுமரன் என்ற ஒரு புதல்வன் இருந்தான். அவ்விளவரசனுக்கு மணிமேகலையார் மாட்டுப் பன்னாட்களாக வேட்கை உண்டு. அன்னை யார் பௌத்த மடத்தில் வதிவதையும் அவன் அறிவான். சமயம் நேர்ந்துழி அவரைக் கொடு போய் மணந்து கொள்ள வேண்டுமென்பது அவன் எண்ணம். மணிமேகலையார் சுதமதியுடன் மலர் வனம்புக்கபோது, உதயகுமாரனும் தேரேறித் தன் சேனைகளுடன் அவ்வழி வர நேர்ந்தது. ஆனல் மணிமேகலையாரின் போக்கை அவன் உணர்ந்திலன். அதை அவனுக்கு அறிவித்தவன் எட்டிக்குமரனென்னும் ஒருவன். இதையறிந்த வுடன் உதயகுமரனின் தேர் மனோவேகத்தினும் விரைந்து உவவனத்தின் மதிற்புறத்தை யடைந்தது. அத்தேரொலி மணிமேகலையாரின் செவியில் நுழைந்தது. அத்தேரில் வருபவன் யார் என்பதை

அவர் உணர்ந்து கொண்டார். அவன் தம் மாட்டு விழைவு கொண்டுள்ளது அவர் நினைவிற்கு வந்தது. அவர் மனம் பதை பதைத்தது; உடல் நடுங்கிற்று; பேச நாவெழவில்லை. அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தார். அவர் கண்கள் சுழன்றன; என் செய்வதெனத் தெரியாது சிறிது நேரம் தியங்கினார். சிறிது தாமதிக்கினும் தேர் அருகில் வந்து விடும்! என் செய்வார் பாவம்! அவர் நிலை மிக்க பரிதாபத்திற்கிடமா யிருந்தது. இறுதியில் அதைத் தம் தோழியிடம் தெரிவித்தலே தகுதி எனத் தீர் மானித்தனர்: "என் அருமைத் தோழீ, சிறிது நேரத்திற்கு முன் உண்டான ஓசை உதயகுமரன் தேரோசை யெனவே கருதுகிறேன்; அவன் என் மாட்டு விருப்புற்றுள்ளான் என்பதை வயந்த மாலையால் யான் அறிந்துள்ளேன். என் கருத்தோ அதற்கு மாறுபட்ட நிலையிலுள்ளது! அவனோ இளவரசன்! அவனுடன் பல சேவகர்களும் வரக் கூடும்! அதிலும் ஆண் மகன்! வன்மை பெரிதும் பெற்றவன்! நாமோ இருவரும் தனித்து வந்துள் ளோம்! மெல்லிய இயல்பு வாய்ந்த நாம் அவர்கள் முன் என்ன செய்யமுடியும்? இப்போது என்னை யான் காத்துக் கொள்ளல் யாங்ஙனம்? வெளிச் செல்வதற்கும் இயலாது! நமக்குத் துணைபுரியத் தக்க தூயோர் ஒருவரும் இவண் இல்லை. இத்துன் பத்திற்கு யாது செய்வது? அவனிடம் அகப்பட்டு அல்லலுற வேண்டியதுதானே? ஒன்றுந் தெரிய வில்லையே!" என மணிமேகலையார் பெரிதும் வருந் தினர்.

மணிமேகலையாருக்கு ஆறுதல் கூறவும் அவனிடமிருந்து தப்புவதற் கேற்ற உபாயத்தை

உய்த்துணர்தற்கும் சுதமதிக்குச் சில விநாடிகள் கூடக் கிடைத்தில. சிறிது தாழ்க்கினும் தேர் அவர்களை அணுகிவிடும். இந்நிலையில் நுட்ப மதிவாய்ந்த சுதமதி அன்னையாரை முற்கூறிய பளிக்கறையில் விட்டுத் தாளிட்டுச் சிறிது தூரத்தில் நின்றனள். அவள் நின்ற அந்த விநாடியில் உதயகுமரனும் அவண் வந்து சேர்ந்தான். அவன் கண்கள் அன்னையாரைத் தேடின. அவன் விழிகளில் வேட்கைக் குறி நன்கு புலப்பட்டது! அங்கு நின்ற சுதமதி தவிர வேறொருவரும் அவன் கண்களுக்குப் புலப்பட்டிலர்! அவ்வமயம் பல எண்ணங்கள் அவன் உள்ளத்தில் ஊசலாடின! 'எட்டிக் குமரன் நம்மை ஏமாற்றினனே! அன்றிச் சுதமதியைத்தான் அவன் மணிமேகலை யெனக் கருதினனே! இருவரும் வந்திருப்பின் இவள் மணிமேகலையைத் தனியே எங்கும் விடமாட்டாள்! இத்துணை விரைந்து வந்தும் பயனற்றதே! ஒருகால் நம் வரவை அறிந்து, சுதமதி அவளை எங்கேனும் மறைத்து வைத்திருக்கின்றனளோ! இதை அறிந்து கொள்வது யாங்ஙனம்? ஒருபுறம் நாம் தேடுங்கால் இன்னொரு புறமாக இவர்கள் வீடு செல்லினும் செல்லலாம்! இவ்வமயம் நாம் சுதமதியைவிட்டு நகருதல் தகுதியுடையதன்று. எங்ஙனமேனும் இவளையே கேட்டுத் தெரிந்து கொள்ளுதல்தான் தக்கது' எனத் தீர்மானித்து, அவள் அருகில் சென்ற உதயகுமரன் சுதமதியை நோக்கி, "நீ மணிமேகலைக்குத் துணையாகவே இவண் வந்தாய் என்பது யான் அறிவேன். அவள் எங்குச் சென்றாள்? அவளை நீங்கி நீ இங்குத் தனியே நிற்பதற்குக் காரணம் யாது? பௌத்த சங்கத்தை

விட்டு அவள் ஏன் இங்குற்றனள்? அவள் தக்க பருவத்தை யடைந்தனளா? மணத்தை விரும்பும் அருஞ் சொற்கள் அவள் வாயினின்றும் வெளிப் படுமோ?'' என வினவினன்.

அவ்வினுக்கள் சுதமதியின் நெஞ்சைச் சுட்டன. வாயிலற்ற அறையில் அகப்பட்ட குருடனைப் போன்று அவள் வருந்தினள். இறுக்கும் விடை இன்னதென அவளுக்குத் தோன்றவில்லை. அவள் மனம் பலவிதமாய் அலைந்தது. இறுதியில் தன்னைத் தானே தேற்றிக்கொண்டு, உதயகுமரனை நோக்கி, "உயர் குலத்திற்றோன்றிய உத்தமரே! நீர் வயதில் இளையோராயினும், மதியில் முதியோரல்லரோ? உமக்குத் தெரியாதனவும் உண்டோ? அதினும் பேதையாகிய யான் உமக்குப் பகர்வது யாதுளது! ஆயினும் சில இயம்புவேன்: இவ்வுடல் வினையினலேயே ஆக்கப்பட்டுள்ளது! இவ்வுடலாகிய நிலத்தில் செழித்து வளர்ந்து கொண்டிருப்பவை வினைகளே! நாம் என்றும் மணந்தரும் பொருள்களினலேயே இவ்வுடலை மாண்புறச் செய்தல் வேண்டும்! இன்றேல் புலால் நாற்றம் மிகுதியும் வீசும்! இது பிணிகள் பலவற்றிற்கும் இருக்கையாயுள்ளது; இது மூப்பையும் இறப்பையும் சுமந்து கொண்டு, சம்சாரமாகிற கடலிலே விரைந்து செல்லும் ஒரு கப்பல் எனினும் குற்றமாகாது. கொடிய அரவு உறையும் புற்றெனத் தீய பகைமை தங்குமிடம் இதுவே. இவைமட்டுமோ! இது வருத்தம், ஏக்கம், மயக்கம், அழுகை முதலிய துன்பங்கள் பலவற்றிற்கும் நிலைக்களனயுள்ளது. இத்தனைக் குற்றங்களுக்கும் கொள்கலனயுள்ள இவ்வுடலை மெய்யெனக் கருதிப் பயனற்ற காரியங்களில்

நுழைதல் பண்புடைமை யாகாது" எனத் தெள்ளித் தெளித்துக் கூறினள்.

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக்கொள்கலம்
புற்றடங் காவிற் செற்றச் சேக்கை
யவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்"

—மணிமேகலை

இவ்வினிய இன்னுரைகள் அவன் செவி புகு முன்னரே அவன் கண்கள், பூங்கொடியன்ன மணிமேகலையாரின் திருவுருவத்தை அப்பளிக் கறையில் கண்டன. சுதமதியின் அறிவுரை அவன் செவியில் நுழையாதது அவன் புண்ணியக் குறைவேயாகும். உடனே அவன் மனம் அன்னை யாரைச் சென்றடைய விரைந்தது. அப்பளிக்கறை யைப் பன்முறையும் உற்றுநோக்கினன். அதன் வாயில் அவனுக்குப் புலப்பட்டிலது. அதைக் கையால் தடவிக்கொண்டு சுற்றி வந்தான்; அவ்வ மயம் அவன் வாய் சில சொற்களைப் பகர்ந்தது.

உதயகுமரன்: சுதமதி! சித்திரந் தீட்டவில் கைவந்தோன் உன் தலைவி மணிமேகலையைக் காணின், இஃதோர் சித்திரமெனவே கருதுவான்! இவள் அழகு என்ன அழகு! அழகே திரண்டு இங்ஙனம் உருக்கொண்டு வந்ததோ என்றுன்னு மாறு திகழுகின்றனளே! இவளைப் பலர் சிறப்பித்

துக் கூற யான் கேட்டுள்ளேன். ஆயினும் அவர்கள் இவள் வனப்பை வகைப்படுத்திப் பகரும் வன்மையற்றவர்களென்பதே இப்போது யான் கொண்டுள்ள கருத்து. நான்முகன் கைத்திறம் முற்றும் இவள் மாட்டே பதிந்துவிட்டதுபோலும்! அவன் கைத்திறத்தைத் அறிஞர் அளவிடுதற்கு இவளே ஏற்றவள்! இவளைக் கண்ட யார்தான் இவளிடம் காதல் கொள்ளாமலிருக்க முடியும்! அவருள் முதன்மைப் பெற்றவன் யானாகவே இருத்தல் வேண்டும்!

சுதமதி: பசுமையுற்ற வளையல்களை யணிந்த என் தலைவியார் எத்தகையோரையும் இச்சியார்; இம்மாய வாழ்க்கையில் அவர் மனம் அழுந்தாது; அவர் உயர் எண்ணங்களும் செயல்களும் வாய்ந்தவர்; உண்மையே உருவெனக் கொண்டவர். காமன் கைத்திறம் அவரிடம் சிறிதும் பலியாது! தவத்தைக் கை பெற்றவர்! குற்றமிலைழத் தாரைச் சபிக்கும் வன்மை அவருக்குண்டு! முருகனனைய அழகும், இளமையும் வாய்ந்த உம்மையும் அவர் கருதார்! ஆதலின் துறவு நிலையில் நிற்கின்ற அவரை விரும்பல் உமக்குத் தகுதியன்று. உம் முயற்சி வெற்றி பெறல் அருமையினுமருமையே! பிறராலும் அவருக்குத் தீங்கு நேராமற் காத்தலே உமது பெருந்தன்மையாகும்.

உதயகுமரன்: உன் கட்டுரைகள் மிக அழகியன! கணிகையர் குலத்திற் பிறந்தவர்களுக்கும் கற்பு என்பது ஒன்றுண்டோ? தவவழியிற் செல்லும் எண்ணம் அவர்களுக்கு எங்ஙனம் உண்டாகக் கூடும்? அஃதொன்றுமோ? ஒருவர்

மாட்டே ஊன்றியிருக்கும் உண்மை அன்பும் அவர்கள் உள்ளத்தில் உதித்தல் முயற் கொம்பே! கண்ட இடத்தில் காதலைச் செல்ல விடும் கன்னியரல்லரோ அவர்? வருணப் பாது-காப்பு அவர்களுக்கேது? தேனுண்ண மலரை நாடிச் செல்லும் வண்டுகளே போன்று பொரு ளுள்ள மகனை விரும்பிப்போதல் அவர்கள் தொழி லன்றோ? இவற்றை யான் அறியேன் என்பது உன் கருத்துப்போலும்! குலமகளாயின் யான் இவளை நாடிவருவேனோ? இவள் வேறு யாரிடமே னும் அன்பு கொண்டிருப்பினும் அவ்வன்பை என் னிடம் மாற்றுதல் இவள் மரபிற்கு இழிவுடைய தன்றே! அப்போதைக் கப்போது மாறிமாறி அன்பு பாராட்டல் அம்மரபின் கொள்கைதானே?

சுதமதி: மரபின் கொள்கையைக் கொண்டே அம்மரபில் தோன்றிய மக்கள் யாவரையும் தீர் மானித்தல் யாங்ஙனம்? கொடிய மரபொன்றில் குணமுள்ள சிலர் தோன்றுவதில்லையா? வஞ் சனையையே வாழ்க்கை யெனக்கொண்ட அரக் கர் மரபில் பரம சாதுவான விபீஷணன் பிறக்க வில்லையா? பகுத்தறிவற்ற மிருகங்களிலும் ஈசுவர ஞானம் பெற்ற கஜேந்திரன் உதிக்கவில் லையா? இவர் தாய் மாதவி, கோவலனிடம் கொண்ட மனைவியைப் போன்று ஒழுகியதும், அவர் கொலையுண்டிறந்ததைக் கேள்வியுற்றுத் துறவு பூண்டதும் நீர் அறியீரோ? அவள் வயிற்றுதித்த அருமை மகளார் ஏன் தவச்செய்கையை மேற்கொள்ளல் கூடாது! ஆதலின், நீர் அவர்

மாட்டுக் கொண்டுள்ள தப்பெண்ணத்தை மாற்றிக் கொள்ளலே நன்மை.

உதய குமரன் : மாதவி செய்வதெல்லாம் வெறும் மயக்கு! இத்துறவை அவள் எத்தனை நாட்களுக்கு மேற்கொள்வாள்? பிரசவ வைராக்கியம், மசான வைராக்கியங்களைப்போன்று தொடக்கத்தில்தான் இவ்வைராக்கியம் இடம் பெறும்! அவள் செய்கையை இன்னும் சிலநாட்களில் நீயே காண்பாய்! உன்னைப்போன்ற பேதையரன்றோ இவைகளை நம்புவர்! எக்குலத்தில் பிறந்தவள் எக்கொள்கையைக் மேற்கொள்வது! இக்கதை எல்லாம் என்னிடம் படிக்க வேண்டாம்! என்னை மணிமேகலை மணத்தலைப்பற்றி ஆராய்ந்துரைக்க இன்னும் சில நாட்கள் தருகிறேன். அதற்குள் அவள் ஒரு முடிவிற்கு வரவேண்டும்! அவள் எத்தன்மையளாயினும் எனக்கென்ன! இளவரசனை எனக்கு உரித்தானவளே! இன்றேல் சித்திராபதியைக்கொண்டு எங்ஙனமேனும் அவளை அடைவேன்!

இங்ஙனம் உதயகுமரன் மிக்க கடுமையுடன் கூறி அவர்களைவிட்டு அகன்றனன். ஆனால் அவன் அவ்வுவனத்தைவிட்டு நீங்கவில்லை. அது முனிவரின் தவவனமாதலின் அங்குத் தீங்கிழைக்க அவன் அஞ்சினன். மணிமேகலையார் வெளி வந்ததும், அவரை அகப்படுத்திக் கொள்ளலாமென்பது அவன் கருத்து. ஆதலின் அவ்வனத்தின் புற வீதியில் நின்று, அவர்கள் வரவை நோக்கிக்கொண்டிருந்தான்.

மணிமேகலையும் மணிமேகலா தெய்வமும்

பின்பு மணிமேகலையார் பளிக்கறையிலிருந்து வெளிப் போந்தனர். அவர் மனம் மிக்க துன்பத்தில் ஆழ்ந்தது. உதயகுமரன் இயம்பிய வார்த்தைகள் ஒன்றின்பின் ஒன்ருக அவர் நினைவிற்கு வந்தன. அவர் சுதமதியை நோக்கி "சுதமதி! இவ்வுதய குமரன் பகர்ந்த இழிசொற்கள் உன் செவிப்பட்டன அல்லவா? என் மரபையும், என் அன்னையாரையும் என்னையும் எவ்வளவு பழித்துக் கூறினுன்! அவன் வசைகளுக்கு அளவுண்டோ? என் இயல்பைச் சிறிதும் ஓர்ந்தானில்லையே! எத்தனை இழிவுகளை எனக்குப் பொருத்தவேண்டுமோ அத்தனையும் பொருத்தியுள்ளான்! இவை இங்ஙனமிருக்க இடையில் ஒரு விந்தையன்ருே விளைந்துள்ளது! இத்தனை வசைகளையும் என் செவிப்புலன் ஏற்றும், மணவாழ்க்கையை மறுத்திருக்கும் எனக்கு அவன்பால் வேட்கை சென்றதே! ஆ ஈதென்ன வியப்பு! இந்நுட்பத்தை அறிய என்னுல் இயலவில்லையே! இது முற்பிறவியின் தொடர்போ? இதுதான் காதல் எனக் கழறப்படுவதோ?" என இயம்பிக்கொண்டே நின்றனர்.

அவ்வமயம் மணிமேகலா தெய்வம் அவர்களுக்குத் தெரிந்த ஒரு பெண் வடிவுதாங்கி அவண் போந்தது; அது பளிக்கறையிலுள்ள ஸ்ரீபாத பீடிகையை வலம்வந்து மேற் கிளம்பித் துதித்துக் கொண்டிருந்தது. பகற்பொழுது சிறிது சிறிதாகச் செல்ல மாலைப்பொழுது தோன்றிற்று. அம்மாலைப் போதை பொன்னிறப் பகலவன் பொலியச் செய்தான். பச்சை இலைகளும், புற்றரைகளும், நீர்

நிலைகளும், பளிங்குமேடைகளும் பசுமை நிறத்தைப் பெற்றன. சேவல், தன் பெடையோடு ஓங்கிய தெங்கின் மடலேறி மகிழ்ந்திருந்தது. பெண் அன்றில் பொழுதுபட்டதைத் தன் மெல்லிய குரலினல் ஆண் அன்றிலுக்குத் தெரிவித்தது. செங்கால் அன்னங்கள் காட்டிலுள்ள கூடுகளை நாடிச் சென்றன. பசுக்களின் மடியில் பால் சுரந்தது. இளங் கன்றுகள் தாய்ப் பசுக்களின் வரவை நோக்கி அரற்றின. அந்தணர் தீ முன் வேள்வி இயற்றத்தொடங்கினர். பசியவளையல்களை யணிந்த மகளிர் தீபங்களை ஏற்றித் தொழுதனர். இளமங்கையர் சிலர் யாழ் இசைத்தனர். இடையர் வாய் புல்லாங்குழலை ஊதிற்று. இன்ன சிறப்புகள் வாய்ந்த மாலைப்பொழுது நீங்கியதும், தோழியர் சூழ ஓர் அழகிய நீலமண்டபத்தில் வீற்றிருக்கும் அரசியைப்போன்று, முழுமதி உடுக்கள் சூழ நீல வானத்தில் உதயமாயிற்று. சான்றோரிடம் காணும் சிறு குற்றமும் தெள்ளிதின் தோன்றுதல் போன்று, வெள்ளிய முழுச்சந்திரனிடமிருந்த சிறு மாசு யாவருக்கும் நன்கு புலப்பட்டது. வெள்ளித் தகட்டைப் போன்ற அச்சந்திரன் இனிய குளிர்ந்த கதிர்களை வீசிக்கொண்டு ஆகாய வீதியில் கம்பீரமாக உலவினன்; வெள்ளிக் குடத்திலுள்ள பாலை உகுப்பதுபோல் அச்சந்திரன் தன் கதிர்க்கற்றையை மரக்கிளைகளின் இடையிடையே சிந்திநின்ருன். அவ்வழகிய ஒளி அம்மலர் வனம் முற்றும் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

முன்பு தோன்றிய அம்மணிமேகலா தெய்வம் அவர்தம் முன்போந்து, "நீவிர் இவண் நிற்பதற்குக்

காரணம் என்ன?'' என வினவிற்று. உதயகுமரன் செய்கையையும் சொற்களையும் சுதமதி அத்தெய் வத்திற்குத் தெரிய உணர்த்தினள். அதைச் செவி யுற்ற மணிமேகலாதெய்வம் சுதமதியை நோக்கி, "அவ்வரசிளங்குமரன் இவண்விட்டு நீங்கினும் இவ் விளங்குமரியின்மாட்டு வைத்த காதலை ஒழித் திலன்; இஃது அறத்தோர் வனமென இவ ணிருந்து அகன்று, இதன் வெளிப்புறத்தில் நின் றுள்ளான். ஆதலின், நீங்கள் இப்போது வீடு திரும்பல் அறிவுடைமையன்று. இதற்கருகிலுள்ள மாதவர் உறையும் சக்கரவாளக் கோட்டத்தில் இன்றிரவைக் கழித்தலே நலம். அங்குத் துன்பம் ஒன்றும் நேருதற்கிடமில்லை'' என இயம்பி, யாவரும் சுடுகாட்டுக் கோட்டம் எனப் பகரும் அச் சக்கரவாளக் கோட்டத்தின் சிறப்பையும் அவர் களுக்கு எடுத்தோதிற்று. இதைக் கேட்டுக் கொண்டேயிருந்த சுதமதி தன்னைத்தான் மறந்து உறங்கிவிட்டாள்.

அக்காலத்தையே மிக்க ஆர்வத்துடன் எதிர் நோக்கிய மணிமேகலா தெய்வம், மணிமேகலை யாருக்கு மந்திரத்தினல் மயக்கமூட்டி, அவரைக் கொண்டுபோய் மணிபல்லவத்தீவில் விடுத்தது; அவண் விட்டு நீங்கிய அத்தெய்வம் மலர்வனம் போந்து உதயகுமரனுக்குச் சில அறிவுரைகளைப் பகர்ந்தது. பின்பு அத்தெய்வத்தினல் சுதமதி துயரொழிந்தனள். "யான் இந்நாட்டினில் நடை பெறும் இந்திர விழாவைக் காணப்போந்த மணி மேகலாதெய்வம். மணிமேகலைக்குப் பௌத்த சமயத்தைப் பற்றுதற்கு நற்காலம் வாய்ந்துளது!

அவளை இப்போது மணிபல்லவத் தீவில் விடுத்து வந்தேன். அவள் தன் முற்பிறவியின் தன்மைகளை நன்கு உணர்ந்துகொண்டு, இன்று ஏழாம் நாள் இவண் போதருவாள். அவ்வமயம் சில அற்புதங்கள் இங்குத் தோன்றும். அவள் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டிருப்பினும் நீ அவளைத் தெரிந்துகொள்வாய். இவற்றை மாதவிக்குத் தெரிவி. மாதவி என்னை இன்னளென அறிவாள்'' என இயம்பி, அத்தெய்வம் மறைந்தது. சுதமதி திரும்பிச் சென்று நிகழ்ந்தவை யாவையும் மாதவிக்குத் தெரிவித்தனள். சுதமதியின் வார்த்தைகள் மாதவியைத் துயரிலாழ்த்தின. தன் மகளைக் காணுநாள் எந்நாளோ என, மாணிக்கத்தை இழந்த அரவத்தைப்போன்று அவள் வருந்தினாள். அவள் நிலை இங்ஙனமிருக்க.

மணிபல்லவத் தீவில் நிலவைப்போன்று ஒளிரும் வெண்ணிற மணலில் மரங்களிலிருந்து உதிர்ந்த மலர்ப்பள்ளியின்மீது மணிமேகலையார் கண்துயின்றனர். பொழுது புலர்ந்தது. அவருக்கிருந்த மயக்கமும் தூக்கமும் தெளிந்தன. எழுந்து சுற்றுமுற்றும் பார்த்தனர். அவருக்கு அஃதொரு புதிய இடமாயிருந்தது. ஆங்காங்கே முத்தும் பவழமும் சிதறிக் கிடந்தன. நீர்நிலைகளில் ஆம்பலும், குவளையும் அழகுபட மலர்ந்திருந்தன. புன்னையும் தாழையும் பந்தர்போன்று பரவி ஆதித்தன் வெப்பத்தைத் தடுத்தன. அவற்றை அவர் பன்முறையும் உற்று உற்று நோக்கினார். அஃது அவர் இதுகாறும் கண்ட இடமாகத் தோன்றவில்லை. ஆயினும் அஃது உவ

வனத்தில் தாம் காணாத ஓரிடமோ என அவர் அயிர்த்தார். அவர் கண்கள் சுதமதியை அங்கும் இங்கும் தேடின. அவர் சில இடங்களில் தாமே சென்றும் பார்த்தனர். ஒன்றும் பயனளித்திலது. "அந்தோ சுதமதி, என்னைத் தனியே விட்டு எங்குச் சென்றனை! யான் இப்போது எங்குள்ளேன்! எவ்வாறு இவ்விடத்தை யடைந்தேன் என்பதும் தெரியவில்லையே! என் மனம் நடுங்குகின்றதே! இது கனவா! அன்றி நனவா! என்னைச் சோதிக்க எங்கேனும் மறைந்துள்ளாயோ! ஒரு வார்த்தையேனும் என்னிடம் இயம்பமாட்டுவையோ! இன்னும் யாம் இவணே இருப்பின் தாய் மாதவியார் துன்புறுவரே! இஃது உனக்கு ஒரு விளையாட்டுப்போலும்! அழகிய அணிகளை அணிந்தவளே! திருவினுக்கொப்பான நங்காய்! யான் தனியிருந்து தளருவது உன் மனத்திற்படவில்லையா? உன் மலர்ந்த அழகிய முகத்தை எனக்குக் காட்டுவாயாக" என அரற்றினர்; என்ன அரற்றியும் ஒரு சிறு ஒலியையும் அவர் கேட்டிலர்.

அவண்விட்டு நீங்கிய மணிமேகலையார் பல இடங்களிலும் நுழைந்து நுழைந்து தம் தோழியைத் தேடினர். எம்மருங்கும் அவளைக் கண்டாரில்லை. பொழுது புலர புலரப் பறவைகளின் ஒலியும், மிருகங்களின் கூக்குரலும் தவிர வேறொன்றும் அவர் செவியிற்பட்டிலது. என் செய்வார் பாபம்! பழைய பொருள்கள் சில அவர் நினைவிற்கு வந்தன. அதனால் அவர் நெஞ்சம் புண்பட்டது. இறுதியில், "ஊழ் உந்த உத்தம பத்தினியுடன் வேற்றூரடைந்து கொலைக்களத்து

வெட்டுண்டு இறந்த என் தந்தையே!" என வாய் விட்டழுதனர். சிறிது தெளிந்து, திரும்பவும் தம் முன்புறத்தை உற்று நோக்கினர். ஆதரவற்ற வரைக் காக்கும் தெய்வத்தன்மை பொருந்திய அழகு மிக்க புத்தபீடிகை யொன்று அவர்முன் தோன்றிற்று. அதைக் கண்டவுடன் மணிமேகலை யார் தம்மைத் தாம் அறவே மறந்து மயங்கி நின் ரூர். செங்காந்தள்போன்ற அவர் கரங்களிரண் டும் சிரமேற் குவிந்தன; குவளையன்ன கண்கள் நீரைக் கான்றன; அப்பீடிகையை மும்முறை வலம் வந்து பணிந்தார். அடுத்தவர் உருவத் தைத் தெள்ளிதின் காட்டும் ஆடியைப்போன்று, அப்புத்தபீடிகை அவர் பழம்பிறப்பை அவருக்குத் தெள்ளிதின் உணர்த்திற்று:

அஃதாவது, "மணிமேகலையே, முற்பிறவியில் அசோதர நகரத்தரசனுகிய இரவிவன்மனுக்கும், அமுதபதிக்கும் நீ பெண்மகவாய்த் தோன்றினை. அப்போது உனக்கு இலக்குமி என்னும் பெயர் அமைந்திருந்தது. நீ அத்திபதி என்னும் அரசனுக் கும் நீலபதி என்பவளுக்கும் பிறந்த இராகுலனை மணந்தனை. சிலநாட்களில் அந்த இராகுலன் திட்டிவிடத்தினுல் உயிர் நீத்தான். அவன் இப் பிறவியில் இருக்கும் தன்மையை மணிமேகலா தெய்வம் வந்து உனக்கு உணர்த்தும்" என்பது.

இவற்றை உணர்ந்த மணிமேகலையார், தம் கணவன் இப்போதிருக்கும் நிலைமையை அறிய விழைந்து, மணிமேகலா தெய்வத்தை எதிர்நோக்கி ஏக்கத்துடன் நின்றுகொண்டிருந்தார்.

சில விநாடிகளில் மணிமேகலா தெய்வம் அவண் போந்து, புத்த பீடிகையைத் துதித்து வலம் வந்து வணங்கிற்று. வந்த அத்தெய்வத்தை மணிமேகலையார் தொழுது, "உமது திருவருளால் என் முற்பிறப்பை யுணர்ந்தேன். அப்பிறவியில் எனக்குக் கணவனுயிருந்த இராகுலன் இப்போது எங்குத் தோன்றியுளான் என்பதை அறிய என் மனம் விழைகின்றது. அதை அருள் புரிவீராக" என இறைஞ்சினுர்.

அவர் வேட்கையை முற்றுவிக்கக் கருதிய அத் தெய்வம், மணிமேகலையாரை நோக்கி, "நீ முற் பிறவியில் இலக்குமி என்னும் பெயரைத்தாங்கி வாழ்ந்து வருங்கால், ஒருநாள் அழகிய பூம்பொழில் ஒன்றில் உன் கணவனேடு நீ ஊடியிருந்தனை. உன் ஊடலைத் தீர்த்தற்பொருட்டு அவ் விராகுலன் மேற்கொண்ட முயற்சிகள் பற்பல. அவ்வமயம் சாதுசக்கரரென்னும் பௌத்த சாரண முனிவரொருவர் ஆகாயத்தினின்றும் இழிந்து உங் களருகில் வந்து நின்றனர். அவரைக் கண்டதும் இத்துணைப் பெரியார் இவண் வந்துவிட்டனரே! இவரை யாம் உபசரிப்பது யாங்ஙனம் என உன் உடல் நடுங்கிற்று; உன் மனங்கலங்கிற்று; உடனே அம்முனிவர் திருவடிகளில் விழுந்து பணிந்தனை. உன் ஊடலைத் தீர்க்க முயன்றுகொண்டிருக்குங் கால் இடையே வந்து கெடுத்த அம்முனிவரிடத் தில் இராகுலனுக்குச் சினமூண்டது. அச்சினத் தின் தூண்டுதலினுல் 'இப்போது இங்கே வந்தவன் யாவன்?' என அவன் கடுகடுத்து மொழிந்தான். இத்தீயசொல் உன்னைப் பெரிதும் அஞ்சச்செய்

தது. கணவன் பெரியோரிடம் குற்றப்படுகின்றனனே என உன் மனம் நெருப்பிலிட்ட புழுப்போல் துடித்தது ! அவன் வேறொன்றும் மொழியாவண்ணம் அவன் வாயைப் பொத்தி 'ஆகாயத்தினின்றும் நம்மை வந்தணுகிய இப்பெரியாரை வணங்கலும் துதித்தலும் செய்யவேண்டாவோ? அவற்றை இயற்றாதொழிந்தது எத்துணைப் பிழை! சான்றோரை வாழ்த்தாத நா நல்கூர்ந்ததன்றோ! இப்பெரியோர்களுக்கல்லவா அறிவுடையோர் அஞ்சி நடக்கின்றனர்! அவற்றை அறியாது காலத்தைக் கடத்தல் ஒருகாலும் தகுதியுடையதன்று!' என உன் கணவனுக்குக் கற்பித்து அவன் அவர் பாதங்களை வணங்குமாறு செய்தனை. திரும்பவும் நீ அவரைத்தொழுது, 'யாங்கள் உம் அன்பர் அல்லராயினும், யாங்கள் அன்புடன் தரும் தூய அன்னத்தையும் இனிய நீரையும் தயைகூர்ந்து உண்டுசெல்லல் வேண்டும்' எனப் பணிவுடன் பகர்ந்தாய். அங்ஙனமே அப்பெரியார் நீங்களிட்டதை உண்டு மகிழ்ந்தனர். நீ இப்போது உன் பிறவியை அறுத்தொழிக்க முன்னிற்பது அப்புண்ணியத்தின் பெருமையே! அந்த இராகுலனே இப்பிறவியில் உதயகுமரனாகத் தோன்றியுள்ளான். அவன் உன்னைவிடாது பற்றி நிற்பதும், நீ அவனை இடையறாது நினைப்பதும், இருவருக்கும் ஒருவர் பால் ஒருவருக்கு அன்பு செல்வதும் முற்பிறவியின் தொடர்பேயாகும். ஆயினும் உன்னை இத்தொடர்பிலேயே விட என் மனம் ஒருப்பட்டிலது. அங்ஙனம் விடின் உயர் நிலையை யடையவிருக்கும் உன் ஆன்மாவின் தூய்மையும் அழகும் அழியும். களர்நிலத்தில் விதைத்த

மிக்க வாசனை பொருந்திய நெல்போன்று உன் பண்பு குறையும் எனக் கருதியே தருமத்திற்கு மூலமாகிய உன் மனம் ஒருவழிப்படுதற்பொருட்டு உன்னைக் கொணர்ந்து இத்தீவில்விட்டு இப்புத்த பீடிகையையும் காட்டினேன்'' எனப் பகர்ந்தது.

பின்னும் மணிமேகலாதெய்வம், மணிமேகலையாருக்கு மாதவி, சுதமதிகளின் முற்பிறவிகளையும் தெரிவித்தது; இறுதியில் அவருக்கு நினைத்த போது வேற்றுருத்தாங்கல், ஆகாய வழியே செல்லல், பசியைத் தொலைத்தல் முதலியன கை-வருதற்கேற்ற மந்திரங்கள் மூன்றையும் உபதேசித்து, "புத்ததேவர் அருளிய நல்லறங்களையே நீ கடைப் பிடித்தல்வேண்டும்'' என அறிவு புகட்டி ஆகாயவழியே சென்றது.

மணிமேகலையார் அமுத சுரபியைப் பெறல்

மணிமேகலையார் இதுவரையும் கண்டதும் கேட்டதும் அவர் மனத்தைப் பிணித்தன. இவை நினைவா அன்றிக் கனவா என அவருக்கு ஐய முண்டாயிற்று. சிறிதுநேரம் ஓரிடத்தில் நின்று யோசித்தனர். தாம் மலர்வனஞ் சென்றதிலிருந்து நிகழ்ந்தன யாவும் ஒன்றின்பின்னென்றாக அவர் நினைவிற்கு வந்தன. 'யான் எக்குலத்திற் பிறந் தேன்! எவரிடம் வளர்ந்தேன்! யான் எங்கிருக்க வேண்டியவள்! என்ன புரியத்தக்கவள்! எல்லாம் தலைகீழாக மாறி எனக்கு இப்போது வாய்ந் திருக்கும் பெருமிதங்களென்ன! இவற்றிற்குக் காரணம் என் நல்லூழ் எனச் சிலர் செப்புவர்! அஃதெங்ஙனமாயினும், கற்புத்தெய்வம் கண்ணகி யாரைத் தம் இல்லக்கிழத்தியராகப் பெற்ற ஒரு பெரியாரைத் தந்தையராகப் பெற்றதன் பய னும், தூய்மையற்ற மரபொழுக்கத்தை வெறுத்துத் துறவை மேற்கொண்ட தாய் மாதவியாரின் கருப் பத்தில் தங்கிய புண்ணியமுமே இவற்றிற்குக் கார ணங்கள் என்பதை மறுக்க என் மனம் இடந்தந்தி லது. அத்துணைப் பெருந்தகையோரைப் பெற்றோ ராகப் பெற்றது ஒருகால் என் நல்லூழின் பயனாக லாம். விதையும் நிலமும் பண்புடையனவாயின் அவற்றிலிருந்து தோற்றும் மரம் நற்பயன் ஈதற் குத் தடை யாது? அப்போது புகழப்படுவன யாவை? விதையும் நிலனுமேயல்லவா? இவ்வமயம் என் தந்தை கோவலரும், தாய் கண்ணகியாரும் இருந்திருப்பரேல், அவர்தம் ஆனந்தத்தை அள விட்டுக் கூற யாரால் இயலும்? அவர்களிருந்து

மகிழ்வடையும் தவத்தை யான் இயற்றிலேனே! ஆயினும் தாய் மாதவியேனும் உயிருடனிருக்கப் பெற்றேனே!' என நினைத்துக்கொண்டே அவண் விட்டுப் பெயர்ந்தனர். அப்போதும் சில எண்ணங்கள் அவர் நெஞ்சைவிட்டு நீங்கில. அவர் கால்கள் அடியெடுத்து வைத்தனவேயன்றி அப் போக்கில் அவர் புந்தி பொருந்திற்றில்லை. இம் முறையில் செல்லும் தேவியாருக்கு அழகிய பூஞ் சோலை ஒன்று கண்ணிற்பட்டது. உடனே அவர் நோக்கு அதனுள் நுழைந்தது; மெல்லென நடந்து உட்புறஞ் சென்றனர். அவர் இதுகாறும் காணாத காட்சிகள் பல அவருக்குக் காட்சியளித் தன. மூங்கிலிற் கட்டப்பட்ட தேன்கூடுகள், பல சந்திரர்கள் உதித்தனவென ஒளிர்ந்தன. மலர் களின் பல்வகை மணமும் கலந்து வீசிச் செல் வோரைத் தன் வசம் இழுத்தது. அது சான்றோ ரின் நற்குணங்கள் பலவும் கலந்து பிறரைத் தம் வசம் திருப்பல்போன்றிருந்தது. நன்கு கனிந்த கனிகள் சில மரங்களின் தொடர்பற்றுக் கீழே விழுந்தன. அச்செயல் இறைவன் திருவடிகளில் விழும் பற்றற்ற மனனசீலர் இயல்பைக் காட் டிற்று. அவணிருந்த விளாமரங்களிலிருந்து சில காய்களும் சில கனிகளும் உதிர்ந்தன. அவற் றுள் காய்கள் பந்துபோன்று குதித்தன; கனிகள் அங்ஙனமே நிலத்தில் அமர்ந்துவிட்டன. அக்காட்சி நம் அன்னையாருக்குச் சில எண்ணங் களைத் தோற்றுவித்தது. 'இக்காய்கள் அறிவு முற்றுப் பெறாதவர் இயல்பையும், இக்கனிகள் முற்றிய ஞானிகள் நிலைமையையும் தெரிவிக்கின்

றனஅல்லவா ? இவ்வியல்பு ஓரறிவுயிர்க்கும் உண்டுபோலும்!' என அவர் கருதினர்.

அவண் தாமரைப் பொய்கைகள் பல இருந்தன. அத்தெளிந்த நீரும், பச்சைப் பசேலென்ற இலைகளும், சிவந்த மலர்களும் அவர் மனத்தைக் கவர்ந்தன. அம்மலர்களைச் சிறிதும் அலைக்காமல் அவற்றிலுற்ற மதுவை எடுத்துச்செல்லும் தேனீக்களின் செய்கை அவருக்கு வியப்பைத் தந்தது. அந்நீர்நிலையிலிருந்த தாமரை, குமுதம் ஆகிய இருவகை மலர்களுள் முந்தியது மலர்ந்தும், பிந்தியது குவிந்துமிருந்தன. அவை ஒரே காலத்தில் ஒருவர் இன்புற்றும், மற்றொருவர் துன்புற்றும் இருக்கும் உலக இயற்கையை தேவியாருக்கு நினைப்பூட்டின. பறவைகள் பல, மாறுபட்ட ஒலியைக் கிளப்பிக் கொண்டிருந்தன. அது விடியற்காலையில் முனிவரும், யோகியரும், இல்லறத்தாரும் தத்தம் இயல்பிற்கேற்ப இறைவனை இறைஞ்சுதலுக்கு ஒப்பாயிருந்தது. ஆதித்தன் செவ்விய நிறத்துடன் கீழ்த்திசையில் தோன்றினன். அதைக் கடலிலிருந்து குதித்தெழும் நெருப்புருண்டை எனவே கூறலாம். ஆனல் நெருப்புக்குள்ள வெப்பம் அப்போது அதனிடத்திலில்லை. அதற்குள்ள இயற்கைச் சூட்டை அலைகடல் அடக்கிவிட்டது போலும்! ஆங்குள்ள சோலை, பொய்கை, மணற்றிட்டைகள் யாவும் செம்மை நிறத்தைப் பெற்றன. அந்நிறம் நிலத்தில் படர்ந்த இலைகள் சிலவற்றில் படிந்தது. அஃது ஒரு மரத்தில் மரகதமும், பதுமராகமும் கலந்து ஒளிர்வது போன்றிருந்தது. பின்பு பகலவன்

சிறிது சிறிதாகத் தன் செவ்விய நிறத்தை மாற்றி வெண்மை நிறைத்தைக் கொண்டான்.

உடனே வெம்மைக் கதிர்கள் எங்கும் பாயத் தொடங்கின. அவை போர்க்கோலம் கொண்டெழும் வீரன் தன் அம்புகளைப் பகைவர்மாட்டு எய்தல் போன்றிருந்தன. உலர்ந்த இலைகளும், மலர்களும் அவணிருந்த அழகிய மணற்றிட்டைகளை அழகு படுத்தின. இன்னண இயற்கை யழகுகளைப் பார்த்துக்கொண்டே மணிமேகலையார் அப்பூஞ் சோலையில் நடந்து கொண்டிருந்தார். அவ்வனப்புகள் அவர் துன்பங்களை அறவே ஒழித்தன. மெல்லிய காற்றும், பரந்த மணமும், அழகிய காட்சிகளும் அவர் மனத்தைக் குதுகுலிக்கச் செய்தன.

'இவ்வியற்கையின் சீர்மை என்னே! இதைக் கண்டு இன்புறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே! மணிமேகலா தெய்வம் எனக்குச் செய்த உதவி மறக்கற்பாலதோ! எவண் இருக்கும் என்னைக் கொணர்ந்து இவண் விட்டது! ஈதன்றோ வியப்பு! ஊழ் இயற்றும் வினைத்திறங்களென்னே! பெரிய வெள்ளம் தன்பாற்பட்ட பொருளை இழுத்துச் செல்லல் போன்றன்றோ, ஊழும் மக்களை இழுத்துச் செல்கின்றது. இவ்வின்பத்தை அனுபவிக்கும் வாய்ப்பு யாவருக்கும் அமைதல் அருமையே! சித்திரக்காரன் ஒருவன், இம்மலர் வனத்தைத் தீட்டக் கருதின், சின்னாட்களில், சிலநிறங்களில், சிறுமுயற்சியில் இக்காரியம் முடியுமோ? அன்று அன்று. அவன் பலநிறங்களைக் கூட்டிப் பலநாள் முயன்று அவ்வமைப்பை நோக்கி நோக்கித் தீட்டுதல் வேண்டும்!

ஆனால் இவ்வனத்தைத் தம் மனப்படத்தில் அமைத்துக் கொண்ட புலவர் ஒருவர் இதை வரையத் தொடங்குவரேல், ஓரிமைப்போதில் தம் கவியில் அழகுபடுத்திக் காட்டிவிடுவர்! மை கொண்டு தீட்டும் ஓவியக்காரன் ஒருவனால் வரைய முடியாத இடங்கள் புலவரின் சில சொற்களினால் உருக்கொண்டெழும்! உயர் கவிஞரால் இயற்றப்படும் கதையா, மக்கட்கு ஊக்கத்தையும், இன்பத்தையும் அளிக்கின்றன? இல்லை இல்லை. அச்சரிதத்தில் தொடர்புற்ற மக்களின் உட்போக்குகளும், உயரிய எண்ணங்களும், ஆங்காங்குக் காணப்படும் இயற்கைத் தோற்றங்களுமே அல்லவா அவர்களுக்குச் சிறந்த விருந்தளிப்பன! அங்கு வரும் போதன்றோ புலவரின் உண்மை எண்ணங்கள் தம்மைத் தெரியாமலே வெளிப்படும்! அவர்கள் கற்ற சொற்களும் பொருள்களும் வந்து எதிர் தோன்றுதற்கும் இடம் அஃதே அன்றோ' எனக் கருதியதுமன்றி, 'இவ்வியற்கை இன்பங்களை அனுபவிக்கும் இவ்வமயம் சுதமதியும் நம்முடன் இருப்பின் எத்துணைப் பயனளிக்கும்! ஓர் இன்பக் காட்சியை இருவராய் அனுபவித்தலன்றோ சிறப்பு!' எனத் தம்முள் சொல்லிக்கொண்டே அவணுள்ள ஒவ்வொன்றையும் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். இந்திரன் ஆணையால், அவணுள்ள தரும பீடிகையைக் காத்துக் கொண்டிருந்த பெண் ஒருத்தி மணிமேகலையாரைக் கண்டாள். அவள் அவரை, "கப்பலினின்று தப்பிப்பிழைத்த மகளைப் போன்று தனியே இங்கு நிற்கின்ற நீர் யார்?" என வினவினாள். துணையற்ற அவருக்கு அவ்வம்மையாரின் வரவு பெரிதும் உவகையை

யூட்டிற்று. பின்பு அன்னையார் வாய், தம் இரு பிறவிகளின் வரலாற்றையும், தாம் அவண் போந்த முறையையும், புத்த பீடிகையைத் தரிசித்துப் பெற்ற பெருஞ் சிறப்பையும் அவளுக்கு வழங்கிற்று. அவள் இன்னுள் என்பதையும், அவள் பெயர் தீவதிலகை என்பதையும் அவர் அவளைக் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்தீவதிலகை மணிமேகலையாரை நோக்கி, "அம்மையீர்! புத்த தேவர் அருளிய அறநெறிகளின் வழியே செல்பவருக்கு இப்புத்தபீடிகை பழம்பிறப்பை உணர்த்தும். ஒருவரைச் சான்றோர் என அறிதற்கு இஃதொரு வழியாகும். இது யாவருக்கும் கிடைத்தலில்லை. இப்பேற்றைப் பெறுகின்றவர் மிக அரியர். இஃது உமக்கு ஏற்பட்டுள்ளது பெருஞ் சிறப்பேயாகும். சிறு புண்ணியத்தினுல் இஃது அமைதல் இல்லை; பல பிறவிகளில் தொடர்ந்து வரும் நலங்களே இப்பெரும் பேற்றிற்குக் காரணம். நீர் மிகப் பெரியீர்! ஆதலின் யான் உமக்கொன்று இயம்ப விரும்புகிறேன். இப்புத்தபீடிகைக்கு முன்புறத்தில் ஒரு தடாகம் உள்ளது; அஃது ஏரியைப் போன்று பரந்திருக்கும். அப்பொய்கையைக் குமுதமும் நெய்தலும் அழகுபடுத்தா நிற்கின்றன. அது காண்போர் கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்தது. அதனுள் அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரம் ஒன்றுண்டு. அஃது தெய்வத் தன்மை வாய்ந்தது. அதிலிடப்பட்ட அன்னம் எடுக்க எடுக்க வளரும். அதனுல் பலபேர் பசிப்பிணியைப் போக்கலாம். புத்ததேவர் தோன்றிய வைசாக முழுமதிநாளில்

ஒவ்வொரு வருடமும் அது மேற்கிளம்பும். அந்த நாளும் காலமும் இஃதே. அஃது அறநெறியில் வழாத வர் எவரோ அவர் கையில்தான் வந்துறும் என யான் கேட்டுள்ளேன்; அஃது உம்பால் வந்து சேரும் என நம்புகிறேன். அதன் வரலாறு முழு வதையும் அறிய விரும்பின், உம் ஊரிலுள்ள அறவணவடிகளைக் கேட்பீராக. நாம் இப்போதே அவண் போதருதல் நலம்'' எனச் செப்பித் தீவதிலகை நடந்தனள்.

இச்செய்தி மணிமேகலையாரை ஊக்கிற்று. அவர் உடம்பு பூரித்தது; கண்கள் மிளிர்ந்தன; மனம் அமுதசுரபியைப் பெற விழைந்தது; கால்கள் தீவதிலகையைத் தொடர்ந்தன; ஒன்றும் பேச அவருக்கு நாவெழவில்லை. அவர் ஆழ்ந்த யோசனையில் நுழைந்தனர். 'இங்ஙனமும் ஒரு பாத்திரம் இருத்தல் கூடுமோ? ஒருகால் இவள் நம்மை ஏமாற்றுகின்றனளோ? ஏன் இவள் அங் ஙனம் செய்யவேண்டும்? அப்படியிராது. ஏதோ சிறு உண்மையேனும் இதிலிருக்கும்! ஆனல் அத் தகைய பாத்திரம் ஒன்று இருத்தல் அருமைதான்! இருந்தால் எத்துணை நலனுண்டாகும்! எத்தனை ஏழைகளின் பசியை அகற்றலாம்! இரப்போர் இன் முகங் காணும் இயந்திரமாகவன்றோ அஃதாகும்! வறுமைப்பிணி நாட்டை விட்டு ஓடிவிடுமன்றோ! அப்பிணி நீங்கில் அதன் வாயிலாக உண்டாகும் மற்றத் துன்பங்கள் தொலைவதற்கு ஐயமென்னை? அப்போது உலகமே இன்பத்தில் தவழுமே! அவ் வமயம் பொதுவாக யாவரும் ஒரே நிலையில் இருப்ப தற்குத் தடை யாது? பெரும்பான்மையும் மக்களை

வருத்துவது பசித்துன்பந்தானே! கொலை களவு பொய் வஞ்சனை முதலியன உண்டாதற்கு அதுவே யன்றோ முதற்காரணம்! ஆ ஆ! அத்தகைய பாத்திரம் ஒன்றுளதாயின் என்ன இன்பம்! என்ன இன்பம்! அச்சிறந்த பாத்திரம் என் கைப்படுவது யாங்ஙனம்? யான் எதில் சிறந்தவள்? குலமோ கணிகையர் குலம்! வயதோ அறத்திறன் உணராத இளமை! ஞானமோ மிகக் குறைவு! செய்கையோ நீதியைத் தழுவியதன்று! இம்முறையில் அத்தெய்வப் பாத்திரத்திற்கும் எனக்கும் எத்துணைத் தூரம்! என்னைப் பார்த்தவுடன் இவளுக்குண்டான ஏதோ ஓர் எண்ணத்தினால் இங்ஙனம் இயம்புகின்றாள். கண்டவுடன் எப்படி என்னை அறமுடையவள் என அறிந்தாள்! அது யாரால்தான் அறிய முடியும்! கூர்ந்த மதிவாய்ந்தவர்க்கும் சிறிது கடினமே! பழகப் பழகவன்றோ ஒருவர் குணம் தெரியும்! எங்ஙனமாயினும் ஆகட்டும்! அச்சிரிய பாத்திரத்தைக் கண்ணினாலேனும் காணலாமல்லவா! அஃதே அருந்தவமாகும்! நம் இயல்பு குறைவு பட்டதேயாயினும், நம் பெரியோர் இயற்றிய தவத்தினாலேனும் அது கிடைத்தல் கூடாதா? அத்தன்மையில் கிடைத்தால்தான் கிடைக்கலாம்! அது நம் கைப்படின், அப்போதுதான் நாம் பிறந்ததின் பயனை யடைவோம்! ஆனால் அப்பாத்திரம் இப்பெண்மணி செப்பியவாறு பசிப்பிணியை நீக்குவதாயிருத்தல் வேண்டும்; வேறு எதைப் புரியினும் பயனின்று' என நினைத்துக்கொண்டே தீவதிலகையின் பின் நடந்தனர். இவ்வெண்ணங்களினால் அவர் கால்கள் மெதுவாகவே அடி எடுத்து வைத்தன.

மணிமேகலையார் அவண் சென்றவுடன் புத்த பீடிகையை வந்தித்து அக்கோமுகிப் பொய்கையை வலம் வந்து நின்றனர். உடனே அப்பொய்கையி னுள்ளிருந்த அப்பாத்திரம் மேற்கிளம்பி அன்னை யார் கையில் வந்தடைந்தது. அது செந்தாமரை மல ரில் அன்னம் அமர்ந்தது போன்றும், செங்காந்த ளில் சந்திரனொளி பொருந்தியது போன்றும் காணப் பட்டது. அப்பாத்திரம் அப்பொய்கையின் மேற் கிளம்பியதும், அன்னையார் கரத்தை வந்தடைந் ததும் ஓரிமைப் போதில் முடிந்தன. அச்செயல் அன்னையாரை வியப்பிலாழ்த்திற்று. அப்பாத்திரம் பெற்றதும் அழகிய வளையல்களை யணிந்த மணி-மேகலையார் தம்மைத்தாம் மறந்தார். அஃது உண்மையாகவே அமுதசுரபிதானோ என்னும் ஐயம் அவருக்குத் தோன்றிற்று. அதை உற்று உற்று நோக்கினர். இச்சிறு பாத்திரமா இப்பெருங் காரியத்தை இயற்றப்போகின்றது! ஒருவர் உண்ணு மளவு அன்னத்தை வைத்தற்கும் இஃது இடந் தராதே! ஈதன்றோ ஆயிரக் கணக்கான மக்களின் பசிப்பிணியைப் போக்கும் எனப் பகரப்படுகிறது! இது வியப்பினும் வியப்பே! தருமதேவதையே இங் ஙனம் உருக்கொண்டுவந்தனள்போலும்! அத் தெய்வத்தின் அருள் என்னே!

‘இது கேவலம் இவ்வுலகில் காணப்படும் பாத் திரம் போன்றதன்று! தெய்வத்தன்மை பொருந் தியதொன்றாகும்! இதன் பிரகாசமே அதை நன்கு புலப்படுத்துகின்றது! இத்தகைப் பெருந்தன்மை வாய்ந்த பாத்திரம் ஒன்று எனக்குக் கிடைத்ததின் சிறப்புதான் என்னே! என் ஞான முதிர்ச்சியி

ணும் புண்ணியத்தின் மிகுதியினாலும் கிடைக்கத் தக்கதோ இஃது! இல்லை இல்லை. என் அஞ்ஞானத்தின் அளவு என்னே! கன்மத்தின் கட்டு என்னே! எத்துணைக் கோடி ஆண்டுகள் தவமியற்றினும் அவற்றுள் கடுகளவேனும் போக்கிக்கொள்ள என்னால் இயலுமோ! அஃது ஒருகாலுமில்லை! இதற்குக் காரணம் யாதெனத் துருவித் துருவி ஆராயின், புத்த தேவரின் அருளே எனத்தான் முடிவு பெறும்! என்ன கருணை! என்ன கருணை! அவ்வருள் அளவிடற் பாலதோ!' என மணிமேகலையார் மாத்திரை கடந்த மகிழ்ச்சியின்பாற் பட்டார்.

மணிமேகலையார் சில விநாடிகள் அப்பாத்திரத்தையே நோக்கிக் கொண்டிருந்தார். பின்பு அவர் வாய் புத்த தேவரைப் புகழத் தொடங்கிற்று: "மாரனைவென்ற வீரனே! வஞ்சனை முதலிய கொடிய நெறிகளையும் காமக்குரோதமாகிய பகைகளையும் கடிந்த கற்பகமே! உலகிற்குத் தருமோபதேசஞ் செய்தலையே கடமை எனக் கொண்ட பெரியோய்! இன்பம் நிறைந்த சுவர்க்கத்தையும் வெறுத்து நின்ற இறையே! நிர்வாணத்திலேயே நேயங் கொண்ட நிமலா! மக்கள் எண்ணங்களைக் கவர்ந்து நின்ற மாயனே! விழைவோர்க்கு ஞானத்தையளிக்கும் விமலா! கடுஞ்சொல், குறளை, பயனில் சொல் இவற்றைக் கேளாக் கண்ணியனே! உண்மையே உருவெனத்திகழும் உரவோனே! மனத்துயரை நசிக்கச் செய்யும் அருள்நாயகனே! நாகலோகத்துக்குக் கருடனால் ஏற்படும் துன்பத்தைப் போக்கிய ஞானமூர்த்தியே! தேவராலும் ஏத்த இயலாத உமது புகழைப் போற்றும் வன்மை

என் அற்ப நாவிற்கு உளதோ! கரைகடந்த களிப்பே! இங்ஙனம் உம்மை யான் போற்றுதற்கு ஆர்வம் காரணமன்றி, உமது பெற்றியின் அளவை உணர்ந்தமையன்று! உமது திறனின் உண்மை உணரின் தலைவணங்கி நிற்பதன்றிச் சிறு வார்த்தையும் வாய்விட்டு வெளிவருமா!" எனப் பகர்ந்து அசைவின்றி நின்றார்.

பின்பு தீவதிலகை, பசிக்கொடுமையையும், அதன் இன்னல்களையும், அப்பிணி தீர்ப்போர் பெருமையையும் மணிமேகலையாருக்குத் தெரிவித்தாள்; அதை ஒழித்தற்கு மூலக்கருவியாகும் அமுதசுரபியின் பெற்றியும் அவள் வாய் அவருக்கு வழங்கிற்று.

> "குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
> நாணணி களையு மாணெழில் சிதைக்கும்"
> "மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."
>
> —மணிமேகலை

இதைச் செவியேற்ற மணிமேகலையார், "உலகில் பிணிகள் பலவற்றுள்ளும் பசிப்பிணியே கொடுமையானது! இப்பிணி இயற்றும் துன்பங்களோ பலப்பல: குலத்தை யழிக்கும்; ஈனத் தொழில் புரிய இடந்தரும்; பொறுமையைப் பொருந்தச் செய்யும்; வஞ்சனைக்கு வழிகாட்டும்; அறிவை அழுங்கச் செய்யும்; கல்விநலத்தை நாசப்படுத்தும்; நல்லோர் கூட்டுறவை நாடாது; சான்றோர் அறவினையைச் சாராது; உடலைத் தள

ரச் செய்யும்; ஆன்மாவை அலக்கழிக்கும்; மதியை மயக்கும். இத்துணை இன்னல்களை விளைக்கும் பசிப் பிணியை நீக்கும் நிதியன்றோ இது! கௌசிகமுனி வரையும் நாயினிறைச்சியை உண்ணுமாறு செய்த தன்றோ இப்பசி நோய்! உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரல்லரோ? முற்பிறவியில் என் தலைவன் திட்டிவிடமென்னும் பாம்பால் உயிர் துறக்க, அதைப்பொறாது யானும் தீப்பாய்ந்தேன். அங்ஙனம் தீப்பாயுங்கால் சாதுசக்கர முனிவனை உண்பித்த நினைவு எனக்கு உண்டாயிற்று. அந் நினைவின் உறுதியே இப்பாத்திரம் என் கைக்கு வந்ததன் காரணம் என எண்ணுகிறேன். வெயிலில் வாடிய பைங்கூழைச் செழிக்கச் செய்யும் வான் போன்றும், பசியால் மெலிந்த பாலகனுக்குப் பாலூட்டும் தாய் போன்றும் உயர்நிலையிலுள்ளது இவ்வமுதசுரபி. இனி இதனாலாய பயனை உலகம் துய்க்குமாறு செய்வதுதான் என் கடமையாகும்! இன்றேல் பிறர் பொருளைக் கவர்ந்த பாபத்திற்குள்ளாவேன்! இனி வெயிலென்றும், மழையென்றும் நோக்காது, பசிப்பிணியில் வாடும் மக்களுள்ள இடங்கள்தோறும் சென்று, என் பணியை ஆற்றுவேன்! அவ்வேழை மக்களுக்கு மேன்மேலும் உணவு சுரந்தளித்தலைக் கண்டு களிக்கும் விருப்புடையேன்! இதைக்காட்டிலும் என் மனத்திற்கு ஆனந்தத்தை அளிப்பது வேறொன்றுளதாக எனக்குத் தோன்றிலது! இவ்வமுத சுரபியின் காரியத்தைக் கண்டு மகிழ என் மனம் விரைகின்றது! இப்போதே சென்று இக்காரியத்தை மேற்கொள்வேன்" என இயம்பி இன்புற்றனர். இவ்வார்த்தைகள் தீவதிலகைக்குக் குது-

குலத்தை அளித்தது. 'இப்பாத்திரம் தக்கவரையே சார்ந்தது. இனிப் பசிப்பிணி உலகத்தைவிட்டு ஒழியும்! வறுமையுற்ருேர் வாழ்வர்! எளியோர் உயர்நிலையை யடைவர்! இனிக் குற்றமுண் டாகாது' என்னும் எண்ணங்கள் பல தீவதிலகை யின் மனத்திற்ருேன்றின.

பின்பு மணிமேகலையார் அளவிலடங்கா ஆனந் தத்துடன் ஆகாய மார்க்கத்திற் கிளம்பிச் சுதமதி யும் மாதவியும் இருக்கும் இடத்தை வந்தணுகினர். அவர் வருகை அவ்விருவரையும் உவகைக் கடலி லாழ்த்தியது. அவ்விருவர் முற்பிறவியின் செய்தி யையும், அமுத சுரபியின் அருமையையும் அன்னை யார் அவர்களுக்குத் தெளிய உரைத்தார். அப் பாத்திரத்தின் பெருமை மாதவியையும் சுதமதி யையும் வியக்கச் செய்தது. மூவரும் சேர்ந்து அற வுரைகளைக் கேட்க, அவ்வூர் அறவண அடிகளிடம் சென்றனர். அவ்வறவணவடிகள் சுதமதி மாதவி களின் பழம் பிறப்புகளையும், அவர்கள் இனி அடையப் போகும் நிலைமையையும் விளக்கமாகப் பகர்ந்தார். முன் அமுதசுரபிக்குத் தலைவனாக விளங்கிய ஆபுத்திரன் ஈகைப் பண்பை அவர்வாய் அவர்களுக்குப் பரக்க எடுத்தியம்பிற்று. மணி-மேகலையார் அவரை வணங்கி, அவர் கருணைத் திறத்திற்குப் பெரிதும் நன்றி பாராட்டினர்.

அவணிவிட்டு நீங்கிய அன்னையார் பிக்குணிக் கோலம் பூண்டார். அவர் கரம் அமுத சுரபி யைத் தாங்கிற்று; அவர் கால்கள் வீதியை நோக்கி நடந்தன; அவர் சிந்தை எளியோர் மாட்டே அமைந்திருந்தது; அவர் கண்கள் பசியுற்ருேரைத்

தேடின. இந்நிலையில் அவர் வெளிப்போந்தார். அரச நிலையில் இருக்க வேண்டிய அன்னையாரின் ஆண்டிவேடம் யாவரையும் வியக்கச் செய்தது. வழி நடப்போர் அங்ஙனமே தியங்கி நின்றனர். அவர் மணிமேகலையார்தாமோ எனச் சிலருக்கு ஐய முதித்தது! சிலர் இரகசியமாக ஏதேதோ பேசிக் கொண்டனர். அக்கோலத்திற்குக் காரணத்தை அறியச் சிலர் மனம் விழைந்தது; என்றும் காணாத அப்பாத்திரத்தின் தோற்றம் சிலர் நெஞ்சைக் கவர்ந்தது; அவர் எங்குச் செல்லுகின்றனர், என்ன செய்யப் போகின்றனர் என்பதை யுண ராது சிலர் மயங்கினர். "உதயகுமரன் நெஞ்சில் இடம் பெற்றிருக்கின்ற இவள் வெளிவந்ததன் காரணம் யாது? இவள் இக்கோலம் பூண அவன் எங்ஙனம் இசைந்தான்! இவள் எவ்வாறு அவனிட மிருந்து தப்பி வந்தாள்! அவ்வுதயகுமரன் இப்போது இவளைக் காணின் என்ன பாடு படுவனே! அவன் நெஞ்சம் அனலிலிட்ட புழு வெனத் துடித்தல் நிச்சயம்! தன் அழகையும், இளமையையும் இவள் ஏன் இங்ஙனம் வீணுக்கு கின்ருள்? இவளென்ன உயர்குடியில் பிறந்த உத்தமியோ? ஏன் இவள் உதயகுமரனுடன் நட்பைப் பாராட்டல் கூடாது? அவனென்ன அரச மகனல்லனே? அவனைக்காட்டிலும் சிறந்தவன் எவன் இவளுக்குக் கிடைக்கப் போகின்ருன்? ஏன் இவள் மனம் அவனை நாடவில்லை? இத்துறவி வேடத்தோடு இவள் எவ்வளவு காலத்தைக் கழிக்கக் கூடும்? இவளுக்கு உலகானுபவம் இன் மையே இதற்குக் காரணமாகும்! இவளுக்குப் புத்தி புகட்டுகின்றவர் ஒருவரும் இல்லைபோலும்.

ஏன் மாதவியேனும் இவளுக்கு அறிவூட்டல் கூடாது! இவள் தன் குலத்தொழிலை வெறுக்கினும் உதயகுமரனை மணம் புரிந்து மகிழலாமே! பிறரை மயக்க இவ்வேடம் கொண்டாளோ? இல்லை இல்லை. இவள் உண்மையாகவே மனத்துறவுடையவள்தான்! அங்ஙனமின்றேல் இவள் எப்போதோ உதயகுமரனுக்கு உரிமைப்பட்டிருப்பாள்! ஏன், இவள் தாய் மாதவி உத்தமியாக ஒழுகிக் கொள்ளவில்லையா? அவளும் இளம் வயதையுடையவள்-தானே. வேண்டுமாயின் இப்போதும் வேறு வழியிற் சென்று பொருளையும் இன்பத்தையும் நிரம்பப் பெறலாமே! அவள் மனம் அவற்றை நாடிற்று? உயர்குல மகளிர்க்கும் மேலான நிலையிலன்றோ அவள் வாழ்க்கை இப்போதுள்ளது! எல்லாம் துறந்த துறவியாகவன்றோ அவள் ஆய்விட்டாள்! அவள் செவி அறவுரைகளை-யல்லவா கேட்டுக் கொண்டிருக்கின்றது! அவளுக்குத் தோன்றிய மணிமேகலையும் அங்ஙனமே நிற்கின்றாள்! இதிலென்ன வியப்பு! நூலைப் போன்று சேலை, தாயைப் போன்று பிள்ளையல்லவா? விதை ஒன்றிட்டால் செடியொன்று முளைக்குமா! ஆனால், அவளைக்காட்டிலும் இவள் நிலை மிக்க உயர்வை அடைந்துவிட்டது ! வரவர உயருதல்தானே மக்களுக்கு அழகு! அதைத்தானே சான்றோர் எதிர்பார்க்கின்றனர்! இவள் மரபிற்கே இவள் ஒரு வைரம்'' எனப் பலரும் பலவிதமாகப் பகரத் தொடங்கினர்; சிலர் அவரைச் சூழப் பின் தொடர்ந்தனர். இத்தகைய வார்த்தைகளின் இடையில் மணிமேகலையார் உடல் நடந்து சென்றது. இவை ஒன்றையும் அவர் கவனித்திலர்.

அவர் அறிவும் ஆராய்ச்சியும் அமுத சுரபியில் அன்னம் பெறும் வழியையும், ஏழைகளை உப சரிக்கும் முறையையுமே நாடிநின்றன.

தம் செந்தாமரையன்ன கரத்தில் வெள்ளிய அமுதசுரபியைத் தாங்கிச் செல்லுகின்ற மணிமே கலையார், 'இஃது ஒருவராலும் பெறுதற்கரிய அரும் பாத்திரம்! கண்டோர் வியக்கும் கருணைவள்ளல்! பேராசையுள்ளோர் பெறமுயலும் பெரிய பேழை! சான்றோர் மதிக்கும் தயாநிதி! பஞ்சத்தைப் பறக் கடிக்கும் பணப்பை! பசிப்பிணியைப் போக்கும் பஞ்சாமிர்தம்! இரப்போர் இன்முகங்காணும் இறை! இன்னனைய பெற்றிகள் பலவும் வாய்க்கப் பெற்ற இப்பாத்திரம் என்னிடமிருந்து பய னென்னை! இது வெறும் பாத்திரமாயுள்ள வரை இதனல் அடையக்கூடிய பயனை எய்துதற் கியலாதே! இல்லது தோன்ருதன்ருே? ஆதலின் முதலில் யான் இதிற் சிறிது அன்னத்தைப் பெறல் வேண்டும். அங்ஙனம் பெற்ற அவ்வன்னம் பின் னர் எடுக்கக் எடுக்க குறையாது பயனளிக்கும். பாத் திரம் தெய்வத்தன்மை பொருந்தியதாதலின் அதில் பெறும் அன்னமும் மாசற்றதாய் இருத்தல் வேண்டுமன்ருே? அங்ஙனமின்றேல் அஃது எங்ங னம் குறையாது வளரும்? அன்னம் தூய்மை யடை தல் யாங்ஙனம்? அதற்குத் தனித்த பரிசுத் தம் ஏது? அதை அட்டவர், தொட்டவர், கண்ட வர் இவர்களுடைய தெய்வத் தன்மையும், தூய மையுமல்லவா மேன்மைப் படுத்துவன? அன் னத்தை அடுதற்கு உரிமை வாய்ந்தவர் மகளிரே அல்லரோ? அம்மகளிரில் சிறந்தவர், பெண்மைக்

குணங்க ள்பலவும் வாய்ந்து, கலங்கா நிலைமையை அளிக்கின்ற கற்பைப் பெற்றவர்தாமே? ஆதலின் கற்பிற்சிறந்த மாதரசி ஒருவரிடமே முதன் முதலில் இதில் அன்னத்தைப் பெறுவேன்! இனி அத்தகைய பெண்கள் நாயகத்தைக் கண்டுபிடித்தல் தான் என் முதற்கடமை' என நினைத்துக் கொண்டே போந்தார்; அவற்றைச் சிறிது வெளிப்படையாகவும் பகர்ந்தார்.

பன்னிரண்டு வருடங்கள் 'யானைத்தீ' என்னும் நோயால் வருந்திக்கொண்டிருந்த காயசண்டிகை என்னும் பெண்ணின் செவியில் இவ்வார்த்தைகள் நுழைந்தன. அவள் சிறிது சிந்தித்தாள். ஒரு வருக்குப்பின் ஒருவராக மகளிர் பலர் அவர் மனத்தில் தோன்றினர். அவள் ஆராய்ச்சி ஒவ்வொருவராகத் தள்ளிக்கொண்டே வந்தது. இறுதியில் ஆதிரை என்னும் பெண்ணரசி ஒருத்தியையே அவள் ஆராய்ச்சி வடித்தெடுத்தது. அவள், கடலில் கவிழ்ந்த கப்பலிலிருந்து கணவனைக் கரையேற்றிய கற்பு வாய்ந்தவள்! நெருப்பும் சுடா நேர்மை அவளுக்கிருந்தது! அவள் ஆகாயவாணியின் அன்பு வார்த்தைகளைக் கேட்ட அருந்ததி! மழையை வருவிக்கும் மாதரசி! தெய்வ அருள் பெற்ற தேவி! இழந்த கணவனைப் பெற்று மகிழ்ந்த தெய்வத் தாய்! இத்தகைய பெண்ணரசியின் நினைவு காயசண்டிகைக்கு உதித்தவுடன், அவள் மனங் குதுகுலித்தது. ஆகவே காயசண்டிகை, ஆதிரையின் பெற்றிகள்யாவற்றையும் மணிமேகலையாருக்கு எடுத்தியம்பி, "இஃது அவள் வீடு. அவளே நீ அன்னம் ஏற்றற்குத் தக்கவள்! அவளிடும் அன்னமே மேன்-

மேலும் பெருகும் வாய்ப்புள்ளது! எடுக்க எடுக்கக் குறையாது பசிப்பிணியைப் போக்கும் பண்பு அதற்கே அமையும்! பாத்திரத்தைப் பெற்ற பண்பு உமக்கும், அன்னத்தை யளிக்கும் அமைதி அவளுக்குமே உரியதென என் உள்ளம் கருதுகின்றது. அவளைப் போன்ற பெட்புடைய கற்பரசியை இத்தேயத்தில் காண்டல் அருமை!" எனச் செப்பினள்.

அங்ஙனமே மணிமேகலையார் ஆதிரையின் மனையில் நுழைந்து, வார்த்தை யொன்றும் கூறாது சித்திரப் பாவையைப் போன்று நின்றார். கற்பிற் கனிந்த ஆதிரைக்கு இக்குறிப்பு தெள்ளிதின் புலப்பட்டது. அவள் தன் மாசற்ற கரங்களால் அட்ட அன்னத்தைத் தூய எண்ணத்துடன் கொணர்ந்து அமுத சுரபியிலிட்டாள். இவ்வன்னம் தெய்வ அருளால் மேன்மேலும் பெருகி ஏழைகளுக்கு இன்பத்தை யூட்ட வேண்டு மென்பதே அவள் ஊன்றிய எண்ணம். நல்லோர்கருத்து நலன விளைத்தல் கண்கூடன்றோ! ஆதிரையின் தூய எண்ணமும் மணிமேகலையாரின் அருட்குணமும் பாத்திரத்தின் பண்பும் சேர்ந்து,

"அறத்தி னீட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல"

—மணிமேகலை

அவ்வன்னம் மேன்மேலும் பெருகத் தொடங்கிற்று. அதனால் பல்லோர் பசிப்பிணி ஒழிந்தது. கோடிக் கணக்கான மக்கள் வயிறு நிரம்பிக் குதுகுலித்தார்கள்; இன்னலுடன் வந்தவர் இன்முகத்துடன் திரும்பினர். அன்னையார் எப்போதும்

ஏழைக் கூட்டத்தினிடையே உறவாடிக் கொண்டிருந்தனர். வயிறார உண்ட மக்களின் வாழ்த்தொலியும், அவர்கள் இன்னிசைப் பாடலும், கம்பீர நடையும், முக ஒளியும் அன்னையார் மனத்தை மகிழச் செய்தன. அவர் கரங்கள் அன்னத்தை வாரி வாரி அளித்தன; அவர் உடல் ஓய்வின்றி உழைத்தது; மதியைக் கண்ட குமுதமென அவர் நெஞ்சம் புளகித்தது; பகலவனைக் கண்ட பங்கயமென முகம் மலர்ந்தது; விழியைப் பெற்ற பிறவிக்குருடன் போன்றும், அறிவுடைய பிள்ளையை ஈன்ற மலடியைப் போன்றும், பெருநிதியைப் பெற்ற வறுமையாளன் போன்றும் அவர் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார்; தாம் பிறந்த குலத்தையும், இருந்த நிலையையும், தமக்குக் கிடைத்த தெய்வ அருளையும் உன்னி உன்னி அன்னையார் உள்ளம் உருகினர்; அவர்க்கு வாய்ந்த அப்பெரும் புண்ணியக் காரியத்தின் பீடு அவர் மனத்தைப் பிணித்தது; இதைக்காட்டிலும் சுவர்க்கம் வேறில்லை என்பது அவர் கருத்து; இத்தகைய இன்பவாரியில் அன்னையார் தவழ்ந்து கொண்டிருந்தார்.

விருச்சிக முனிவருக்கு உணவாக அமைந்த நாவற் கனியைச் சிதைத்த குற்றத்தின் பயனாக யானைத்தீ என்னும் நோயினால் பீடிக்கப்பட்ட காயசண்டிகை, மணிமேகலையார் கையமுதையுண்டு தன் கொடிய நோய் நீங்கப் பெற்றாள். பின்பு அன்னையார் உலகவறவியைச் சார்ந்து, அவணுள்ள சம்பாதியையும் கந்திற் பாவையையும் வணங்கினர். இன்னும் பலரையும் உண்பிக்க அவர் மனம்

விளைந்தது. ஆதலின் அவர் உயர்விடத்தில் நின்று, "என் கரத்தில் தெய்வப் பாத்திரம் ஒன்றுள்ளது; இஃது ஆபுத்திரன் கையிலிருந்த அமுதசுரபி. யாவர் பசியையும் ஆற்றும் ஆண்மை இதற்குள்ளது" என்னும் அன்புச் சொற்கள் பலவற்றை வழங்கினர். உடனே உண்ணும் ஒலி எங்கும் மிகுந்தது.

மணிமேகலையாரின் செயல்கள் யாவும் சித்திராபதிக்கு எட்டின. அவள் மனம் கொதித்தது. "பொருள் திரட்டுதற்கு ஏற்ற காலத்தை இவள் ஏன் இங்ஙனம் வீணே கழிக்கின்றாள்? இவளுக்கேதேனும் பித்துண்டோ? கோவலன் கொலையுண்டதைக் கேட்ட மாதவி தவசிக் கோலம் பூண்டு முனிவர் தவச் சாலையை யடைந்தாள். இதுவே காண்போர்க்கு நகைப்பிற் கிடமாயுள்ளது! அதுவும் போதியதன்று என, அன்னை சென்ற வழியே அருமை மகளும் செல்லுகின்றனளே! ஈதென்ன அநியாயம்! உலகோர் பழியாரோ? ஆதலின் இப்போதே மணிமேகலையிடம் சென்று, அவள் பிக்குணிக் கோலத்தை ஒழித்தல் வேண்டும். அவள் கையிற்றாங்கிய பிச்சைப் பாத்திரத்தை இரப்போர் வசத்தில் தொலைத்துவிடல் நலம். பன்னாட்களாக அவளை விரும்பித் திரியும் உதயகுமரனை ஏவி, அவளை அவன் தேரில் ஏற்றி வருமாறு செய்வேன்! அங்ஙனமின்றேல் யான் ஒரு கணிகையன்று; என் குடிக்குக் குற்றப்பட்டவளாவேன். பின்பு நாடகக் கணிகையர் வீட்டிற்கே செல்லேன்" எனச் சூளுரைத்து, அவண் விட்டு நீங்கி உதயகுமரன் அரண்மனையை அடைந்தாள்.

உதயகுமரன், மணிமேகலையாரின் இயல்பையும், திறத்தினையும், சுதமதி, மணிமேகலா தெய்வம் இவர்களிடமிருந்து நன்குணர்த்தான் அல்லவா? அவை, அவன் மனத்திற்குப் பெரும் வியப்பையளித்தன. மணிமேகலையாரை உவவனத்தில் கண்டதிலிருந்து, அவருக்குவாய்ந்த அருட்டன்மைகளை நினைத்து நினைத்து அவன் தியங்கினன். 'அவள் ஒருதெய்வ வடிவமாகத்தான் இருத்தல் வேண்டும்! முற்பிறவிகளில் மிக்க புண்ணிய மிழைத்தவள் போலும்! அப்புண்ணியப் பயனை அனுபவித்தற் பொருட்டே இப்பிறவி எடுத்திருப்பாள்! ஏதோ சிறிது கன்ம வசத்தினல் பிறர் பழிக்கும் மரபில் தோன்றினள் பாவம்! அதனலேயே அவள்மாட்டு இழிந்த எண்ணங் கொள்ளுதல் ஒருகாலும் கூடாது. குலமகளிரினும் குணமுடையவளாகவே அவளை நினைத்தல் வேண்டும்! இனி அவளைப் போய்த் துன்புறுத்தல் தக்கதன்று. அதனல் அவள் நெஞ்சம் புண்படும். அப்பாவம் நம்மை எளிதில் விடாது' எனத் தீர்மானித்து, மணிமேகலையார்மாட்டுத் தனக்கிருந்த விருப்பத்தை அறவே ஒழித்து மனத்தெளிவடைந்திருந்தான். அவ்மயத்தில் சித்திராபதி அவண் வந்து சேர்ந்தாள். அவள் வாய் உதயகுமரனைப் பெரிதும் புகழ்ந்தது. எங்ஙனமேனும் உதயகுமரன் மணிமேகலையாரை அடையும்படி செய்து, அதனல் மிக்க பொருள் பெற வேண்டுமென்பதே சித்திராபதியின் எண்ணம். மணிமேகலையார் பிச்சைப் பாத்திரத்துடன் உலக வறவியில் வந்திருப்பதை அவள் உதயகுமரனுக்குத் தெரிவித்தாள். அப்போதும் அவன் மனம் அவ்வம்மையார் மாட்டு மதிப்பையே கொண்டது.

ஆதலின் அவன் மணிமேகலையாரின் உயர்நிலையையும், மனத்துறவையும், அருட்டிறங்களையும், அவர் பொதுமக்களினும் வேறுபட்டிருக்கும் மாண்புகளையும் சித்திராபதிக்கு விளங்கக் கூறினான். அவை ஒன்றையும் சித்திராபதியின் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவள் எண்ணம் முழுவதும் மணிமேகலையாரைத் தன் குலத் தொழிலில் திருப்புவதிலேயே பதிந்திருந்தது. அக்காரியத்திற்குத் தக்க கருவி உதய குமரனே என்பது அவள் தீர்மானம். அன்னையார் மனவுறுதியையும், தூய தன்மையையும் அவள் சிறிதும் கருதிலள். தன் குலத்தொழில் கொடிது என்னும் எண்ணம் அவளுக்கு இம்மியும் இல்லை.

தீய தொழிலிலேயே பழகிவந்த சித்திராபதி, உதயகுமரன் உறுதியான எண்ணத்தைப் பல திறச் சொற்களினால் மாற்றினாள். அவனைத் தன் வசமாக்க அவள் செய்த முயற்சிகள் பற்பல. இறுதியில் மணிமேகலையாரின் உயர் செய்கைகளில் மதிப்பைக் கொண்டிருந்த உதயகுமரனைச் சித்திராபதியின் வார்த்தைகள் மயக்கிவிட்டன. அவன் திரும்பவும் அன்னையாரிடம் செல்ல உடன்பட்டான். கரைப்பார் கரைத்தால் கல்லுங் கரையுமன்றோ? மந்தரையின் மயக்கச் சொற்கள் உயர்குணம் வாய்ந்த கைகேயியைக் கலக்கவில்லையா? சித்திராபதியின் நயவார்த்தைகள், அப்போதே மணிமேகலையாரை யடைந்து விடலாம் என்னும் ஊக்கத்தை உதயகுமரனுக்கு ஊட்டின. அவன் நெஞ்சம் புளகித்தது. இதைக்காட்டிலும் சிறப்பு

வேறொன்றுமில்லை என நினைத்து, உதயகுமரன் உடனே தேர் ஏறி உலகவறவியை யணுகினான். அவ்வறச் செல்வியார் அவண் வறுமை யுற்றோர் பலருக்கும் உணவளித்துக் கொண்டிருந்தார்; அவர் முகம் அன்றலர்ந்த தாமரையென ஒளிர்ந்தது; ஏழைகளை வரவேற்றலும், அன்னத்தை வாரி வாரி இடலும் தவிர, வேறொன்றிலும் அவர் மனஞ் சென்றிலது; அவர் உடல் என்றுமில்லாத ஒளியைக் கான்றது; அவர் மனமும் செய்கையும் ஒருமித்து நடந்தன; அவர் ஓர் உயரிய தருமதேவதையென விளங்கினார். இதைக் கண்ட உதயகுமரனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. சித்திராபதியின் வார்த்தைகளினால் ஊக்கப்பட்ட அவன் மனம், அன்னையாரின் அறச் செய்கையினால் தளர்ச்சி யடைந்தது. தீய காரியத்திலோ, சொற்களிலோ, அவன் நெஞ்சம் நுழைந்திலது. ஆதலின் அன்னையாரை அணுகி, அவர் அறச் செய்கையில் நுழைந்ததற்குக் காரணம் யாது என மெல்லிய குரலில் வினவினான்.

உதயகுமரனைக் கண்டவுடன் மணிமேகலையார் மனந் திடுக்கிட்டது. தம் அறச் செய்கைக்கு அவன் என்னதீங்கு செய்வானோ என்பதுதான் அவர் கவலை. ஆயினும், முன் பிறவியில் அவன் தமக்குக் கணவன் என்னும் எண்ணத்தினால் அன்னையார் அவனை வணங்கினார். அவர் நா சில நீதிகளை அவனுக்கு வழங்கிற்று: "வினையின் பயனாகவே மானிடர் தோன்றுகின்றனர். பின்னர் பல துன்பங்களும், முதுமையும், பிணியும் அவர்தம்மைப் பிணிக்கின்றன; இறுதியில் இறக்கின்றனர்.

இருக்கும் நாளில் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களோ அளவிறந்தன. இவ்வுடல் இடும்பை நிரம்பப் பெற்ற கலம் எனக் கூறின் மிகையாகாது. யாம் இவ்வுலகில் செய்யும் காரியங்கள் பலவும் உடலைப் பற்றியனவே யன்றி உயிரைப் பற்றியனவாகத் தோன்றில. மக்கள் உடலோ நீரிற்குமிழி யென அழியுந் தன்மையுடையது. மக்கள் யாக்கையின் இயல்பை நினைக்கில் பெரிதும் துன்பம் உண்டாகிறது. ஆதலின் இந்த நல்லறத்தை விரும்பிப் புரிதலுற்றேன். பிறர் நன்மையை நாடலே மக்களுக்கு மாண்பு. தன்னலம் கருதாக் காரியமே ஆன்மாவை ஆதரிக்கவல்லது'' எனப் பகர்ந்தனர்.

> ''பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
> இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
> மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்''
>
> —மணிமேகலை

பின்பு மணிமேகலையாருக்குச் சில எண்ணங்கள் தோன்றின. 'இவனோ தேக வன்மையும் செல்வச் செருக்கும் வாய்ந்தவன். இவன் வேட்கை மிகுதியும் நம்மாட்டுப் பதிந்துள்ளது. நாமுரைக்கும் அறவுரையை அவன் செவி ஏற்காது. இப்போது இவனுக்கு நன்மை உண்டாதல் அரிது. இவனால் நமக்குக் கெடுதி நேரினும் நேரலாம். வந்தபின் காத்தலைக்காட்டிலும் வருமுன்னர் காத்தலே சிறப்புடைமை' எனத் தீர்மானித்து, அவனை விட்டு நீங்கி, அவர் கோயிலி

னுள்ளே புக்கார்; சம்பாதிக் கடவுளை வணங்கி வேற்றுருவங் கொள்ளும் மந்திரத்தை உச்சரித்தார்; அவர் கருதியபடியே அவர் உடல் காய சண்டிகை வடிவத்தைப் பெற்றது; அவ்வுருவத்துடன் பிச்சைப் பாத்திரத்தைக் கையிற்றாங்கி வெளியில் வந்து நின்றாள்.

அவர் மணிமேகலையார்தான் என்றறிந்து கொள்ளும் ஞானம் உதயகுமரனுக்கு உண்டாகவில்லை. அவர் மாறுவேடங் கொண்ட மாண்பை அவன் எங்ஙனம் அறியக்கூடும்! தெய்வப் பாவையார் சம்பாதிக் கோயிலினுள்ளே சென்று ஒளிந்து கொண்டார் என்பதே அவன் எண்ணம். ஆதலின் அவன் சம்பாதியை வணங்கி, "பிச்சைப் பாத்திரத்தைக் காயசண்டிகையின் கரத்திலீந்து மணி-மேகலை எங்குச் சென்று ஒளித்தனளோ அறியேன். இங்குள்ள பாவைகளில் அவளும் ஒருத்தியாக இருக்கவும் கூடும்! அதைக் கண்டுபிடித்தல் அரிதினும் அரிதே! எங்ஙனமேனும் யான் அவளைக் காணுமல் போதற்கு ஒருப்படேன்! எனக்கு நீ அவளைக் காட்டல் வேண்டும்! எத்தனை நாளேனும் இவ்விடமே பாடு கிடப்பேன்! பல நாட்கள் செல்லினும் செல்லுக! அவளை இவண்விட்டுச் செல்ல என் மனம் இசைந்திலது! உன் திருவடியைத் தொட்டேன்! நீ இதைச் செய்தே தீரவேண்டும்!" எனச் சூளுரைத்து நின்றான்.

ஆங்குள்ள சித்திரத்தில் பதிந்திருந்த தெய்வம் ஒன்று, "நீ ஆய்ந்து நோக்காமல் சம்பாதிக் கடவுளின்முன் சூளுரை கூறினை! அதனல் பயன் சிறிதும் அடைதற்கியலாது!" எனக்

கூறிற்று. அவ்வார்த்தைகள் அவன் மனத்தைப் பெரிதும் புண்படுத்தின. 'முன்னொருகால் மணிமேகலையை மறப்பாய் என்னும் அசரீரியின் சொற்களைக் கேட்டோம். இப்போதோ இங்ஙனம் தேவதை செப்பியுள்ளது. இவை மிக்க வியப்பிற்கிடமானவையே. அவள் தாங்கி யிருக்கும் பாத்திரமும் தெய்வத்தன்மை பொருந்தியதாயுள்ளது. அவள் செய்கைகளோ இத்தன்மை வாய்ந்தனவெனத் தீர்மானிக்க நம்மால் இயலவில்லை! அவளிருக்குமிடத்தை நன்குணர்ந்து, பின்பு இவற்றை ஆராயலாம்' என எண்ணி நெட்டுயிர்ப்போடு தன் இருப்பிடத்தைச் சேர்ந்தான். ஆனல் அவனுக்கு மணிமேகலையார்மாட்டுக் கொண்ட வேட்கை மாத்திரம் குறையவில்லை.

அவ்வுதயகுமரன் செய்கைகள் மணிமேகலையாருக்கு இரக்கத்தையும் துயரத்தையும் ஒருங்கே அளித்தன. 'நாம் காயசண்டிகையின் வடிவத்தோடு இருத்தலே நலம். நாம், உண்மை உருவத்தைத் தாங்கில் இவ்வரசிளங்குமரன் நம்மைத் துன்புறுத்தல் நிச்சயம். நாம் செப்பிய இத்துணை நல்வார்த்தைகளில் திருந்தாத இவன், வேறென்றினல் நலமெய்துவன் என நினைத்தல் வெறும் மயக்கே. இனி இவனிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் வழியைத் தேடலே நம் கடமை' எனக் கருதி, அக்காயசண்டிகை உருவைத் தாங்கியே பிச்சைப் பாத்திரம் கையிலேந்தி, ஆங்காங்கே சென்று எளியோர் பலரையும் உண்பித்து வந்தார். அங்ஙனம் செல்லுங்கால் சிறைக்கூடம் ஒன்று அவருக்குப் புலப்பட்டது. அவண் போந்த அவர் அதிலுறும் மக்களை

உற்று நோக்கினர்; அவர் நெஞ்சம் பெரிதும் இரக்கங் கொண்டது. "யாவரும் குற்றம் செய்தல் இயல்பே. அவர்கள் நன்மதி பெறுதற்கேற்ற சிறு தண்டனையை அளித்தல்தான் நலம். இக்கொடிய தண்டனையால் அவர்கள் மனம் இன்னும் கொடிய வழியில் செல்லுமேயன்றி, நன்னெறியில் பாய்தல் அருமை. ஏன் இஃது அரசனுக்குப் புலனாகவில்லை? இங்கு யான் வந்ததற்கு என்னாலான உதவியை இவர்களுக்குப் புரிந்து செல்வேன்" என உன்னி, அமுதசுரபியிலுள்ள அன்னத்தை எடுத்தெடுத்து அவர்களை உண்பித்தார். அவர்களும் வயிறார உண்டு மகிழ்ந்தார்கள்.

இச்செய்கை அவணிருந்த காவலரை வியப்பி லாழ்த்திற்று. அப்பாத்திரத்தின் மகிமை இன்ன தென அறிய அவர்களால் இயலவில்லை. சிலர் விரைந்து அரசனிடம் ஓடினர். இச்செய்தியை அர சனிடஞ் சொல்ல அவர்கள் நா துடித்தது. அவ் வமயம் அரசன் தன் இல்லக் கிழத்தியோடு ஓர் அழகிய மண்டபத்தில் வீற்றிருந்தான். சென்ற காவலர் அரசனை வாழ்த்தி வணங்கி, "செங் கோலிற் சிறந்த செவ்வியோய்! பல்லாண்டுகள் யானைத்தீ என்னும் நோயினால் வருந்திய பெண் ணொருத்தி நம் சிறைக்கோட்டம் வந்துள்ளாள். அவள் பதுமம்போன்ற கையில் பிச்சைப் பாத்திரம் ஒன்றுள்ளது! அதினின்றும் அன்னத்தை வாரி வாரிச் சிறைச்சாலையிலுள்ள யாவருக்கும் ஊட்டு கின்றாள். அச்சிறு பாத்திரம் அவ்வளவு அன்னத் தைப் பெற்றிருத்தல் யாங்ஙனமோ அறியோம்! தருமதேவதை யெனவே அவளைக் கூறலாம்.

அவள் ஒரு பயனைக் கருதி இக்காரியம் செய்வ தாகத் தோன்றவில்லை. இதை உமக்குத் தெரிவித் தற்பொருட்டே இவண் வந்தோம்'' எனக் கூறினர்.

அரசன் அன்னையாரைக் காண விழைந் தான். அரசன் கட்டளை அவரை அரசன் முன் கொணர்ந்தது. மன்னன் மணிமேகலையாரை நோக்கி, "தவத்திற் சிறந்த வனிதையே! தன்னலம் சிறிதும் கருதாது பிறர் நலத்தையே நாடி நிற்கும் தையலாகிய நீ யார்? உன் இடம் யாது? இப் பாத்திரம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?'' என்று வினவினன். 'நம் உண்மை நிலையை இப்போது இவனுக்கு உரைத்தல் தகுதியுடையதன்று. அதனல் பல தீமைகள் விளையும்' என அன்னையார் கருத்துட்பட்டது. ஆதலின் அவர், மன்னனைப் பார்த்து "யான் ஒரு விஞ்சை மகள்; வேற்றுவடிவங் கொண்டு திரிகின்றேன். இப்பிச்சைப் பாத்திரம் அம்பலத்திலுள்ள தேவதை ஒன்றால் எனக்கீயப் பட்டது. இது தெய்வத் தன்மை பொருந்தியது; யானைத்தீ என்னும் கொடிய நோயையும் போக்க வல்லது; பசிப்பிணிக்கு அமுதம் போன்றது; வறுமையுற்றோர் வயிற்றை நிரப்பும் வன்மை பெற்றது; பஞ்சத்தைப் பறக்கடிக்கும் பண்பு வாய்ந்தது; மக்களுக்கு மகிழ்வையூட்ட வல்லது'' என இயம்பினர். இஃது அரசனுக்குப் பெரும் வியப்பை உண்டாக்கிற்று. 'இத்தகைய பாத்திரமும் உலகில் ஒன்று உண்டோ! இதை யான் என்றும் அறியேனே! இதனல் எத்தனை மக்களின் பசி நோய் ஒழியும்! இது நம் நாட்டிற்கே பெருஞ்சிறப்பை யளிப்பதா

கும். இத்தெய்வத் தன்மை வாய்ந்த பாத்திரம் இப்பெண்ணை வந்தடைந்தது பெருமிதமே! இவள் மிக்க புண்ணியம் வாய்ந்தவள்! இவளை அறச் செல்வி என்றே கூறலாம். தருமதேவதையே இங்ஙனம் உருக்கொண்டனளோ அறியோம். இவளைக் காண்டற்கும் பெருந்தவமியற்றி இருத்தல் வேண்டும்! இவள் எண்ணத்தை வெற்றி பெறச் செய்தல் நம் கடமையாகும்!' எனக்கருதி, "யான் இயற்றவேண்டுவது யாது?" என அன்னையாரைக் கேட்டான். அன்னையார் அரசனை வாழ்த்தி, "மக்கள் அநேகர் சிறைச்சாலையில் வருந்துதல் நலமன்று. அதை அறச்சாலை யாக்கின் உமது கொற்றம் நீடூழி வாழும்" என இயம்பினர். அங்ஙனமே அரசன் அச்சிறைச்சாலையைத் திருத்திப் பண்படுத்தினன். பல புண்ணியச் செயல்கள் அவ்விடத்தில் நடைபெற்றன. அது சான்றோரால் கொண்டாடப்படும் அறச்சாலையாக விளங்கிற்று. இவை யாவும் உதயகுமரன் செவிக்கெட்டின. அவனுக்குப் பெரும் வியப்புத் தோன்றிற்று. மணிமேகலையாரைப் பற்றி ஒன்றும் அவனல் தீர்மானிக்க முடியவில்லை. "கோவிலுக்குள் சென்ற மணிமேகலை என்னவாயினள்? அவள் கையிலிருந்த பிச்சைப் பாத்திரம் காயசண்டிகைபால் உறுதற்குக் காரணம் யாது? யானைத்தீயினல் வருந்திய இவளுக்கு இத்துணைப் பெருமிதம் எங்ஙனம் கிடைக்கும்? மணிமேகலையே நம்மை ஏமாற்றுதற்கு இவ்வுருவம் தாங்கி வந்தனளோ? அங்ஙனமாயின் பல வித்தைகள் அவளுக்குக் கைவந்திருத்தல் வேண்டும்! யான் இவற்றின் உண்மையை அறிதல் யாங்ஙனம்? யான் இப்போது நேராக உலக

வறவிக்குச் செல்வேன்; அவள் வெளிவரும்போது அவளைக் கைப்பற்றித் தேரிலேற்றிக் கொணர்வேன்; பின்பு அவள் கற்ற வித்தைகளை அவள் வாயிலாகக் கேட்பேன்; அவள் செப்பும் இனிய மொழிகளைக் கேட்டு என் செவி இன்புறும். அவள் பெற்ற பேறுகள் என் மனத்தை இன்பத்தில் ஆழ்த்தும்' எனத் தனக்குள்ளே எண்ணிக் கொண்டே உலகவறவியில் ஏறினான்.

அதே சமயத்தில் காயசண்டிகையின் கணவனான காஞ்சனன் என்னும் வித்தியாதரன் தன் மனைவியை நாடிக் காவிரிப்பூம்பட்டினம் போந்தான்; பூதச் சதுக்கம், பூஞ்சோலை, மன்றங்கள், முனிவர் தவச் சாலை, அம்பலங்கள் முதலிய பல இடங்களிலும் தன் இல்லக்கிழத்தியைத் தேடினான். எங்கும் அவள் காணவில்லை. அவன் மனம் துன்புற்றது. அவள் விந்தியமலையில் உயிர் துறந்ததை அவனறியான். காயசண்டிகை வடிவங்கொண்டு அமுத சுரபியைத் தாங்கி, பலர் பசிப்பிணியையும் நீக்கிக் கொண்டிருந்த மணிமேகலையார் அவன் கண்ணிற் பட்டனர். அவரையே அவன் தன் மனைவியெனத் தீர்மானித்தான். அவர் மணிமேகலையார் என்பதை அவன் எங்ஙனம் அறிந்திருக்கக்கூடும்! அவன், அவர் அருகில் அணைந்து, "இப்பாத்திரத்தை நீ எங்கிருந்து பெற்றனை? பாத்திரமொன்றும், அதில் உண்பவர் பலருமாயிருக்கின்றனரே! உன்னை வருத்திய யானைத்தீ என்னும் நோய் எங்ஙனம் நீங்கியது? அதை ஒழிக்கவே தேவர்கள் இப்பாத்திரத்தை உனக்கு ஈந்தனர் போலும்!" எனக் கூறிப் பழைய நட்பினைப் பாராட்டும் சொற்கள் பல

வற்றையும் பகர்ந்தான். அவன் கருத்து அன்னையாருக்கு நன்கு புலனாயிற்று. தம் விஷயத்தை அவ்வித்யாதரனுக்கு அப்போது விளக்கிச் சொல்ல அவர் மனம் இசைந்திலது. ஆதலின் வித்தியாதரன் வார்த்தைகள் ஒன்றையும்செவியில் ஏற்றுக்கொள்ளாமல், உதயகுமரன் உணர்ச்சி பெறுதற்கேற்ற சில அறவுரைகளைப் புகல அவர் மனம் விழைந்தது. அவனுக்கும் தமக்கும் தொடர்பிருத்தலின் அவன் நல்வழிப்பட வேண்டுமென்பது அன்னையார் கருத்து. அவன்மாட்டு அன்னையார் அனுதாபங் கொண்டனர். ஆகவே அவனை நோக்கி, "இவ்வுடல் என்றும் ஒரே தன்மைத்தாய் இருத்தற்பாலதன்று; மின்னலைப் போன்று தோன்றிமறையும் இயல்புடையது! இளமையோ நீரிற்சுருட்டும் நெடுந்திரையென விரைவில் மாய்தல் உண்மை! இதோ நிற்கின்ற இம்மூதாட்டியைப் பாரும். கருமணல் போன்ற அவள் கூந்தல் வெண்மணல் போன்று மாறிவிட்டது. மாசற்ற சந்திரனைப் போன்ற அவள் முகம் திரைந்து அழகிழந்துள்ளது. வில்லையும் பழித்த புருவம் இறால் மீனின் வற்றலாயிற்று. குவளையை ஏய்த்த கண்கள் வழுநீரைக் காலுகின்றன. நிரைமுத்தெனவிளங்கிய பற்களும் வீழ்ந்தொழிந்தன. இளமூங்கில் போன்றிலங்கிய தோள்களோ தெங்கின்மடல் போன்று திரங்கிச் சாய்ந்தன. மலரினாலும் சாந்தினாலும் புலால் நாற்றத்தை நீக்கி, ஆடை அணிகளால் உடல் அழகைப் பெருக்கிக் கொள்ளும் வஞ்சத்தை நீர் யறியீர். இதை உணரில் நிலையற்ற இவ்வின்பத்தில் மனஞ் செலுத்தாது துறப்பீர். இவை வெறும்

மயக்கு என்பதை எடுத்தியம்பவே யான் உம்பால் எய்தினேன். உயிர்க்குறுதி நாடலே மக்கட் பிறவியின் பயன். இன்றேல், மக்களுக்கும் மற்ற மிருகங்கட்கும் வேறுபாடு இன்ருய் முடியும். சிறிது ஆழ்ந்து நோக்கின், சிற்றின்பத்தின் சிறுமை புலனுகாமலிராது. அதனை ஊன்றி நோக்காமையே குற்றத்திற்குக் காரணம். நீரோ மன்னரின் புதல்வர்; அறிவிற் சிறந்த ஆண்மையர்; மேற்கொண்டதை ஆற்றும் கொள்கையர். இத் தகையோர் இவ்வற்ப எண்ணத்தை யொழித்து ஆன்ருேர் செல்லும் நெறியில் படர்தலே நலம்'' என்னும் பல கட்டுரைகளை எடுத்தியம்பினுர்.

அன்னையார், உதயகுமரனுக்கு இயம்பிய அரும் பொருள்கள் யாவற்றையும் அங்கு நின்ற காஞ்சனன் செவியேற்ருன். அவர், தன் இல்லக்கிழத்தியாகிய காயசண்டிகை யென்பதே அவன் கருத்து. அவனுக்குச் சினம் மூண் டெழுந்தது. 'நம் அன்பு வார்த்தைகள் ஒன்றை யும் இவள் அகம் கொண்டிலது; நம்மை அய லானைப் போன்று அசட்டை செய்தாள். வேறெருருவனுக்கு இவள் வாய் பல அன்பு நிறைந்த வார்த்தைகளை இயம்பிற்று. அவ்வார்த்தைகளில் அன்பு மாத்திரமோ, அறப் பொருள்களும் நிரம்பி யுள்ளன. இதனுலேயே இவளுக்கு அவனிட முள்ள அன்பு தெள்ளிதின் புலப்படுகின்ற தன்ருே? இவள் நம்மை நோக்கி வாராததற்குத் தக்க காரணம் இதுவேயாகும். இன்னும் நடப்ப வற்றைக் காணலாம். எங்ஙனமேனும் அவனை ஒழித்தலே தகுதி' எனக் கருதிப் பெருஞ் சினத்

துடன் புற்றிலடங்கிய பாம்பு போன்று அவ்வுலக வறவியின் ஒரு புறத்தில் அவன் ஒளித்திருந்தான். இதை உதயகுமரனும், மணிமேலையாரும் சிறிதும் உணர்ந்தனரில்லை. அன்னையாரின் அறச்சொற்களுள் ஒன்றும் உதயகுமரனை நல்வழிப்படுத்தும் வன்மை வாய்ந்திலது. அப்புண்ணியத்தை அவன் பொருந்திலன். அவன் கொடிய ஊழ்வினை பின்னும் அவனை ஊக்கிற்று. அவனுக்கு அன்னையார் மாட்டிருந்த வேட்கை விஞ்சியது. 'பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிற்கும் இவள் காயசண்டிகையல்லள்; மணிமேகலையே. நம்மை மயக்கவே இவள் இவ்வேடம் தாங்கி நின்ருள். இதனுல் நாம் ஏமாற்றம் அடைவோமென நினைத்தாள்போலும்! உலக இயற்கையை யான் உணரேனு? முதிய மக்களை யான் என்றும் கண்டதில்லையா? இஃது ஒரு விந்தையெனக் காட்டினளே. உயிர்கள் மூத்தலும் இறத்தலும் உண்மையே. அதன் காரணமாக மக்கள் உண்ணுமலும் உறங்காமலும் இருக்கின்ருர்களா? அவ்வக் காலத்தில் துய்க்கவேண்டிய இன்பங்களையும், பெருமிதங்களையும் விடுதற்கியலுமோ? மக்களாய்த் தோன்றியது எதற்கு? இடம்விட்டு இடம் பெயரா அஃறிணைப் பொருள்களைப் போன்று ஓரிடத்தல் அடங்கிக் கிடக்கவோ! யான் மன்னன் மகனல்லனே? என்னுல் ஆகாத காரியமுமுண்டோ? இவ்வேசிப் பெண்ணை வயப்படுத்த என்னுல் ஆகாதோ? ஏதோ இவளே மனமிசைந்து ஒருப்படில் நலமென நினைத்தேன். அஃது இவளிடம் நடவாது. யான் கொண்ட கருத்தை இவளறிந்தாளில்லை. இவளுக்கு யான்

பயந்துள்ளேன் என்பது இவள் கருத்து. இத ஞல் தன்னை மிக்க பெருமிதமாக நினைத்திருத்தல் மட்டுமேயன்றி, நமக்கு அறிவு புகட்டவும் வந்து-விட்டாள். வேதாந்தத்தை எல்லாம் உணர்ந்த இவள் இதைக் கற்கவில்லையா! யாரோ அயலான் ஒருவன் இவளை அறிந்தவன் போன்று பழமை பாராட்டிப் பேசுகின்ருன்; இவள் மாட்டு அன்பு கொண்டவன் போன்றும் தோன்றுகிருன். ஆத லின் இவ்விரவு இவன் இவண்விட்டு நீங்கான். இன்றிரவு நடுயாமத்தில் இங்குப் போதரின் இவள் மயக்குகள் யாவற்றையும் நன்குணரலாம். இதுவே தக்க காரியம்' என்று எண்ணிக் கொண்டே தன் இருப்பிடஞ் சேர்ந்தான்.

இவ்விருவர் தீய எண்ணங்களையும் வஞ்சனை யற்ற அன்னையார் சிறிதும் உணர்ந்தாரில்லை. கள்ளர்க்கல்லவா கள்ளம் புலம்படுதல்! தம் அவ மதிபிப்ஞலும் அறவுரைகளிஞலும் முறையே காஞ் னனும் உதயகுமரனும் வெறுப்பையும் நல் வழிப்படுதலையும் அடைந்தனர் என்பது அன்னை யாரின் கருத்து. அந்தோ! அவர் எண்ணம் முற் றும் பிழையே! பின்வரும் விளைவு அவருக்குப் புலஞகவில்லை. அவர் மனம் சிறிது ஆறுதலடைந் தது. 'இனி ஏழைகள் பிழைத்தார்கள். நாம் பல இடங்களிலும் சென்று பசியாளரை உண் பிக்கலாம். நம் காரியம் குறைவற நடத்தற்கு அறவணவடிகள் அருள் வேண்டும். இனி நாம் ஒருவருக்கும் அஞ்சவேண்டுவதில்லை,' எனத் தனக்குள்ளே நினைத்து மகிழ்ந்தார்.

உதயகுமரன் முன் எண்ணியவாறே நடு யாமத்தில் உலகவறவியை வந்தடைந்தான். அது, நஞ்சும் கோபமும் மிகுந்த நாகமடங்கிக் கிடந்த புற்றைக் கருடன் வந்தடைந்தது போன்றிருந்தது. கோபத்தீயினுல் எரிந்துகொண்டிருந்த காஞ்சனன் கண்கள் அவனை நோக்கின. தன் மனைவி காய சண்டிகையை நாடியே அவன் அங்கு வந்தான் என்பது காஞ்சனன் எண்ணம். வேறெதையும் அவன் சிந்தித்தானில்லை. சிறிது காலம் தாழ்த்தவும் அவன் சினம் இடந்தந்திலது; அச்சினம் அவனை உந்தியது. உடனே அவன் முன்பின் நோக்காது விரைந்து சென்று உதயகுமரனை வெட்டி வீழ்த்தினுன்.

சினம் எத்தீய செய்கையைத்தான் செய்யத் தூண்டாது! உதயகுமரன் கொடிய ஊழும் உடன் கலந்தது. சினமாகிற தீ ஊழாகிய காற்றினுல் கொழுந்துவிட்டு எரிந்து ஓர் அருமை உயிரை விழுங்கிவிட்டது.

மன்னன் மகன் விழுந்தவுடன், காயசண்டி கையுடன் ஆகாய வழியே செல்ல நினைத்த காஞ்சனன் அன்னையார் அருகில் சென்றனன். அவணுள்ள கந்திற்பாவை காஞ்சனனை விளித்து, "நில் நில், அவளிடம் செல்லாதே! அவள் உன் இல்லக்கிழத்தி காயசண்டிகையல்லள். மணிமேகலை யென்பாள். அவள் பெற்ற மந்திர வன்மையினுல் இவ்வுருவம் தாங்கினுள். இஃது உதயகுமரனிட மிருந்து தப்பிப் பிழைத்தற்குக் கொண்ட வடிவ மாகும். காயசண்டிகை விந்தியமலைக்கு நேராகச் சென்று, விந்தாகடிகையின் வயிற்றில் அடங்கி-

விட்டாள். இப்போது உன் வாளால் வெட்டுண் டிறந்தவன் உதயகுமரன். அவன் உயிர் துறந்தது ஊழின் காரியமே. ஆயினும் நீ சிறிதும் ஆராயாது இவ்வறிவற்ற காரியத்தை இழைத்தனை! அவ் வினை விடாது பின்தொடர்ந்து உன்னை வருத்தும்'' எனச் செப்பிற்று. இதனால் ஆற்றெ ணாத் துன்பத்துடன் காஞ்சனன் தன் இருப் பிடத்திற்குச் சென்றான்.

மணிமேகலையாருக்குக் கந்திற்பாவையின் வார்த்தைகள் வியப்பை யளித்தன. தள்ளாத் துயரத்துடன் மணிமேகலையார் உதயகுமரன் அரு கில் வந்தடைந்தார். அவரை அறியாமலே வருத் தம் மேலிட்டது. முற்பிறவியின் தொடர்பு அவரைத் துக்கத்தில் மூழ்கச் செய்தது. அவர் அவனை உற்று உற்று நோக்கினார்.

"அந்தோ, விளைவதறியாது இவண் வந் தீரே! இப்பிறவியிலும் உமது விதி இங்ஙனமா முடிதல் வேண்டும்! முன்போ திட்டிவிடம் உமது உயிரைப் போக்கிற்று! இப்போதோ காஞ்சனன் வாள் உம்மை வெட்டி வீழ்த்திற்று! என் நீதி வார்த்தைகள் உம்மை நேர்மைப் படுத்தினவென்று கருதினேனே! யானும் உம்மைப் போன்று அலக் கழிய வேண்டியவள்தான்! ஆயினும் எனக்கு முற் பிறவியின் புண்ணியம் சிறிதிருந்தது போலும்! அன்றியும் மணிமேகலா தெய்வத்தின் அருளையும் யான் பெற்றுள்ளேன்! உம்மை இழந்த இத்துன்பத் திற்கு என் செய்வேன்! என் மனம் பதைக்கின் றதே!'' எனச் செப்பி அவர் பெருமூச்செறிந்தார். அவர் கண்களினின்று தீப்பொறி பறந்தது; உடல்

தள்ளாடியது; ஆற்றெருணுத் துயரத்துடன் உதய-குமரன் உடலின்மேல் விழச் சென்ருர்.

அங்ஙனம் செல்லுகின்ற மணிமேகலையாரை கந்திற் பாவையில் கலந்திருந்த தெய்வமொன்று தடுத்தது. "பழம் பிறப்பு முழுதும் உணர்ந்து, ஞானம் பெற்ற நீ இத்தூய்மையற்ற காரியத்தைச் செய்தல் தகுதியுடையதன்று. நிலையற்ற இவ்வுலக விஷயங்களில் இங்ஙனம் கலங்குதல் கூடாது. மனத்தெளிவே மக்களுக்கு மாண்பை யளிக்க வல்லது. நீயே ஆழ்ந்து சிந்திக்கில் இத்துயர் ஆதாரமற்றது என்பதை நன்கு உணர்வை. நீயோ இப்பிறவியில் உயர்வை யடைந்துள்ளாய்! பிறவியை ஒழித்துக்கொள்ளும் அறிவு உன்னைச் சார்ந்துள்ளது. ஆதலின் நீ வருந்துதல் தகுதியுடையதன்று" எனப் புத்தி புகட்டி, அன்னையாருக்கு இனி நிகழப் போகும் செய்திகளையும் தெளிவாக விளக்கிற்று. அவ்வுதயகுமரன் குற்றமற்ற சமையற்காரன் ஒருவனை ஆராயாது வாளால் வீசியதே, இவ்விரு பிறவிகளிலும் அவன் அகால மரண மடைந்ததற்குக் காரணம் எனவும் அத்தெய்வம் செப்பியது. இவை மணிமேகலையார் மனத்தில் நன்கு பதிந்தன. அவர் ஒன்றும் பேசத் திறனற்று வாளாவிருந்தார். மறு-நாள் காலையில் சம்பாதிக் கடவுளை வணங்கச் சென்ற பலரும் வெட்டுண்டு கிடந்த உதயகுமரனின் உடலைக் கண்டனர். அக்காட்சி அவர்களைத் திடுக்கிடச் செய்தது. அவர்கள் ஓடோடியும் சென்று, அவணுள்ள முனிவர்களுக்குத் தெரிவித்தார்கள். அவண் போந்த முனிவர்கள் வெட்டுண்டு கிடக்கும் உதயகுமரன் உடலையும், அங்கிருந்த மணிமேகலையாரையுங் கண்டார்கள். முனிவர்கள் அன்னையாரை

வினவ, அவர் நடந்த யாவையும் அவருக்குத் தெரிவித்தார்.

இதைத் தெரிவிக்க அரசனிடஞ் சென்ற முனிவருள் சிலர், முதலில் அவனுக்கு உதயகுமரன் செய்தியைக் கூறிற்றிலர்; மாதர் மாட்டு நெறியற்ற முறையில் வேட்கை கொண்டு உயிர்துறந்த பல்லோர் சரிதங்களை அரசனுக்கு எடுத்து இயம்பினர். அதனின்றும் இப்போது அவ்வாறு ஏதேனும் நிகழ்ந்ததோ என்பதை அறிய அரசன் மனம் அவாவியது. பின்பு முனிவர் உயரிய எண்ணத்தைக் கொண்டு அறவழியில் நின்ற மணிமேகலையாரை விரும்பி உதயகுமரன் உயிரிழந்த செய்தியை அரசனுக்குத் தெரிவித்தனர். மன்னன் மனம் கனலிலிட்ட மெழுகெனக் கரைந்தது; முகம் செக்கர் வானமெனச் சிவந்தது; கண்கள் துடித்தன; உடல் பதறியது; அவன் ஒன்றும் உரையாது சிறிதுநேரம் வாளா இருந்தான். ஆனல் அரசனுக்கு இத்தனை மாறுதல்களும் உண்டானதற்குக் காரணம் தன் புதல்வனின் மரணமேயெனச் சிலர் கருதலாம். அதன்பொருட்டு மன்னன் சிறிதும் வருந்தினனில்லை. அத்தகைய கொடிய செயலில் தன் மகன் நுழைந்ததே அவன் மனத்தைப் பெரிதும் வருத்திற்று.

“தன்னை விரும்பாத மகளைத் துன்புறுத்தல் எத்துணைக் கொடுமை! இவன் கற்ற நூல்களும் பெற்ற வீரமும் என்னவாயின! பொது அறிவற்ற இவனும் புதல்வனுவான! பசுவின் கன்றிற்காகத் தன் மகனைத் தேர்க்காலிலிட்ட மன்னன் மரபில் பிறந்தானே! இத்தீவினையாளன் பிறவாமலிருப்

பினும் நம் குலத்திற்கு இப்பழிப்பு ஏற்பட்டிராதே! பிள்ளை பிறப்பது எற்றுக்கு? குலப் பெயரைப் புகமுடன் நிலைநாட்டவன்றே? இத்துணை அறிவற்ற மக்களால் மரபு மாண்புறுமா? இழிவை யன்றே ஏற்கும்! அறிவறிந்த மக்கட் பேற்றை யல்லவா உயர்ந்தோர் விரும்புவர்! இக்கொடிய மகனுக்கு யான் கொடுக்க வேண்டிய தண்டனையை வித்தியாதரன் கொடுத்தான். செங்கோன்மை மாறாது அரசு நடாத்திய குடியில் இத்தீவினையாளன் தோன்றினன் என்பதை உலகம் அறியில் என்ன இயம்பும்! பழிக்க முற்படாதோ? ஆதலின் இதை உலகம் உணருமுன் இவனைச் சுடுகாட்டில் இடுவியுங்கள். இதற்குக் காரணமாயிருந்த கணிகை மகள் மணிமேகலையையும் சிறைப் படுத்துங்கள்" என்றான். ஏவலாளர் அவ்வாறே உதயகுமரனைச் சுடுகாட்டிலிட்டு, மணிமேகலையாரைச் சிறையிலிட்டனர்.

தன் புதல்வன் கொலையுண்டதைக் கேட்ட இராஜமாதேவி ஆற்றொணுத் துயரத்தில் ஆழ்ந்தாள். அவளைத் தேற்ற அநேகர் முற்பட்டனர். ஆனால் அது பயனளித்திலது. இறுதியில் வாசந்தவை என்னும் முதியாள் ஒருத்தி பல நீதிக் கட்டுரைகளைக் கூறி, அரசியின் வருத்தத்தை ஒருவாறு ஆற்றிச் சென்றாள். அப்போதும் அவள் கவலை முற்றும் தணிந்திலது. தன் மகன் இயற்றியது பெருங்கொடுமை என்பதை அவள் உணராமலில்லை. ஆயினும் அம்மகனன்பு அதை மறைத்தது. பிழையுடையனேனும் பிழைத்திருத்தல் நலமென அவள் நினைத்தாள். தன் மகன் மரணத்திற்குக் காரணமாயிருந்த மணிமேகலையாரின்-

மாட்டு அவளுக்குச் சினமூண்டது. 'அக்கொடிய இளம் பெண்ணினலல்லவா என் அருமை மகனின் ஆருயிர் நீங்கிற்று! அரசன் மகன் என்றேனும் அவள் சிறிதும் அஞ்சினளில்லையே! என் மகனுக்கு உடன்படின் அவளுக்குண்டாகும் இழிவு என்னை? அவள் குலத்திற்கு ஈனம் வந்துவிடுமோ? உயர் குலத்திற் பிறந்த உத்தமியோ அவள்? பல மலரிடத்தும் சென்று தேனுண்ணும் வண்டின் இயல்பு வாய்ந்த மரபில் பிறந்த அவளுக்கு இஃதொரு பெருமையோ! அவளுக்கொரு பிக்குணி வேடமாம்! அன்னதானம் வேறும்! அருமை மைந்தன் உயிருக்கு உலைவைத்த அவள் ஆவியைப் பறிக்காது, வெறும் சிறையில் வைத்த அரசர் மயக்கை என்னென்பேன்! தம் மகன் பிற மகளின்மேல் வேட்கை கொண்டது பிழையென அவர் கருதினர்போலும்! அவள் குலமகளாயின் அது குற்றமாகும்! ஒரு நாட்டில் வேசி ஒருத்தி இருந்தால், அவளைப் பலரும் விரும்பாரோ? அங்ஙனம் இச்சித்தவரை இறக்க விடுதல்தான் தகுதியோ? இஃது எந்நாட்டில் நிகழும்? அதினும் அரசைத் தாங்கப் போகும் ஆருயிரையா கவர்தல்! மகுடஞ் சூடப் போகும் மன்னனல்லனோ அவன்? தேசத்திற்கு இன்பமூட்டும் இளவரசனையல்லவோ கொன்றாள்! என்ன தீரம் அவளுக்கு! இத்தகைய மனவன்மை வாய்ந்தவள் இன்னும் என்னதான் செய்யாள்! அந்தோ! என் அரசச்செல்வனை யான் காண்பது என்றோ! என் ஈன்ற வயிறு எரிகிறதே! என் குலமகனைக் கொலைக்குள்ளாக்கி, அவள் மட்டும் இன்னும் குட்டிச்சுவர் போல் இருக்கின்றனளே! அவள் செய்த குற்றத்திற்குச் சிறைவாசம் போதி

யதோ? அவளை உயிருடன் காண என் மனம் எங்ஙனம் பொறுக்கும்! அரசரோ அவளுக்கு ஒரு தீங்கையும் செய்யார். ஆதலின் அவளை என்னிடம் கொணர்ந்து வஞ்சனையால் அவளை வருத்துவேன்! அப்போதுதான் என் மனம் ஆறுதலடையும்!' என அவள் ஓர் உறுதியான எண்ணத்தைக் கொண்டாள்.

ஆகவே, இராஜமாதேவி அரசனை நோக்கி, "செங்கோலரசே! அறச்செய்கையை மேற்கொண்டொழுகும் மணிமேகலையை நம் புதல்வனின் காரணமாகச் சிறையில் வைத்தல் ஒருகாலும் தகுதியுடையதன்று. அவள் பிறந்தது கணிகையர் குலமேயாயினும், அவள் உத்தம மகளிரினும் உயர்நிலையில் உள்ளாள். தன்னலங் கருதாது மக்கள்மாட்டுத் தண்ணளி காட்டித் திரியும் மாதரசிக்கா நாம் துன்பமிழைத்தல்? செல்வம் திரட்டலை அவள் சிறிதும் மதித்தாளில்லை; தெய்வத் தன்மையில் தெளிந்துள்ளாள்; அவள் சிறப்பு யாராலும் இயம்புதற்கியலாது. அந்நெறியினின்றும் அவளை வேறுபடுத்த நினைத்தது, நம் மகனின் குற்றமேயாகும். அவள் பிக்குணிக் கோலத்தைக் கண்டும் அவளை விரும்பிய உதயகுமரன் அரசிற்குச் சிறிதும் பொருத்தமானவனல்லன்; அக்கொடுந் தொழிலிற்கேற்ற தண்டனையை அவன் அடைந்தான். அத்தீய மகனிருந்தும் பயனென்னை? அதன் பொருட்டு நாம் வருந்துதலும் தக்கதன்று. ஆனால் தன் இளமையைக் கருதாது, பொருளில் நசையற்று உலக நன்மைக்கே உழைக்கும் பேரறிவு வாய்ந்த மணிமேகலையானவள் சிறையிலிருத்தல்

தக்கதன்று. அவளைச் சிறையினின்றும் விடுவித்தலே தகுதி. இளங்கொடி போன்ற அவள் பிச்சைப்பாத்திரம் ஏந்தி, யாவரையும் உண்பிக்கினும் உண்பிக்க. அன்றி என்னுடன் வதியினும் நலமே வதியலாம்'' என உள்ளொன்று வைத்துப் புறமொன்ருகப் புகன்ருள்.

இவள் வஞ்சகக் கருத்தைச் சிறிதும் உணராத மன்னன், மணிமேகலையாரைச் சிறையினின்றும் விடுவித்து இராஜமாதேவியுடன் வதிய அனுப்பினன். அஃது அரசிக்கு மிக்க மகிழ்வை உண்டாக்கிற்று. தான் நினைத்த காரியம் முடிந்து விட்டதென்பதே அவள் தீர்மானம். 'இக்கொடிய பாவி உயிர் துறப்பதற்கு இனி யாதொரு தடையும் இன்று! நம்மை விட்டு இவள் எங்குச் செல்ல முடியும்? காலனைக் கடந்து சென்ற உயிருமுண்டோ? மன்னன் மகனைக் கொலை புரிந்தும், தப்பித்துக்கொண்டோம் என்னும் செருக்கன்றோ இவளைச் சூழ்ந்துள்ளது! பழிக்குப் பழிவாங்க யான் ஒருத்தி யிருப்பதாக இவள் அறிந்தாளில்லை! இவள் பெருமையைப் பார்க்கிறேன்! இவளைப் பைத்தியம் பிடித்தவளாகச் செய்வேன்! அந்தப்பித்தினுல் இவள் தெருக்கள்தோறும் திரிந்து பலருக்கும் தீமை புரிவாள்! இவள் கொடுமையைப் பொருத பலரும் இவளை அடித்து வருத்தட்டும்!' எனக் கருதிப் பித்துண்டாக்கும் மருந்து ஒன்றை இராஜமாதேவி மணிமேகலையாருக்கு ஊட்டினுள்.

மறு பிறப்புணரும் மாண்பு வாய்ந்த நம் அன்னையாருக்கு அரசியின் மயக்க மருந்து ஒரு கெடுதியையும் இழைத்திலது. அவர், அறிவு மாறு-

பாடின்றிப் பழையபடியே பெருமிதத்துடன் இருந்தார். பின்பு இராஜமாதேவி, அறிவற்ற இளமகன் ஒருவனை நோக்கி, "அந்தப்புரத்தில் அழகிய பெண்ணொருத்தி யுள்ளாள். அவள் உடலில் சில குறிகளை யுண்டாக்கி, அவள் என்னை விரும்பினாள் எனப் பலருக்கும் கூறுவாயாக" எனப் புகன்று, அக்காரியத்தைச் செய்தற்கு மிகுதியும் பொற்காசுகளைக் கொடுத்து அவனை ஊக்கினாள். வருவதோராது, கேவலம் பொருளை மாத்திரம் விரும்பிய அவ்வறிவிலி அரசியின் கட்டளைப்படியே அந்தப்புரம் சென்றான். அந்தப்புரத்தில் ஆடவனைக் கண்டவுடன் மணிமேகலையார் மனம் ஐயுற்றது. இஃது இராஜாமாதேவியின் வஞ்சனையே என்பதை அவர் அறிவு வரையறுத்தது. உடனே வேற்றுருவங் கொள்ளும் மந்திரத்தை உச்சரித்து அவரும் ஆண் உருவத்தில் நின்றார். அதைக்கண்ட அவ்விளமகனின் நெஞ்சம் நடுங்கிற்று; உடல் விதிர் விதிர்த்தது; கால்கள் தள்ளாடின. 'அரசரின் அந்தப்புரத்தில் ஆடவனாகிய யான் அணுகலாமோ? இதை யாரேனும் காணின் என்னை உயிருடன் விடுவரோ? சிறு பொருளை நச்சிச் சிக்கலில் அகப்பட்டுக்கொண்டேனே! எனக்கு உண்மை அறிவிருப்பின் இத்தீய காரியத்தில் நுழைவேனா! இராஜமாதேவியின் தீய எண்ணத்தை யான் அறியாமற் போனேனே! யான் எங்ஙனம் இவண் விட்டு அகல்வது!' எனப் பயந்தவனாய் அவ்விடத்தைவிட்டு அவன், விரைந்து வெளியே சென்றான்.

இதுவும் கைகூடாமல் போகவே, இராஜமாதேவிக்கு மிக்க வருத்த முண்டாயிற்று. 'இவள்

பெரு மாயக்காரி; எதற்கும் அஞ்சாள்; என் அருமை மகன் உயிரைக் குடித்த இவளை இனி உயிருடன் வைத்தல் ஒருகாலும் தக்கதன்று' எனச் சினங் கொண்டாள்.

அக்கோப மிகுதியால் அரசி, பொய்ந்நோய் ஒன்றை மணிமேகலையார்மேல் சாத்தி, "அவள் நோயினால் வருந்துகின்றாள்" என யாவருக்கும் கூறினாள். புழுக்கறை ஒன்று அவருக்கு இருப் பிடமாகத் தரப்பட்டது. உணவு அவர் அருகிலும் அணுகிற்றிலது. பட்டினியால் அவர் ஆவியைப் போக்கவேண்டு மென்பதே அரசியின் கருத்து. அன்னையாரின் அருந்தன்மையை அற்பகுணம் வாய்ந்த அவள் அறிதல் யாங்ஙனம்? அன்னை-யாருக்கோ இக்கொடுமை சிறிதும் துன்பத்தை இழைத்திலது. அப்போது அவர் பெற்ற ஊணொழி மந்திரத்தைப் பயன்படுத்தினார். அம்மந்திரம் அவரை, நன்கு உண்டு வாழ்ந்தவர் நிலையில் வைத் தது. அரசி வைத்த புழுக்கறையிலிருந்து வெளிவர அவர் விரும்பவில்லை; சிறிதும் தளர்ச்சியின்றி அவ்வறையிலேயே இருந்தார்.

இக்காட்சி இராஜமாதேவிக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது; வியப்பை மட்டுமா? நடுக்கத் தையும் உண்டாக்கிற்று. 'இவள் தெய்வத்தன்மை பொருந்திய தேவியே! பற்றற்ற பண்பு இவளிடம் பொருந்தியுள்ளது! மனத்துறவு கொண்ட இவள் மாண்பை என்னென்பேன்! எத்துணைத் துன்பங் களும் இவளை வாட்டில! என் மகன் இவளை விரும்பியது பெரும் பிழையே! அவன் மரண மன்றோ இவ்வுத்தமியை இங்ஙனம் வருத்துமாறு

என்னைத் தூண்டிற்று! யான் இவளுக்கு இழைத்த துன்பம் கொடிதினும் கொடிதே! என் செய்வேன்! எல்லாம் அஞ்ஞானத்தின் பிழம்புதான்! கண் கூடாகப் புரிந்த இத்தனைத் தீமைகளுக்கும் இவள் வாய் தீய சொல் ஒன்றையேனும் கூறியதா! இவ் வளவையும் தாங்கி நின்றது இவள் பொறுமையே யன்றோ! அன்றலர்ந்த தாமரையைப் போன் றன்றோ இவள் முகம் ஒளிருகின்றது! என்ன பொறுமை! என்ன பொறுமை! பெருந்தன்மை யும் கலந்தன்றோ இவளிடம் பிறங்குகின்றது! இம்முறையில் தீமை புரிந்த என்னைச் சிறிதும் வெறுக்கின்றாளில்லையே! எனக்கும் இவளுக்கும் எவ்வளவு வேறுபாடுள்ளது! என்னை ஓர் அரசி என்றும், உயிர்களைக் காக்கும் உத்தமியென்றும், இவளை விலைமாது என்றும், யாவரையும் வஞ்சிப் பவள் என்றும் உலகம் கூறுகின்றதே! இவை எவ்வளவு மட்டும் செய்கையில் இருக்கின்றன வென்பதைச் சான்றோர் ஆழ்ந்து நோக்கில் புல னாகாமல் இரா! ஒருவராலும் தடுக்கலாற்றா இம் மூன்று தீமைகளையும் கடந்து நிற்கும் இப்பெருந் தகையாளுக்கு என்னைத் துன்புறுத்த வெகு நேரம் ஆகுமா? ஓரிமைப்பில் அஃது இவளுக்கு முடி யாதோ? அவற்றை ஒழித்து நிற்கும் இவள் பெருந்தன்மையை என்னென்பேன்! இவளை மன்னிப்புக் கேட்டலே எனக்குத் தகுதியுடைய தாகும்! இன்றேல் நான் நல்வழிப்படல் முயற் கொம்பே!' எனத் தீர்மானித்தாள்.

ஆகவே, அரசி மணிமேகலையாரை நோக்கி, "அம்மணி, உனக்கு யான் பெருங்கொடுமைகள்

இழைத்தேன்! அவை பொறுக்கும் தன்மையுடைய னவல்ல! மன்னிப்புக் கேட்டற்கும் என் மனமெழவில்லை! என் மகன் இறந்த வருத்தமே என்னை இங்ஙனம் செய்யத் தூண்டிற்று! உன் கடவுள் தன்மையையும் பொறுமையையும் நன்குணர்ந்தேன்! நீயே உத்தமி! நின் நிலைமையே உயர்ந்தது!'' எனச் செப்பி அன்னையாரை இறைஞ்சிநின்றாள்.

உயர் நிலையில் நின்ற மணிமேகலையாருக்கு அவள் புரிந்தவொன்றும் பெருங் குற்றமாகத் தோன்றிற்றிலது. இது மக்கள் இயல்பு என்பது அவர் எண்ணம். 'இராஜமாதேவி மகன் இறந்த துன்பத்தைப் பெரிதாகக் கருதினளேயன்றி, அதற்குக் காரணம் யாது? அப்பிழை யாரைப் பற்றியது?' என்பவற்றை ஆழ்ந்து நோக்கினாள் இல்லை. இதற்கேற்ற ஆராய்ச்சி அவளிடம் மிகக் குறைவு. என் செய்வாள் பாவம்! இதற்காக அவளைப் பழிப்பதில் பயன் யாது?' என்னும் சில எண்ணங்கள் அவருக்குத் தோன்றின. ஆதலின் அன்னையார் இராஜமாதேவியாரை நோக்கி, ''அரசியே! இவ்வுதயகுமரர் சென்ற பிறவியில் நீலபதி என்னும் ஓர் அம்மையாரைத் தாயாராகப் பெற்றிருந்தார். அப்போது யான் அவருக்கு இல்லக் கிழத்தியாக அமைந்திருந்தேன். அப்பிறவியில் அவர் திட்டிவிடத்தினால் இறந்ததைப் பொறாது யானும் அவருடன் தீக்குளித்து உயிர் துறந்தேன். அவர் இப்பிறவியில் உமக்குப் பிள்ளையாகத் தோன்றினார். இங்ஙனம் மக்கள் பல பிறவிகள் தோறும் வெவ்வேறு தாய் தந்தையர்

களை அடைதல் இயல்பு. உயிர்கள் பிறத்தலும் இறத்தலும் புதியன வல்லவே! பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் நாம் தினந்தோறும் காணும் காட்சிகளல்லவா? இதற்கு வருந்துதல் சான்றோர் கொள்கையன்று. இஃதொரு நுட்பப் பொருளே! ஊன்றி நோக்குபவர்க்கே இது புலனாகும். இதன் ஆழத்தை யறியாது வருத்தத்தினால் பிறருக்குத் தீங்கு இழைக்க நினைத்தல் ஒருபோதும் பொருத்தமுடையதன்று. அங்ஙனம் நீர் வருந்தியது எதைக் கருதி? உமது மகன் உடலைக் கருதியா? உயிரைக் கருதியா? உடலைக் கருதியாயின், உமது மகன் உடலை நீர் ஏன் அங்ஙனமே வைத்திருத்தல் கூடாது? அதைக் கொண்டுபோய் இடுகாட்டில் இட்டவர் யார்? அங்ஙனம் இடுதல் கூடாது என நீர் தடுத்திருப்பின், அதை யாரேனும் உம்மை விட்டு அகற்றி இருப்பரோ? அதற்கு உடன்பட்டிருந்தவர் நீரே யல்லரோ? அன்றி, உயிரைக் கருதியாயின், அவ்வுயிர் எங்ஙனம் இவ்வுடலில் புகுந்தது? அஃது எவ்வாறு எங்கே உறைகிறது? எப்படி உடலைவிட்டு நீங்குகிறது? என்பதைத் தெளிதற்கு ஒருவராலும் இயலுவதில்லையே. தெரியாத விஷயத்தைப்பற்றி நீர் வருந்துதல் யாங்ஙனம்? அன்றியும் உமது கவலை உயிரைப் பற்றியதாயின், எந்த உயிருக்கும் நீர் இரங்கல் வேண்டும்.

"பூங்கொடி நல்லாய்! பொருந்தாது செய்தனை;
உடற் கழுதனையோ? உயிர்க்கழு தனையோ?
உடற்கழு தனையே லுன்மகன் றன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே?
உயிர்க்கழு தனையே லுயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையாற் றெரிந்துணர் வரிய
தவ்வுயிர்க் கன்பினை யாயி னுய்தொடி
எவ்வுயிர்க் காயினு மிரங்கல் வேண்டும்"

—மணிமேகலை

ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொருளை நாடிச் சந்தையில் வந்து திரளுதல் போன்று, நாம் இவ்வுலகில் வந்து தோன்றுகின்றோம். அவரவர் கருதிய காரியம் முடிந்துவிடின், வந்த வழியே போக வேண்டியதுதானே? ஒருவரை யொருவர் எதிர் பார்த்தல் கூடுமோ? முற்பிறவியில் எத்தனைப் பேர் உமக்குப் புதல்வராய்த் தோன்றினரோ! நீர் எத்தனைப் பேருக்கு அன்னையராக இருந்தீரோ! இனி உமக்கு எத்தனைப் பிறவிகள் உண்டோ! அவற்றை யாரறிவார்? எங்ஙனமேனும் அவர் சென்ற வழியே நாமும் செல்லுங்காலம் ஒன்று உளதன்றோ! அதுகாறும் நாம் தெளிந்திருத்தல் வேண்டுமேயன்றி, வருந்துவதில் பயன் யாது? அவரவர் இயற்றிய நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களைத் துய்த்தல் கண்கூடு. இரு பிறவிகளுக்கு முன்பு, சினத்தினால் மடைத்தொழிலாளனை வெட்டி வீழ்த்திய தீவினையே, உமது மகன், சென்ற பிறவியில் திட்டிவிடத்தினால் இறக்கவும் இப்பிறவியில் காஞ்சனனால் வெட்டுண்ணவும் செய்தது! இதைத் தடுக்க யாரால் கூடும்?

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

உமது மகன் இறந்த துன்பத்தைப் பொறுது மருந்தினால் எனக்குப் பித்தேற்றினீர்! மறு பிறப் புணர்ந்த மகிமை என் அறிவை மயக்கிலது! கல்லாக் கயவன் ஒருவனை என்பால் ஏவினீர்! வேற்றுருக் கொள்ளும் மந்திரம் என்னை ஆணுருவாக்கியது. பொய்யான நோய் ஒன்றை என்மாட்டுச் சாத்திப் புழுக்கறையில் அடைத்தீர்! ஊணொழி மந்திரம் என்னை அத்துன்பத்தினின்றும் தப்புவித்தது.

நீர் சென்ற பிறவியில் எனக்குக் கணவராயிருந்த உதயகுமரனின் தாயாராதலின் இந்நிலையில் உம்மை விட்டுச் செல்ல என் நெஞ்சம் ஒருப்பட்டிலது. உமது தீவினையைப் போக்கி உம்மை நல்வழிப் படுத்தற் பொருட்டே நீர் இயற்றிய துன்பங்கள் பலவற்றையும் தாங்கிக் கொண்டு யான் இவணிருந்தேன். இன்றேல், யான் எப்போதோ வேற்றுருக் கொண்டு ஆகாய வழியே சென்றிருப்பேன். இவ்வுலகில் மக்களைத் தீவினைக்குள்ளாக்குவன கொலை, களவு, பொய், காமம், கள் என்பனவே. நாம் சீலமடைய வேண்டுமாயின் அவைகளை அறவே ஒழித்தல் நலம். அவர்களே மக்களுள் சிறந்தோர்களாவார்கள்" எனக் கூறினார். இக் கருணை நிறைந்த வார்த்தைகள் அரசியின் மனத்தைத் தெளிவித்தன. மணிமேகலையாரின் உயர் நிலைகள் யாவும் அவளுக்கு நன்கு புலனாயின. அவரைத் தெய்வமெனவே கருதினாள். அவள் உடல் அன்னையார் திருவடியில் சாய்ந்தது. அவர்

பாதங்களைக்கரங்களால் பற்றிக்கொண்டு இறைஞ்சி னாள். அச்செய்கை அன்னையாரைப் பெரிதும் வருத்திற்று. "அன்னையாரே, நீர் இங்ஙனம் செய் தல் கூடாது. நீர் முற்பிறவியில் எனக்கு மாமி யாராக இருந்தீர். இப்போதோ அரசியராக இருக்கின்றீர். அத்தகைய நீர் சிறியவளாகிய என்னை வணங்குதல் தகுதியுடையதன்று" எனச் சொல்லி, அன்னையார் அவளை அன்புடன் வணங் கித் தொழுதார்.

ஈண்டு நம் அன்னையார் பெருந்தன்மைகளைச் சிறிது நோக்கலாம்: உதயகுமரனுக்கு அவர் ஒரு கெடுதியும் செய்தாரில்லை. அவன் தீயசெயலே அவனைக் கொன்றது. அதன்பொருட்டு அன்னை-யாரை அரசன் சிறையிட்டதே பொருத்தமுடைய தன்று. அதுவே சான்றோரை வருத்தத் தக்க தாகும். அத்துடனும் அவர் துன்பம் நிறுத்தப் படவில்லை. அரசி அவருக்கிழைத்த கொடுமை களோ அளவிறந்தன. யாவற்றையும் அவர் பெருந்தன்மை பொறுத்தது. இஃதன்றோ பொறு மையெனக் கூறப்படுவது! தக்க வன்மையற்றவர் தாழ்ந்திருத்தல் பெருங் காரியமன்று! பலவன்மை வாய்ந்த ஒருவர் அடங்கி இருத்தலன்றோ பெருந் தன்மையாகும்! இத்துணையரல்லரோ உலகில் புகழப்படுவர்! அன்னையாருக்கு இத்துணைப் பொறுமை உண்டானதற்குக் காரணம், இராஜமா தேவியை நல்வழிப்படுத்த வேண்டுமென்னும் எண் ணமே யன்றோ! இத்தாய்ம்மையைத் தன்னலங் கருதாத் தகைமை எனக் கூறுது, வேறென்ன வென்று செப்புவது!

மணிமேகலையாரின் மாண்பு

மணிமேகலையார் சிறையிலகப்பட்டதை அறிந்த அந்நாட்டினருள் சிலர் அரசரையும் அரசியையும் குறை கூறினர்; சிலர் மணிமேகலையின்-மாட்டுக் குற்றத்தை ஏற்றினர். 'மகன் இறந்த துக்கத்தினாலேயே அரசன் அப்பெண்ணைச் சிறையிவிட்டான். இஃது இயல்பாக உண்டாகக் கூடியது-தானே' என்பது சிலர் கருத்து. "அரசி அப்பெண்ணைக் கொல்லும்படி கேட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்யாமையே அவள் பெருந்தன்மையைக் காட்டுகின்றது" என்றனர் சிலர். இன்னும் சிலர் "இல்லை, தன் மகன் செய்த தீவினை வெளிப்படக் கூடாதென்றன்றோ அரசன் அவளைச் சிறையிவிட்டான்" என மொழிந்தனர். "இளவரசனின் உயிர் நீங்கியதற்குக் காரணம் மணிமேகலையல்லள். அவன் காஞ்சனனால் கொலையுண்டானும். அதற்கு அப்பெண் என் செய்வாள் பாவம்! அவள் ஒரு தரும தேவதையைப் போன்று பிச்சைப் பாத்திரத்தைக் கையிலேந்தி ஏழைகளுக்கு உணவு ஊட்டி வருகின்ருள். அவளை இத்துன்பங்களுக்கு ஆளாக்குதல் யாருக்கும் தகுதி யுடையதன்று! இக்குற்றம் யாரையும் விடாது! நம் நாட்டிற்கே நாசத்தை விளைவிக்கும்!" எனப் பகர்ந்தனர் சிலர். இங்ஙனம் பலபேர் பல முறைகளாகச் செப்பிக் கொண்டிருந்தனர். இஃது உலகம் பலவிதம் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெரிவித்தது.

உதயகுமரன் கொலையுண்டிறந்ததும் மணிமேகலை சிறைப்பட்டதும் சித்திராபதிக்கு எட்டியது. மணிமேகலையார் வீணே சிறைவாசம் செய்தல் அவளுக்குப் பொறுக்கக் கூடவில்லை. அவரைத்

தன்பால் கொணர்ந்து பொருள் திரட்டவேண்டு மென்னும் எண்ணம் அவளுக்குத் தோன்றிற்று. மணிமேகலையாரின் குண நலங்களை அடிக்கடிக் கேட்டும், அவர் அறச்செயல்களைப் பார்த் திருந்தும் அவள் அறிவு நல்வழியில் படரவில்லை. அஃது அவள் தீவினையே போலும்! அவள் இராஜமாதேவியிடம் சென்று "அன்னையாரே, கோவலன் இறந்ததை அறிந்த மாதவி தன் பரத் தமைத் தொழிலைவிட்டு தவச்சாலையை அடைந் தாள். பலரும் புகழ அரங்கத்தில் ஆடும் வன்மை வாய்ந்த அவளுடைய மகள், பிச்சைப் பாத்திர மேந்தி வீடு தோறும் பிச்சை ஏற்கின்ருள். அவ்வன் னத்தை ஏழைகளுக்கு உண்பித்து உவக்கின்ரு ளாம். அவ்வமயம் பலபேர் அவளைப் பின் தொடரு கின்றனராம். இவை யாவருக்கும் நகைப்பிற்கிடமா யுள்ளன. இம்மணிமேகலையின் தீயசெயல் உதய குமரன் உயிரை உண்டு விட்டது. இன்னும் என்ன கெடுதிக்காக இவள் இவ்வேடந்தாங்கித் திரிகின் ருளோ அறியேன்! நம் நாட்டில் இந்திர விழாக் கொண்டாட வில்லையேல், மணிமேகலா தெய்வத் தின் சாபம் இந்நகரத்தைக் கடலுண்ணுமாறு செய் யும் என்னும் தெய்வ வாக்கு ஒன்று உண்டு. மணிமேகலையென்னும் பெயரையுடைய இப்பெண் ணிற்குத் தீங்கிழைக்கின் அத்தெய்வம் சீறி நம் நாட்டிற்கு என்ன தீமை புரியுமோ என அஞ்சு கிறேன்! அச்சிறு பெண் நல்லவள்தான்; ஆனல் அவளைத் திருத்துபவர் இல்லாமையின் அவள் குல முறையை விட்டு அறநெறியில் படருகிறேன் எனப் புறப்பட்டு விட்டாள். ஆதலின், நற்குண முடைய அந்நாடகக் கணிகையை என்னுடன்

போதருமாறு கட்டளை இடுவீராக" என இறைஞ்சினாள்.

மணிமேகலையாரின் மாண்பை நன்குணர்ந்த இராஜமாதேவி சித்திராபதியின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. "சித்திராபதி, வஞ்சனையில் திரட்டும் பொருளையே பெரிதெனக் கருதும் உங்கள் மரபுத் தொழிலை அவள் பெரிதும் வெறுத்தாள்; அறிவுடையோர் உங்கள் மரபைப் பழிப்பது கண்கூடு! பொய்ம்மையையே பொருளாகக் கொண்டவர்கள் நீங்கள். அதைத் தூய்மையற்ற செய்கை என்பதை மணிமேகலை நன்குணர்ந்துள்ளாள். அதை வெறுத்தே அறநெறியில் படர்ந்து பெருமை பெற்றாள். இத்தன்மை வாய்ந்த அவள் மனம் இனி உன்னுடன் போதர எங்ஙனம் இடந்தரும்! அவள் சார்பாக நீ புரியும் முயற்சிகள் யாவும் பயனற்றனவே!" என அவளுக்குப் புத்தி புகட்டினாள்.

மணிமேகலையாரின் சிறையிருப்பு மாதவியின் நெஞ்சைக் கலக்கிற்று. அவள் "அந்தோ! மகளே, உனக்கு இத்துன்பமா நேரிடுதல் வேண்டும்! நாம் அடைந்த வருத்தங்கள் சாலாவோ! ஒருவர் மேன்மேலும் இன்னல்களையே அனுபவித்தல் வேண்டும் என்பது எந்தச் சாத்திரத்தின் முடிவு! உதயகுமரனை நீயேன் கொன்றிருக்கப் போகின்றனை! நீ உயிர்களைத் துன்புறுத்த ஒருப்படமாட்டாய் என்பதை யான் நன்கு உணர்வேன். அதை உலகம் எங்ஙனம் அறியும்? அறம் செய்யச் சென்றவளுக்கா இந்தத்தண்டனை!" என மனங் கசிந்துருகினாள். பின்பு சுதமதியுடன் அறவணவடிகளைத்

துணையாகக் கொண்டு தன் மகளைச் சிறை மீட்குமாறு கேட்டற் பொருட்டு, மாதவி இராஜமாதேவியிடம் செல்ல நேர்ந்தது. அரசி அவர்களை அன்புடன் வரவேற்று அறவணவடிகளைத் தொழுது அவரிடம் ஆசி பெற்றாள். மணிமேகலையாரும் அறவணவடிகளை வணங்கினார். அறவணவடிகள் அறங்கள் பலவற்றை அவர்களுக்கு உபதேசித்தார். மணிமேகலையார் இராஜமாதேவி முதலியோரை நோக்கி, "நீங்கள் இப்பெரியார் உபதேசித்த மொழிகளை மறத்தல் கூடாது; அவற்றின் படியே ஒழுகல் வேண்டும்; அப்போதுதான் நீங்கள் பிறந்ததன் பயனை எய்தலாம். யான் இனி இங்கிருப்பின் உதயகுமரனுக்கு எமனாய் இருந்தவள் யானே எனப் பலரும் என்னைப் பழிப்பர். ஆதலின் யான் செல்லவேண்டிய சில இடங்களுக்குச் சென்று நல்லறஞ் செய்ய நினைத்துள்ளேன். எனக்கு இன்னலுண்டாகுமோ என நீங்கள் எண்ணற்க!" எனச் செப்பி, ஆதித்தன் மறைந்தவுடன் அவண்விட்டு அகன்றார்; உலகவறவி சாம்பாதிக் கடவுள், கந்திற்பாவை முதலியவற்றை வலங்கொண்டு வணங்கினார்; அவர் உடல் ஆகாய வழியே செல்லத் தொடங்கிற்று; பின்பு அவர் இந்திரவரசரின் வழித்தோன்றலாகும் புண்ணியவரசன் நகர்ப் புறத்தேயுள்ள சோலையொன்றில் இறங்கி இளைப்பாறி இருந்தார்.

அச்சோலை கண்டோரை வியப்பிலாழ்த்தும் அழகு பெற்றிருந்தது. ஆங்காங்கு மலர்ந்த கொடிகள் பந்தரெனப் பின்னிக் கொண்டிருந்தன. அவற்றின் கீழ்ப்பளிக்குக் கற்களினாலாய வேதிகை-

கள் காணப்பட்டன. உண்ணுதற்கேற்ற பழங்கள் பல கனிந்து தொங்கின. அவற்றிலிருந்து கசியும் தேன் நிலத்தைச் சேருக்கியது. மரங்கள் பல தழைத்து மக்களுக்குத் தங்குதற்குப் போதிய நிழலைத் தந்தன. தெளிந்த நீரையுடைய தடாகங்களும் அவணிருந்தன. முனிவர் பலர் அவண் தவஞ் செய்து கொண்டிருந்தனர். அச்சோலை மணி-மேகலையாருக்குப் பெரிதும் மகிழ்வை யூட்டிற்று. அதற்கு உரிமையாளர் யார் என்பதை அறிய அவர் மனம் விழைந்தது. ஆதலின், அவர் அவணிருந்த முனிவர் ஒருவரை வினவினர்.

முனிவர் அன்னையாரை நோக்கி "அம்மையே! இந்நகருக்கு **நாகபுரம்** என்பது பெயர். இதைப் புண்ணியராசன் என்பவன் ஒருவன் ஆட்சி புரிகின்றான். அவன் தோன்றியதிலிருந்து இந்நாட்டிற்கு யாதொரு குறைவுமிலது. மாரி வளங்குன்றியதில்லை. சோலைகளும் நிலங்களும் தம் வளத்தால் மக்களுக்கு மகிழ்வூட்டுகின்றன. மக்கள் யாதொரு பிணியுமின்றி இன்புற்றிருக்கின்றார்கள்" என இயம்பினர்.

அவ்வமயத்தில் அந்நாட்டு மன்னனான புண்ணியராசன் தன் இல்லக்கிழத்தியோடு அச்சோலைக்கு வந்திருந்தான். **தருமசாவகர்** என்னும் முனிவர் அரசனுக்குத் தருமோபதேசம் செய்து கொண்டிருந்தார். பின்பு புண்ணியராசன் தன் சோலையைச் சுற்றி நோக்கும்போது, அவன் கண்கள் அன்னை மணிமேகலையாரைக் கண்டன.

அரசன் முனிவரை நோக்கி, "இவள் அழகோ கண்களைக் கவருகின்றது! வயதோ மிக்க இளமை! உடலோ பூங்கொத்தெனத் துவளு கின்றது! விழிகளோ உயர்ஞானத்தைக் காலு கின்றன! கரமோ பிச்சைப்பாத்திரத்தைத் தாங்கி யுள்ளது! வாயோ அறவார்த்தைகளைப் பகரு கின்றது! இத்தகைய இப்பெண் யார்? எங்கிருந்து இங்குப் போந்தனள்?" என வினவினன். அவர் கள் அருகில் நின்ற ஒருவன், "இவள் அருந்திறன்-களைக் காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள அறவணவடி கள் கூறக் கேட்டுள்ளேன். இவளுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமிலர்! இவள் தெய்வத் தன்மை பொருந்தியவள்!" என மணிமேகலையார் மாண்புகள் யாவற்றையும் அரசனுக்குச் செப்பினன்.

சென்ற பிறவியில் அமுத சுரபியை ஏந்தி ஆதுலர்க்கு உணவளித்த ஆபுத்திரனே, புண்ணிய வரசனக நாகபுரத்தில் அவதரித்துள்ளான் என் பதை மணிமேகலையார் அறிவார். ஆதலின், அவர் பார்வை அரசன் மாட்டுப் பாய்ந்தது. அவன் முக வொளி தருமத்தைக் காலுவதை உணர்ந்த அவர், இவன்தான் ஆபுத்திரன் ஆதல் வேண்டும் எனத் தெள்ளிதின் உணர்ந்து கொண்டார். ஆகவே அவர் அரசனை விளித்து, "இப்பாத்திரம் முற்பிறவி யில் உமது கையிலிருந்த ஒன்றேயாகும்! அஃதே இப் போது என் கரத்தை வந்தடைந்தது! உமது செல்வ மயக்கம் இதை மறக்கச் செய்தது போலும்! என்ன பரிதாபம்! ஒருவர் நன்னிலையை அடைதல் மிக அரிது! அதை இழத்தல் மிக எளிது! சிறிது மேல்-நிலையைச் சார்ந்தவர் அதினின்றும் உயர முயலு-

தல் வேண்டுமேயன்றிக் கீழ் நோக்கக் கருதுதல் கூடாது! ஆதலின் நீர் இப்போதே மணி பல்லவஞ் சென்று, புத்த பீடிகையைத் தரிசித்தல் வேண்டும். அஃது உமது பழம்பிறப்பின் வரலாற்றை உணர்த்தும். அதுவே உமது உயிர்க்குறுதியை அளிக்க வல்லது'' என இயம்பி; அவர் ஆகாயத்திற் கிளம்பி மணிபல்லவத்தை அடைந்தார்; அவர் கண்கள் புத்தபீடிகையைத் தரிசித்தன; அவர் உடல் அதை வலம் வந்தது; மறுபடியும் தம் பழம்பிறப்பின் வரலாற்றைத் தெள்ளிதின் உணர்ந்தார். அஃது அவருக்கு மகிழ்வை யூட்டியது. பின்பு புண்ணிய வரசன் மணி பல்லவத்தை யடைந்தான். தீவ திலகையால் அவனுடைய முற்பிறவியின் உடல் அவனுக்குக் காட்டப்பட்டது. தன்னிடம் வந்து உண்பவர் ஒருவருமின்மையால், அமுதசுரபியைப் பொய்கையில் எறிந்து, அவன் உயிர் துறந்ததை அவனுக்குத் தீவதிலகை தெரிவித்தாள். அவை யாவும் அவ்வரசனுக்குத் துன்பத்தை யூட்டின. மணிமேகலையாரின் நீதி மொழிகள் அவனைத் தேற்றின. அவன் தன் நாட்டிற்குப் போய்ச் சேர்ந்தான்.

காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டதையும், மாதவியும் சுதமதியும் வஞ்சி நகரத்திலிருப்பதையும் மணிமேகலையார் தீவதிலகையால் அறிந்தார்; உடனே அவர் ஆகாயத்திற் கிளம்பி வஞ்சிநகரை யடைந்தார். கண்ணகியையும் கோவலனையும் தரிசிக்க அவர் மனம் விழைந்தது. கண்ணகியின் படிவத்தை அவர் வலம் வந்து வணங்கினர். "ஓ! என் அருமை அன்னையாரே! உமது தெய்வத் தன்மைகளை யான் நன்குணர்ந்துள்ளேன். ஆயி-

னும் அதைப்பற்றிய சில ஐயங்கள் எனக்குத் தோன்றியுள்ளன. அவற்றைத் தெளிவித்தல் உமது கடமையாகும். உம் கணவர் உயிர் துறந்ததை அறிந்த நீர் உடன் இறவாமலும், கைம்மை நோன்பை மேற்கொள்ளாமலும், சினத்தினல் மதுரையை அழித்ததற்குக் காரணம் கூறியருளல் வேண்டும்'' என இறைஞ்சினர். இதைச் செவி யேற்ற கண்ணகியார், "என் கண்ணினுஞ் சிறந்த கண்மணியே, என் இல்லத்தலைவன் கொலையுண்டு இறந்த துன்பத்தைப் பொருமல் மதுரையை யான் எரிக்கத் தொடங்கினேன். அவ்வமயம் மதுராபதி என்னும் அந்நகரத் தெய்வம் என்முன் தோன்றி, "இத்துன்பம் உங்களுக்கு நேர்ந்தது நீங்கள் முற் பிறவியில் செய்த தீவினையே'' எனக் கூறிற்று. அத்தீவினை வந்தடைந்ததற்குக் காரணத்தையும் அத்தெய்வத்தால் யான் நன்கு தெரிந்துகொண் டேன். அதன் பின்னும் என் சினம் அடங்கிற்றி லது. ஆதலின் அம்மதுரையை எரித்தேன். நாங்கள் முன் பிழைத்த நல்வினையே என் கணவரையும் என்னையும் தேவராக்கியது. இப்புண்ணிய முடிவில் சினத்தினலாய பாவத்தையும் யான் துய்த்தல் கூடும்! இங்ஙனமே பல பிறவிகளெடுத்து இறுதி யில் தருமோபதேசத்தால் நிருவாணமடைவேன். நீ இந்நகரத்துச் சமயவாதிகள் பலருடைய கொள்கைகளையும் கேட்பாய். அவற்றுள் ஒன்றும் உனக்கு உண்மையெனத் தோன்ருமையின் பெளத்த சமயத்தை மேற்கொண்டு ஒழுகுவை'' எனச் செப்பினர்.

அன்னையார் கண்ணகியாரை வணங்கி, ஒரு முனிவர் வேடந்தாங்கி வஞ்சியம்பதியை அடைந்தார். மதக்கோட்பாடுகள் பலவற்றையும் அறிய அவருக்கு விருப்புண்டாயிற்று. அங்ஙனமே அறிவுடையோர் அநேகரைக் கேட்டு விஷயங்கள் பலவற்றையும் அறிந்து கொண்டார்.

மாதவி, சுதமதி, அறவணவடிகள் இவர்களைக் காண அன்னையார் மனம் விழைந்தது; வஞ்சி நகரத்தின் உட்புறத்தில் நுழைந்தார். அவணுள்ள வீதிகளும் அழகிய இடங்கள் பலவும் அவருக்கு மகிழ்வை யூட்டின. அங்கு முனிவர் தவச்சாலை ஒன்றைச் சந்திக்க நேர்ந்தது. அவர் அத்தவச்சாலையில் மாசாத்துவானைக் கண்டு பணிந்தார். தாம் புண்ணியராசனைச் சந்தித்ததிலிருந்து, அவண் வந்து அடைந்தது வரையும் நிகழ்ந்தவற்றை அன்னையார் விளக்கமாக அவனுக்கு எடுத்தியம்பினர். மாசாத்துவான் அன்னையாரைப் பார்த்து, “பெரும் புண்ணியத்தினலேயே உன்னை யான் காணக் கிடைத்தது. உனக்குத் தருமோபதேசம் செய்தற்குத் தக்க இடம் காஞ்சிமாநகரமே எனக்கருதி, அறவணவடிகள் அங்குச் சென்றுள்ளார்கள். மாதவியும் சுதமதியும் அவண் ஏகினர். காஞ்சி நகரம் மழையின்றிப் பஞ்சத்தினல் துன்புற்றுள்ளது. உணவின்றிப் பல்லுயிர்கள் இறந்தன. ஐயமிடுவோரைக் காணுமையின் அவணிருந்த முனிவர் பலர் இவண் போந்தனர். அங்குச் சென்று உணவின்றி வருந்தும் உயிர்களைக் காத்தல் உன் கடமை-யாகும். அப்போதுதான் நீ பெற்ற பாத்திரத்தின் பெருமை விளங்கும்! அதனலாய பயனை மக்கள்

அடைதற்கு இதுதான் தக்க காலம்! இக்காலத்தை வீணில் கழித்தல் வேண்டாம்!'' எனப் பகர்ந்தான்.

அவன் வார்த்தைகள், மணிமேகலையாருக்குச் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தது போலிருந்தன. 'மக்கள் பசிப்பிணியை நீக்கி அவர்கள் மலர்ந்தமுகத்தை என்று காண்போம்! இவ் வமுத சுரபிக்குத் தக்கவேலை எப்போது கிடைக்கும்! நாம் பயனுற்ற காரியத்தைப் புரிதல் என்று!' என்னும் சிந்தனை கொண்டிருந்த அன்னையாரின் மனத்தை மாசாத்துவான் வார்த்தைகள் தெளிவித்தன. 'அந்தோ! அவ்வெளிய மக்களை யான் என்று காண்பேன்! அவர்கள் பசிப்பிணியை உடனே சென்று யான் நீக்குதல் வேண்டும்!' எனக் கருதி, மாசாத்துவானை வணங்கி, அமுதசுரபியுடன் ஆகாய வழியே சென்று, காஞ்சி நகரத்திலுள்ள சோலை ஒன்றில் தங்கினர். அதை அவ்வூர் அரசன் அறிந்தான். வறுமையால் வருந்திக்கொண்டிருந்த அவனுக்கு, முன்னமே தெய்வமொன்று மணிமேகலையார் வருகையைத் தெரிவித்திருந்தது. அவர் தங்குதற்கு அழகிய சோலை ஒன்றை அவன் ஏற்படுத்தியிருந்தான். அரசன் வேண்டுகோளினுல் அன்னையார் மணிபல்லவம் போன்ற அச்சோலையை அடைந்தார். புத்தபீடிகை யொன்று அவண் நிறுவப்பட்டது. தீவதிலகையையும், மணிமேகலா தெய்வத்தையும் வழிபடுதற்குரிய கோயிலொன்றை அன்னையார் அங்கு அமைத்தார். நித்திய பூசையும், திருவிழாக்களும் நடைபெற்றன. அவர் அமுதசுரபியை அந்தப் புத்த பீடிகையில் வைத்து வந்தித்து, அப்பாத்

திரத்தைத் தன்னலமற்ற தம் கரத்திற்றாங்கி னார். உடனே அவர் நா அருமைச் சொற்கள் பலவற்றை வழங்கத் தொடங்கிற்று. அவ்வார்த்தைகள் ஒன்றின்பின்ஒன்றாக உருக் கொண்டெழுந்தன; அவை இனிமையையும் இரக்கத்தையும் தன்னகத்தே கொண்டிருந்தன. "பசியால் வாடும் மக்களே வாருங்கள்! உங்கள் உடலை ஊட்டும் உணவு இங்குள்ளது! வயிறார உண்டு உள்ளங் குளிருங்கள்! தேக வன்மையைப் பெறுங்கள்! உலகில் இயற்ற வேண்டிய செயல்களில் ஊக்கங் கொள்ளுங்கள்! நற்காரியங்களை நாடுங்கள்! நல்லுபதேசத்தைக் கேளுங்கள்! நல்லாரோடு சேர்ந்து வாழுங்கள்! அவற்றால் உங்கள் உயிரைத் தூய்மைப் படுத்திப் பிறவியைப் போக்கிக் கொள்ளுங்கள்! இவை யாவற்றிற்கும் உணவன்றோ இன்றியமையாதது! அஃது இவண் உள்ளது! அஃது உண்ண உண்ணக் குறையாது! உங்களுக்கு வேண்டிய அளவு புசிக்கலாம்! மிக்க சுவை உள்ளது! தெய்வத்தால் அருளப்பட்டது! காணார், கேளார், கான்முடப்பட்டோர், பேணுநரில்லோர், பிணி நடுக்குற்றோர் யாவரையும் உடன் கொணருங்கள்" என உயர்ந்த ஒலியில் அழைத்தார். அவ்வொலி பசிப்பிணியினால் பரிதவித்துக் கொண்டிருந்த மக்களின் செவியில் நுழைந்தது. முதன் முதலில் அம்மக்கள் அவ்வொலியை நம்பினார்களில்லை; அஃதோர் ஏமாற்றம் என்பதே அவர்கள் எண்ணம். ஆனால் பின்னும் பின்னும் அவ்வொலி அவர்கள் செவிகளைச் செவிடுபடச் செய்தது. யாவரும் ஒலி உண்டாகும் திசையை நோக்கினர்.

அவ்வொலி அவர்களுக்குப் புத்துயிரளித்தது. அதை அவர்கள் ஒரு தெய்வ வாக்கெனக் கருதி ஞர்கள். "அந்தோ! இவ்வார்த்தைகள் உண்மையுடையனவா? நமக்கு உணவு கிடைக்குமா? ஊசலாடுகின்ற நம் உயிர் நிலைநிற்குமா? உடல் உரம் பெறுமா? நம் மன்னன் வளம் பெறுவானு? அவன் கொற்றம் நீடூழி வாழ்க!" எனப் பேசிக் கொண்டே ஒருவர் பின் ஒருவராக விரைந்து சென்றனர். புற்றிலிருந்து புறப்படும் ஈசெல் போன்று, மக்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்தார்கள். அங்கு வந்தவர்களின் எண்ணிக்கை அளவிடற்பாலதன்று. அக்கூட்டங்கள் எவணிருந்து திரளுகின்றன என்பதை அறிய ஒருவராலும் இயலவில்லை.

அவர்களைக் காணக் காணத் தேவியாரின் அகங்களித்தது. அவ்வமயம் அவருக்கிருந்த ஆனந்தம், பிறவித் துன்பம் நீங்கி அழியா வீட்டின் பேற்றை அடைந்த ஆன்மாவிற்கும் இருந்திருக்குமோ என்பது ஐயமே! தம்மைத்தாம் அறியாத பெரு மகிழ்வு அவருக்குண்டாயிற்று. அன்றே அவர் பிறந்ததன் பயனை யடைந்ததாகக் கருதினர்; அவர் உடல் பூரித்தது; கண்கள் ஒளிர்ந்தன; முகம் மலர்ந்தது; இம்முறையில் அவர் சீரிய தரும தேவதையென நின்றனர். அவர் கைகள் உணவை எடுத்தெடுத்து எழைகளுக்கு ஊட்டின. இவ்வோயாச் செயலினல் அன்னையார் உடல் பெரிதும் களைப்புற்றது. ஆயினும் அதை அவர் சிறிதும் பாராட்டினர் இல்லை. தன்னலங் கருதாத தகைமையர், தம் தேக சுகத்தைக் கருதிப் பிறருக்கு உதவி

செய்வதிலிருந்து பின் வாங்குவரோ! உண்டவர் மகிழ்வை என்னென்று கூறுவது! விழி பெற்ற பிறவிக் குருடனும், அறிவுள்ள மகவைப் பெற்ற மலடியும், பெரு நிதியைப் பெற்ற நித்தியதரித்திரனும் அவர்களுக்கு ஒப்பாகார். யாவர் முகத்திலும் இன்பம் தவழ்ந்தது. பசிப்பிணி பறந்தோடியது. வறுமையுற்றோர் வாழ்த்துக் கூறினர். அன்னையார் உணவூட்டல் தக்க காலத்தில் நலம் பெற்றது. அவர் அறம் எல்லாருக்கும் வழங்கப்பட்டது. அஃது எற்றத்தாழ்வைப் பார்த்திலது. எதிர் உதவியைக் கருதிச் செய்யும் காரியமன்றே இது! பயனைக் கருதாதியற்றும் செயல் பண்படையுமன்றோ! பசிப்பிணியுற்றோர் இனிய முகத்தைக் காண மணிமேகலையார் பெரிதும் விரும்பினர்; அதுவே தமக்கு உணவும், உடையும், இன்பமும் எனக் கருதினர்.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு''

என யாவரும் புகழ்ந்தனர்.

இப்புண்ணியச் செய்கையினாலும், தருமதேவதையாகிய மணிமேகலையாரின் சேர்க்கையினாலும் அந்நகரில் மழை பெய்யத் தொடங்கிற்று. எங்கும் வளம் பெருகிற்று. நல்லோர் வரவு நாட்டையும், மக்களையும் நலம்படுத்தல் மரபன்றோ! பின்பு மணிமேகலையார், அங்கு எழுந்தருளியிருந்த மாதவி, சுதமதி, அறவணவடிகள் முதலியவர்களைக் கண்டு மகிழ்ந்தார்; அறவணவடிகளைத் தமக்கு

உண்மைப் பொருள் உணர்த்துமாறு இறைஞ்சினார்.

அவ்வறவணவடிகள் முதலில் பிரத்தியக்கம், அநுமானம் என்னும் இரண்டு அளவைகளையும் விளங்கக் கூறினார். பின்பு மணிமேகலையார் அறவணவடிகளைச் சரணாகதியடைய, அவர் பௌத்த தருமத்தை உபதேசித்தார். அஃது அவர் மனத்தில் நன்கு பதிந்தது. அதன்படியே தம் பிறவித்துன்பம் நீங்க அவர் அந்நகரத்திலேயே நோற்றுக் கொண்டிருந்தார்.

ஓரறிவு முதல் ஐயறிவீறாக உள்ள உயிர்கள் ஒவ்வொன்றும் இன்பத்தையே நாடி நிற்கின்றதென்பது உலகம் அறிந்ததே. அவ்வின்பம் அன்பையே அடிக்களனாகக் கொண்டுள்ளது. ஏன்? தாம் அன்பு செலுத்தும் இடங்கட்கு நன்மை உண்டாகுமேல், தம்மை அறியாமலே இன்பம் எழுகின்றது. அவ்வன்பு பெரும்பாலோர்க்குத் தம் மாட்டும், தமக்குத் தொடர்புடைய சுற்றத்தார் மாட்டும் தோன்றக் காண்கின்றோம். அது சிறிது எட்டிய உறவினரிடமும் காணப்படுதல் மிக்க அருமையே. நமக்கு அன்பற்றவரின் நலங் கண்டுழி இன்புறாவிடினும், பொறாமை கொள்ளாமலிருத்தல் எத்துணையோ சிறப்புடையதாகும். அச்செயலை மேற்கொள்ளற்கும் சிலர் இயல்பு இடந்தருதல் இல்லை. பொறாமையற்ற இவ்வியல்பு பெற்றவரையே

சீரியர் என உலகம் போற்றும். அங்ஙனமாயின் தம்மை வருத்திக்கொண்டேனும் மற்றோர்க்கு நலம் புரிந்து, அதனால் அவர்களுறும் இன்பத்தைக் கண்டு எல்லையற்ற மகிழ்வெய்தும் பெருந்தகையாளரை என்னென்றியம்புவது? உலக இயல்பையும், உயிரின் தத்துவத்தையும் ஆராய்ந்தறிந்தவர்களுக்கன்றி இது கைகூடுமோ? அவர்களைத் தெய்வநிலை வாய்ந்தவர்கள் எனக் கூறுதற்குத் தடையாது? இத்தெய்வநிலை வாய்ந்தவரை உலகம் வணங்கி நிற்குமன்றோ? இங்ஙனம் வழிபாட்டிற்கு உரியவருள் தலை சிறந்தவர் நம் மணிமேகலையாராவார். இதை அவர் வாழ்க்கை நிலையே தெளிவுபடுத்துகின்றது. ஆதலின், தன்னலங்கருதாத இத்துணைத் தையலரை வழிபட்டு நாமும் பிறர் நலத்தையே பேணும் பெற்றியில் தாளூன்றி நிற்போமாக.

நவயுவன் பிரஸ்,
5, சுங்குராம செட்டித் தெரு,
ஜி. டி. சென்னை.

PRINTED AT NAVAYUVAN PRESS,
P. I. C. Q. H. M. S. 119B
FOR MODEL PUBLICATIONS
P. I. C. Q. H. M. S. 20A